d. No. M. 2569

1225

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 6

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 9

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1354 ஜமாதுல் ஆகிர் மீ, 1935 செப்டம்பர் மீ

1. அல்குர்ஆன் ... 321
2. நாயக வாக்கியம் ... 323
3. பிறமதத்தாரின் அறியாமை ... 325
4. காதியானீ அஹ்மதீ ... 327
5. தா. இ. - த்தின் தடுமாற்றகூற்று ... 331
6. காதியானீ மதக்கொள்கை சம்மந்தமாய் உலமாக்களின் பத்வாக்கள் ... 336
7. சத்திய இஸ்லாத்தின் அசத்தியப் பிரசாரம் 338
8. அசத்தியப் பிரசாரத்திலும் அசட்டுத்தனமா? 341
9. அல்லாஹு அக்பர் என்ற முழக்கம் என்னை முஸ்லிமாக்கி விட்டது ... 345
10. துற்விக்கு வேந்தன் துரும்பு ... 348
11. மதுரையில் ஹிஸ்புல்லாக்கள் ... 349
12. ஓர் இனிய கதை ... 356

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளி நாடுகளுக்கு	...	,,	4 0 0
தனிப் பிரதி	...	,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியற்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

208344

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 6	ஹிஜ்ரி 1354 ஜமாதுல் ஆகிர் மீ 1935 ௵ செப்டம்பர் மீ	இதழ் 9

அல் குர்ஆன்

நிச்சயமாக நாம் மரணமடைந்தோருக்கு உயிர் கொடுத்தெழுப்புவோம். இன்னும் அவர்கள் முற்கூட்டியே அனுப்பிவைத்த (அமல்) செய்கைகளை எழுதிக்கொண்டிருக்கிறோம். இன்னும் அவர்கள் (பிற்காலத்திற்காக) விட்டுச்சென்ற அடையாளங்களையும் (நாம் எழுதிக் கொள்ளுகிறோம்.) மேலும் நாம் ஒவ்வொரு வஸ்துவையும் கார்மானமாக்கப்பட்ட கிதாபில் (லவ்ஹுல் மஹ்பூலில்) பத்திரப்படுத்தியிருக்கிறோம். (அல்குர்ஆன்.)

அதாவது, மனிதனை மரணமடையச் செய்வதும் அவனுக்கு சுகம் வேதனையைக் கொடுப்பதும் தன் கைவசமிருப்பதாகவும், அவனே மானிடனைப்படைத்து அவனுடைய வாழ்நாளை முடிவுக்குக் கொண்டுவந்ததாயும், இன்னும் மரணமடைந்தோர் யாவரையும் கியாமத்—இறுதித் தீர்ப்புநாளில் எழுப்பி அவர்களின் அமல்களுக்குத் தக்கவாறு நற்கூலியோ, தண்டனையோ அளிக்கப்போவதாயும், அவர்கள் உலகில் புரிந்து மறுமைக்காக கட்டி சாதகமாக அனுப்பியுள்ள சகல வஸ்துக்களையும், இன்னும் அவர்கள் மரணமடையுங்கால் பிற்காலத்தின் அடையாளமாக விட்டு வந்தவைகளையும் நாம் 'லவ்ஹுல்மஹ்பூலில்' விபரமாக எழுதிவைத்திருக்கிறோம் என்றும் அல்லாஹ்தஆலா அறிவிக்கிறான் என்பதே.

தங்களைப்போல் அல்லாஹ்தஆலாவையும் சக்தியற்றவனெனக் கருதுபவர்கள், மானிடர் மரணமடைந்து மண்ணோடு மண்ணாகிவிட்ட பின் கியாம நாளில் எவ்வாறு எழுப்பப்படுவார்கள்? என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது அன்னாரின் முழு அறியாமையேயாகும். வானம் பூமி முதலிய சகல வஸ்துக்களையும் படைத்ததுடன் சகல விஷயங்களின்மீதும் சக்திபெற்றிருக்கும் அல்லாஹ்தஆலா அற்பமான ஓர் துளி இந்திரியத்தினின்று மகா மேலான மனிதனைப் படைத்திருக்கும்போது மரணமடைந்தவர்களை மறுமை நாளையில் உயிர்கொடுத்தெழுப்புவதற்கு சக்திபெற்றவனாக இருக்கவில்லையா? காய்ந்து வரண்டு போயிருந்த பூமிகளெல்லாம் மழை வருஷிப்பதுகொண்டு செழுமையுற்று பசுமையுடைய

புற்பூண்டுகளை வெளிப்படுத்துவதை நாம் பார்ப்பதேபோல் மறுமைநாளில் அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரம் மானிடர் உயிர்ப்பித்தெழும்புவார்கள்.

"இன்ன மனிதன் இவ்வாறான காரியத்தைச் செய்வான், இன்னதைச் செய்யமாட்டானென்று அல்லாஹ்தஆலா ஒவ்வொருவனுடைய விஷயத்தையும் முற்கூட்டியே எழுதிவைத்து விட்டானாகையால் இந்நிலைமையில் மானிடன் தனதிஷ்டத்திற்கு யாதொன்றையும் செய்துகொள்ள சக்தியற்றவனேபோலிருக்கிறான் ஆதலின் அவன் சம்மந்தமாய் ஆரம்பத்தில் எழுதிவைக்கப்பட்டவைகளே நடந்தீரும்; இடையில் இவனால் யாது செய்துகொள்ள முடியும்?" என்று சில குறுகிய நோக்குடையோர், அறிவு விசாலமற்றோர் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். வெளித்தோற்றத்தில் இஃதொரு வினாவாகத் தோன்றியபோதினும் உண்மையை உற்றுநோக்குவோமாயின் இஃதொரு அர்த்தமற்ற அறியாத்தனமான எண்ணமேயாகும் என்ற முடிவுக்கே வரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

அல்லாஹ் தஆலா ஒவ்வொரு மனிதனுக்கும் புத்தி விளக்கம், நல்லது .கெட்டதுகளுக்கிடையில் பாகுபாடு செய்து அதன்படி நடந்துகொள்ளும் தன்மை இவைகளை அளித்திருப்பதுடன் தனது நபிமார்கள் வேதங்கள் மூலம் இன்னின்ன காரியங்கள் நலவானவைகளென்றும், இன்னின்ன காரியங்கள் கெட்டவைகளென்றும், நல்ல வேலைகளைச் செய்வதுகொண்டு நற்பிரயோஜனம் கிட்டுமென்றும் தீயகாரியங்களைப் புரிவது கொண்டு தீங்கு நேரிடுமென்றும் அறிவித்துவிட்டபின் எவன் எதைச் செய்கிறானோ அததற்குள்ள பிரயோஜனங்களைத்தான் அவன் அடைவானேயன்றி இஃதல்லாமல் விதிப்பயனைத்தான் அடைவானென்று பொதுவாகக் கூறுவது எவ்வாறு பொருந்தும். உதாரணமாக, ஒரு எஜமான் தன் வேலைக்காரனிடம் 10 ரூபாய் கொடுத்து இதை உன் இஷ்டம்போல் செலவுசெய்துகொள்ளலாம். ஆனால் இதைக்கொண்டு அழகான இன்பமளிக்கும் மிட்டாய்களை வாங்கி நீ சாப்பிடுவதுடன் உன் சந்ததிகளுக்கும் அளிப்பாயாகில் யான் மிகமிக சந்தோஷமுள்ளவனாக இருப்பேன்; இவ்வாறன்றி கள் சாராயம் குடிப்பதிலோ அல்லது வேறு கெட்ட காரியங்களைச் செய்வதிலோ இதனைச் செலவிடுவாயாகில் உனக்கு தண்டனை கொடுப்பேன் என்று அறிவித்தபின் அந்த வேலைக்காரன், ஆரம்பத்தில் தன் எஜமான் கூறியதைமட்டும் எடுத்துக்கொண்டு தன் இஷ்டம்போல் அந்த 10 ரூபாயையும் துர்விநியோகஞ்செய்து விடுவானாகில் நிச்சயமாக அவன் தண்டனை அடைவதற்கு பாத்தியஸ்தனாகிவிடுகிறான். இதுவன்றி மற்றொரு உதாரணத்தையும் இங்கு விளக்குவாம்:- அல்லாஹ் தஆலா பொதுவாக மானிடன் பேசுவதற்காக நாவைக் கொடுத்திருக்கிறான். அத்துடன் நாம் சன்மார்க்க விஷயங்களை உபதேசித்தாலும் அல்லது நண்பர்களுக்கு நல்லபயன் தரும் யோசனைகளைக் கூறியபோதிலும் புண்ணியமடைவோமென்றும், காரணமின்றி மனிதர்களை ஏசிப் பேசி வம்புக்கிழுப்போமானாலும் அல்லது ஏழைகளின் மனதைப் புண்படுத்துவோமானாலும் குற்றவாளியாகக் கருதப்பட்டு தண்டனை அடைவோம் என்றும் அறிவித்திருக்கிறார். இவ்வாறான தீர்மானத்திற்குப்பின் நாம் ஒவ்வொரு நேரத்திலும் தூஷணையான வார்த்தைகளை நாவில் உபயோகித்துக்கொண்டிருப்போமாகில் தண்டனை அடைவதற்கு பாத்தியஸ்தராகிவிடுகிறோம். இவ்வாறு தான் மேற் கூறப்பட்டுள்ள விஷயமுமிருக்கிறது. இங்கு மற்றொரு சந்தேகம் ஜனிக்கலாம். அதாவது, அல்லாஹ் தஆலா மறைவான விஷயங்களை அறிகிறவனாகவும் சென்ற காலம் நிகழ்காலம் வருங்காலம் இவைகளில் நிகழ்பெற்ற நிகழ்பெறுகிற நிகழ்பெறும் சகல விஷயங்களையும் அறிந்தவனாகவும் இருப்பதால், மனிதன் தனது முழு பிரயாசையையும் கவனத்தையும் செலுத்தி எந்த வேலையைச் செய்பவனாக இருக்கின்றானோ அவைகளை முற்கூட்டியே தெரிந்து எழுதிவைத்திருக்கிறான். மேலும் சில வேலைகள் மனிதனுடைய இஷ்டத்தைவிட்டு புறம்பானதாக இருக்கிறது. அதாவது, நாடி அடிப்பது, கண்நிமை சுமட்டல், மூச்சு ஓடிக்கொண்டிருப்பது இவைபோலொத்த காரியங்களில் மனிதனுடைய இஷ்டத்தைப் பிரயோகப்படுத்துவதற்கு எவ்வித சக்தியுங் கிடையாது. அவன் அசக்தனாகவே இருக்கிறான். ஆதலால் இவ்வாறு மனிதனுடைய இஷ்டம் தெரிவுதலுக்குப் புறம்பாக நடக்கும் காரியங்களில் மனிதன் தண்டனையோ கூலியோ அடைவதற்குத் தகுதியற்றனவாக இருக்கிறான் என்று

கூறப்படுகிறது. முடிவாக கவனிக்குமிடத்து மனிதன் ஒருபக்கல் தனது இஷ்டம்போல் நடந்துகொள்ள சக்தி ஒன்றுமே இல்லாதவனாகவும், ; மற்றொருபக்கல் தன் இஷ்டம்போல் நடந்து கொள்ளுவதற்கு அனுமதியளிக்கப் பட்டவனாகவு மிருக்கிறான். ஆகவே எந்த காரியத்தை அவன் தன் இஷ்டத்துக்குச் செய்கிறானோ அதனால் பாக்கியமோ தண்டனையோ அடைகிறான் ; எந்த காரியத்தில் அவனுடைய அறிவுக்கு சம்பந்தமில்லையோ அது சம்பந்தமாய் எவ்வாறான நன்மையும் தீமையும் ஏற்படுவது கிடையாது. இதுதான் இஸ்லாமிய ஷரீஅத்தின் சட்டமாகும். இதைத் தவிர்த்து இவ்விஷயமாய் வேறு எவ்வாறான தீர்ப்பும் அளிக்க முடியாது.

அல்லாஹ்தஆலா மானிடன் செய்யும் காரியங்களில் அவனுக்கு முழு அதிகாரங்களையும் கொடுத்து தன் வசத்தில் எவ்வித சம்பந்தத்தையும் வைத்துக்கொள்ளாததுபோல் ஒரு பக்கல் தோன்றுகிறதென்றும், மற்றொரு பக்கல், மானிடன் செய்யும் காரியங்களில் அவனுக்கு எவ்வாறான அதிகாரங்களையும் கொடுக்காது சகலவற்றையும் அல்லாஹ் தன் வசமே வைத்திருப்பதாகவே தோன்றுகிறதென்றும் ஐரோப்பிய அறிஞர் கூறுகின்றனர். இது சம்பந்தமாய் சன்மார்க்க இஸ்லாம் அளிக்கும் தீர்ப்பு என்னவெனில்: மானிடன் ஒருபக்கல் ஒன்றுமியலாதவன் போலவும், மறுபக்கல் பூராத்தெரிவுதல் கொடுக்கப்பட்டவன் போலவும் இருக்கிறான் என்பதே. நன்மை தீமை இன்னதென பகுத்தறிந்து கொள்ளும் சக்தியை அல்லாஹ்தஆலா ஒவ்வொருமனிதனுக்கும் அளித்திருப்பதுடன் அதனை அனுஷ்டித்துக் காண்பிப்பதற்குள்ள பலத்தையும் கொடுத்திருப்பதால் மனிதன் தான் தெரிந்தெடுத்துச் செய்யும் காரியங்களினால் நன்மையோ தண்டனையோ அடைவதற்கு பாத்தியஸ்தனாகி விடுகிறான் என்பது முஸ்லிம்களின் தீர்மானமாகும்.

நாயக வாக்கியம்

ஏழைகளுக்கு உதவிசெய்வதில் முயற்சிப்பவன் அல்லாஹ்வின் பாதையில் தேண்டித்து முயற்சிப்பவன்போலாகிறான் ; தன் ஏழை சகோதரரின் தேவைகளைப் பூர்த்திசெய்வதைக் கைகொள்ளுபவனின் தேவைகளை அல்லாஹ்தஆலா நிறைவேற்றி வைக்கிறான். என நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹதீது கலைகளை விரித்துரைப்பதில் கியாதி பெற்று விளங்கிய ஹஸ்ரத் அபூஹாத்திம் ராஜீ (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், இஸ்லாம் தோன்றுமுன் உலகில் வன்னஞ்சம் இரக்கமற்ற தன்மை இவைகளின் சமுத்திரம்கொந்தளிப்புஎடுத்துக்கொண்டிருந்ததென்றும், மானிடனிடத்தில் சகோதர சமத்துவ வாடைகூட இல்லாதிருந்ததென்றும், பின்னர் இஸ்லாம்என்னும்தினகரன்தோன்றி ஏழைகளுக்கு உபசரணைபுரிவது, சகோதர சமத்துவ வாஞ்சை கொள்ளுவது முதலியவைகளை மக்களுக்கு கற்பித்ததன்பயனாக அனீதிபுரிபவர்களாக இருந்தோர் தயாளகுணமுள்ளவர்களாக மாறி விட்டார்களென்றும், எதுவரை முஸ்லிம்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுவது, ஏழைகளை ஆதரித்தல் முதலிய சற்குணங்கள் காணப்பட்டதோ அதுவரை அவர்கள் ஒவ்வொரு காரியத்திலும் ஜெயம் பெற்று விளங்கி வந்ததுடன் உலகிலுள்ள சகல சக்திகளும் அன்னோருக்கு சங்கைசெய்து கொண்டிருந்ததென்றும், அவர்களில் தானென்னும் கர்வம் காணப்பட்டது முதல் அவர்கள் தாழ்மையடைந்து கேவலமாக மதிக்கப்படுபவர்களாகிவிட்டார்களென்றும் கூறியிருக்கிறார்கள்.

மானிடர்களில் தன் சிநேகிதருடன் அழகான முறையில் நடந்துகொள்ளுபவன் மிக மிக மேலானவனாகும் ; அயல்பாகக்காரர்களில், தன் பக்கத்து வீட்டுக்காரர்களுடன் தக்கமுறையில் நடந்துகொள்ளுபவனே சிறந்தவனாகும். என நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்

டிருக்கிறது. ஹஸ்ரத் அபூஹாத்திம் (ரலி.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், அயல்பாகக்காரர்களுடன் தக்கமுறையில் நடந்துகொள்ளவேண்டியது ஒவ்வொரு முஸ்லிம்களின்மீதும் கடமையாகுமென்றும், சங்கைவான்களான சஹாபிகள் அயல்பாகக்காரர்களுடன் புகழத்தக்கவிதமாக நடந்துவருவதற்கிடையே சிலகால் தாங்கள் பசியுடனிருக்கும் நிலைமையிலும் அன்னோருக்குத் தின்னக் கொடுப்பவர்களாக இருந்தார்களென்றும் தக்க முறையில் எடுத்து விளக்கியிருக்கின்றார்கள். ஹஸ்ரத் மாலிக் இப்னு அப்துற் றஹ்மான் (ரஹ்.) அவர்கள் காலைமுதல் மாலைவரை கூலி வேலை செய்வதுகொண்டு கிடைக்கும் கூலியை இருபங்காக வைத்து ஒருபங்கை தங்கள் அயல் பாகக்காரர்களில் ஏழைகளாகவுள்ளவர்களுக்கு கொடுப்பவர்களாகவும், வேலை கிடைக்காத தினத்தில் தங்கள் சாப்பாட்டை அயல்பாகக் காரர்கட்கு அனுப்பிவிட்டு தாங்கள் பட்டினியாக இருந்துவிடுவார்களென்றும் கூறப்படுகிறது. இதுவன்றோ இஸ்லாமிய சகோதரத்துவம். இவ்வாறான செய்கைதான் முஸ்லிம்களின் மகிமை, கியாதி முதலியவைகளை உயர்த்திவைப்பவைகளா யிருந்தன.

எவன் இதரர்களிடம் அல்லாஹ்வுக்காக சிநேகமோ, பகைமையோ கொள்ளுகிறானோ, இன்னும் அல்லாஹ்வுக்காகவே தான தருமஞ் செய்கிறானோ அல்லாஹ்வுக்காகவே கொடுக்காமலிருக்கிறானோ நிச்சயமாக அவன் தன் ஈமானை பரிபூரணமாக்கிக்கொண்டான். என சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் அறிவித்ததாக ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஷைகுல் முஹத்திதீன் ஹஸ்ரத் அபுல் அலாவு ஹம்தானீ அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், மானிடன் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் தனது நாயனின் பொருத்தத்தை முன்னால் வைத்துச் செய்வது கடமையாகுமென்றும், சங்கைவான்களான சஹாபாக்கள் யாருடனாகிலும் சிநேகம் வைப்பார்களாயின் அச் சிநேகம் தங்களைப் பொருத்ததாக இல்லாமல் அல்லாஹ்வுக்காகவே இருக்குமென்றும், யாரிடமாகிலும் வெறுப்புக்கொள்வார்களாயின் அதுவும் தங்களுடைய சொந்த விஷயமாகயிராது, அல்லாஹ்தஆலாவுக்காகவே இருக்குமென்றும், யாருக்கும் உதவி புரிவார்களாயின் அதுவும் தங்கள் நாயனின்பொருத்தத்தைத் தேடிக்கொள்வதற்காகவே இருக்குமென்றும், முஸ்லிம்கள் இத் தோரணையில் நடந்துவந்த காலம்வரை அவர்களுடைய கீர்த்தியும் பெருமையும் உலகில் பிரகாசித்து சுடர்விட்டெறிந்துகொண்டிருந்ததென்றும் அவர்கள் இவ்வழியைப்பின்பற்றி நடப்பதை விட்டுவிட்டது முதல் அவர்களின் கீர்த்தி பிரலாபத்தின் முடிவேற்பட்டுவிட்டதெனவும் கூறியிருக்கிறார்கள்.

எவன் அல்லாஹ்வின்மீதும் மறுமைநாளின் மீதும் ஈமான்—நம்பிக்கை கொண்டவனாக இருக்கிறானோ அவன் தன் அடிமையுடன் அழகிய முறையில் நடந்துகொள்ளவேண்டியது அவசியமாகும். மேலும் உங்கள் அடிமைகள் உங்களின் சகோதிரர்களாகுமாதலின் நீங்கள் தின்பதையே அவர்களுக்கும் கொடுங்கள்; நீங்கள் அணிந்துகொள்வதையே அவர்களுக்கும் அணியக் கொடுங்கள். என சமத்துவத் தூதர் (ஸல்.) அவர்கள் திருவாய்மலர்ந்தருளியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச்செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் இமாம் அபூஹாத்திம் ராஜீ (ரஹ்) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், மடமை குடி கொண்டு மதியீனம் தாண்டவமாடிக்கொண்டிருந்தகாலத்தில் பூஉலகின் நானாபாகங்களிலும் அறியாமையும் அந்தகாரமும் தலைவிரித்தாடிக்கொண்டிருந்தது; மானிடத் தன்மைக்கு எவ்வித விசேஷமதிப்பும் இல்லாதிருந்தது; அடிமைகள் அநீதமான முறையில் நடத்தப்பட்டுவந்தார்ாள். ஆகவே நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள், அவ்வடிமைகளுடன் தக்கமுறையில் நடந்துகொள்ளவேண்டுமென்று கூறி, அவர்கள் உங்களின் சகோதரர்களாகையால் அவர்களுடன் தக்க முறையில் நீங்கள் நடந்துகொள்ளுவீர்களாயின் அவர்கள் சந்தோஷமடைகின்றார்களென்றும், அநீதியாக நடந்துகொள்வது கொண்டு பொருத்தக்கேடடைகின்றார்களென்றும் விளக்கிக் காண்பித்தார்கள். இவ்வுபதேசமானது மக்களை கிருபையாளராகச் செய்துவிட்டதால் அடிமைகளின் கஷ்டத்திற்கே முடிவேற்பட்டுவிட்டது என அறிவித்திருக்கிறார்கள்.



பிறமதத்தாரின் அறியாமை

மதத்தலைவர்களையும், மதக் கொள்கைகளையும் பற்றி ஆராய்ச்சி செய்யவும் அபிப்பிராயங் கூறவும் சகலருக்கும் உரிமையுண்டு. ஒவ்வொரு மதத்தையும் பற்றி ஆராய்ச்சி செய்யாவிடில் அதிலுள்ள நன்மை தீமைகளை அறிந்துகொள்ள முடியாதென்பதை யாம் ஒப்புக்கொள்கிறோம். இக் குவலயத்திலுள்ள அநேகம் மதங்களில் பிரதான மதங்களாக இருப்பவை இஸ்லாம் மதமும், கிறிஸ்து மதமும்தான் என்பது வெகு ஜன அபிப்பிராயம். ஆதலின், அம் மதங்களுக்குரிய வேதங்களையும், அவைகளைப் போதித்த நபிமார்களையும், அவர்கள் போதித்த விஷயங்களையும் பற்றி பிறமதத்தார் தானே ஆராய்ச்சி செய்ய முன்வராவிட்டாலும், அந்தந்த மதத்திலுள்ளவர்கள் மற்றைய மதத்தினருக்குத் தங்கள் மதத்தைப்பற்றிப் போதிக்க தயாராகவே இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆயினும், இஸ்லாம் மதத்தைப்பற்றிப் பிறமத நண்பர்கள் ஆராய்ச்சி செய்து அபிப்பிராயங் கூறுவதைப்பற்றி நமக்கெவ்வித ஆக்ஷேபணையுமில்லை.

ஆனால், அவர்கள் செய்யும் ஆராய்ச்சி முறையின்மூலம் அவர்கள் தெரிந்துகொள்ளும் விஷயம் உண்மையானவைகளாகவோ அல்லது உண்மையற்றனவாகவோ இருக்கலாம். அவர்கள் அவ்வாறு ஆராய்ச்சிசெய்தவைகளை உண்மையுணர்ந்த முஸ்லிம்களிடம் எடுத்துக் கூறினால் அன்னோர் அதனைத் திருத்தி உண்மையை அறிவிக்கவும் சித்தமாக இருக்கின்றனர்.

ஆயினும், இக்காலத்தில் மத ஆராய்ச்சியிலீடுபடுபவர்கள் உண்மையிலேயே பிறமதத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் விருப்பமுள்ளவரும் இருக்கிறார்கள்; பிற மதத்தின்மீது தூஷணங்கூறி அதனை எதிர்பிரசாரம் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் உண்மைக்கு மாறாக விஷயத்தைத் திரித்துக் கூறுபவர்களுமுளர். பொதுவாக எந்த நோக்கத்தைக்கொண்டு ஆராய்ச்சி செய்ய முற்பட்டாலும், அவைகளை வெளியிடும்போது உபயோகிக்கத்தக்க பதம் அந்த மதச் சகோதரர்களைப் புண்படுத்தக் கூடியனவா? என்பதை அவர்கள் கவனிப்பது அவசியமாகும்.

இஸ்லாத்திற்கு விரோதமாக எதிர் பிரசாரம் செய்யும் ஆரிய சமாஜிகளிற் சிலர் தகாத பதங்களை உபயோகித்தது கொண்டு ஏற்பட்ட விபரீதங்கள் நண்பர்களுக்குத் தெரியாதவைகளன்று. இவர்கள் இம்மாதிரியான பதங்களை உபயோகிப்பது கொண்டு இதனைக் கண்டு ஆத்திரமடைந்த அந்த மதச் சகோதரர்கள் கொலைக் குற்றம்வரை செய்துவிடுவதற்கான சந்தர்ப்ப மேற்பட்டு விடுவதுடன் இதனால் கோரிய பயனும் உண்டாவதில்லை. கடைசியில் இருமதத்தவர்களுக்கு மிடையில் மனஸ்தாபமும் கலவரமும் முற்றிவருகிறதே யன்றி ஒருவரை ஒருவர் உணர்ந்து அந்நியோன்ய மேற்படுவதற்கு ஹேதுவில்லை.

சிந்து ஹைதராபாத்திலுள்ள ஒருபத்திரிகாசிரியர் நபிகள் பெருமான் (ஸல்.)

அவர்களைப் பற்றித் தகாத பதங்களை உபயோகித்ததின் பயனாக அப்துல் கையூம் என்பவர் பகிரங்கமாக அவரைக் கோர்ட்டில் குத்திக்கொன்றார். இக் கொலைச் செயலின் காரணமாக இவர் சர்க்கார் நீதிமன்றத்தில் விசாரிக்கப் பட்டு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டார். இதில் கொலையுண்ட நதுராம் என்பவரை ஹிந்துக்கள் வெகுவாகப் பாராட்டி ஹிந்து மதத்தைக் காப்பதற்காகக் கொலையுண்டவர் என்று கூறி ஆர்பாட்டத்துடன் அவருடைய சவத்தை மயானத்திற்குச் கொண்டு சென்றனர். இதுபோல முஸ்லிம்களும் மர்ஹூம் அப்துல்கையூம் என்பவரின் ஜனஸாவை ஊர்வலமாக எடுத்துச்செல்ல முயற்சித்தனர். இதன் பயனாக நிலைமை அளவுக்கு மீறி சர்க்கார் ராணுவங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்குள்ள சந்தர்ப்ப மேற்பட்டு பல உயிர்ச்சேதங்கள் நேர்ந்தன.

இஃது ஒரு பக்கலிருக்க, கத்தோலிக் கிறிஸ்துவப் பாதிரியாரான ரெவரண்டு எம். ஜே. எம். என்பவரால் எழுதப்பட்டு, சென்னையிலுள்ள நல்லாயன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பட்ட "திருச்சபை சரித்திர சங்க்ஷேபம்" என்ற புத்தகத்தில் திருநபீ தூஷணை இருந்ததற்காக சென்ற வருஷத்தில்முஸ்லிம்கள் செய்த கிளர்ச்சியும், முஸ்லிம்கள் மனக்கொதிப்பு அடைந்ததும், சென்னை மாகாண கவர்ன்மெண்டார் அப்புத்தகத்தைப் பறிமுதல் செய்ததும் மனத்தைவிட்டுமறையுமுன் சென்னை நகரிலுள்ள "ஹிகின்ஸ்பாதம்" ரயில்வே புக்ஸ்டால்களிலும் இதரபுக்ஸ்டால்களிலும் The Story of Bible "பைபிளின் கதைகள்" என்ற ஆங்கிலபுத்தகமொன்று விற்பனைசெய்யப்பட்டு வருவதாகதெரிகிறது. இது மிஸ்டர் மாக்லியோட் ஈயர்ஸ்லீ, எப். ஆர். ஸி. எஸ்., எப். ஆர். ஏ.ஐ.,எப். இஸட். ஏ., என்பவரால் எழுதப்பட்ட நூலாகும். இதை லண்டனிலுள்ள வாட்ஸ் அண்டு கம்பெனி பிரசுரித்திருக்கிறது. இந்நூலில் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது அந்தஸ்துக்குத் தகாத பல தூஷணைகள் மலிந்திருக்கின்றன. இப்புத்தகத்தில் அவ்வாசிரியர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களது அந்தஸ்தை வெகு தூரத்திற்குத் தாக்கி எழுதியுள்ளார். அவர் ஆராய்ச்சி இன்மையாலோ அல்லது விஷயமுணராத்தன்மையாலோ எழுதி இருப்பாராயின் கேவலமான பதத்தை அதில் உபயோகித்திருக்க நியாயமில்லை. எனவே, இஸ்லாம் மதத்திற்கு விரோதமாகச் செய்யும் பிரசாரத்தின் நிமித்தமாக இஸ்லாம் மதத்தையும் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்களையும் மற்றவர்கள் அற்பமாக மதிக்க வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்க வேண்டுமென்றே அவர் இப்பதங்களை உபயோகித்திருக்கிறார் என்று கருத இடமிருக்கிறது. முஸ்லிம்களில் எவரும் அப்பதங்களைச் செவியேற்றுக்கொண்டிருக்க முடியாத அவ்வளவு கேவலமான பதங்களை உபயோகித்திருக்கிறார். பிறர் செய்த, ஒரு காரியத்தை எடுத்துக்கூறி அதனைக் கண்டிப்பது குற்றமல்லவாயினும் யாம் அப்பதங்களை எடுத்துக் கூறுவதற்குங் கூட எமது மனம் இடந்தரவில்லை. எனவே, மாகாண கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுத்து அதனைப் பறிமுதல் செய்து, கொதிப்பும் ஆத்திரமுமேற்பட்டுப் புண் பட்டிருக்கும் முஸ்லிம்களின் மனத்தைச் சாந்தப்படுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு மதத் தலைவர்களையும் பெரியார்களையும் தூஷித்து எழுதுவதினால்தான் நம் தேசத்தில் வாழும் மக்களிடையே சச்சரவும் மனக்கசப்பும் வைராக்கியமுமேற்பட்டு பலவாறான கஷ்டநஷ்டங்கள் சம்பவிக்கின்றன. ஆதலால் பிறமத நண்பர்கள் இவைகளை நன்கு ஆராய்ந்து பார்த்து உண்மையற்ற—அசத்தியப் பிரசாரத்திலிறங்காதிருப்பார்களாக.

காதியானீ அஹ்மதீ

சில காலத்திற்குமுன் காதியானில் தோன்றிய
மிர்ஜாகுலாம் அஹ்மது என்பவர் தோற்
வித்த வழி கெட்ட அஹ்மதிய்யா மதத்தில்
பல பிரிவுகளிருப்பதாகவும், அவைகளில் காதி
யானிலுள்ள மிர்ஜாயீ பார்ட்டியும், லாகூரி
லுள்ள அஹ்மதியா பார்ட்டியும் தான் முக்கியப்
பிரிவுகள் என்றும், இவ்விரண்டு பிரிவினருக்
கிடையே அஸ்திபாரமான கொள்கையில்
பலத்த அபிப்பிராய பேதமிருக்கிறதென்றும்,
காதியானிலுள்ள மிர்ஜாயீ பார்ட்டியினர் மிர்
ஜாகுலாம் அஹ்மதை நபியென்றும், றஸூ
லென்றும் நம்பி "கத்தமுன்னுபுவ்வத்" கொள்
கையை அடியுடன் மறுப்பதால் மிர்ஜாயீ
பார்ட்டியினர் இஸ்லாத்திற்குப் பெரும் விரோ
திகள் என்றும், லாகூர் அஹ்மதியா பார்ட்டி
யினர் மிர்ஜாகுலாம் அஹ்மதை நபியென்று
நம்பாது அவரை முஜத்தித் மஹ்தீ மஸீஹ்
என்று மட்டும் நம்புவதால் அவர்கள் இஸ்லாத்
தின் 'கத்தமுன்னுபுவ்வத்' கொள்கையை
மறுக்கவில்லை எனவே, இவர்கள் இஸ்லாத்
தின் வட்டத்திற்குள் தானிருக்கிறார்கள் என்
றும் சிலர் இக்காலத்தில் கூறிவருகின்றனர்.

உலகம் அனைத்தும் இஸ்லாத்தின் வட்டத்துக்
குட்தானிருக்கவேண்டுமென்பதும், முஸ்லிம்க
ளாகவுள்ளவர் எவரையும் இஸ்லாத்திற்குப்
புறம்பானவர்கள் என்று சொல்லக்கூடாதென்
பதும், இஸ்லாத்தின் வட்டத்திற்குள்ளிருக்
கும் எவரையும் இஸ்லாத்தைவிட்டு அப்புறப்
படுத்தக்கூடாது என்பதுமே நமது பேரவா.
ஆயினும், இஸ்லாத்தின் வட்டத்திற்குள்
இருப்பவர் எவர்? இஸ்லாத்தின் வட்டத்திற்
குள் வந்து பிரிந்துபோனவர் எவர்? இஸ்லாத்
தின் வட்டத்திற்குள்வராமல் விலகி நிற்பவர்
எவர்? இஸ்லாம் மதத்தை உண்மையாகப் பிர
சாரம் செய்பவர் எவர்? முஸ்லிம் என்று
பெயர் வைத்துக்கொண்டு இஸ்லாத்திற்கு
விரோதமாகப் பிரசாரம் செய்பவர் யார்?
என்ற விஷயங்களை முஸ்லிம் பொதுஜனங்
களுக்கு அறிவித்து, அவர்களை இவ்வஞ்சகக்
கூட்டத்தாரின் அசத்தியப் பிரசாரத்தைக்
கண்டு ஏமாற்றமடையாமற் றடுக்க முஸ்லிமாக
உள்ள ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இவ்
வுரிமைக்கேற்ப யாம் இவ்விடத்தில் மேலே
கூறப்பட்ட காதியானிகளின் பிரதம இருபிரி
வினரையும்பற்றிச் சிறிதுகூறுவோம்:—

மிர்ஜாயீ பார்ட்டியினர் எவருடைய மிரட்ட
லுக்கும் உருட்டலுக்கும் அஞ்சாமல் தங்கள்
வழி கெட்ட கொள்கைகளை வெளியிட்டு மிர்ஜா
குலாம் அஹ்மதை நபியென்று பச்சை வெட்
டையாகக் கூறுகின்றனர். "கத்தமுன்னுபுவ்
வத்" கொள்கையை அங்கீகரிப்பதுமில்லை.
ஆதலால், அவர்கள் வழி கெட்ட கொள்கையின
ராக இருந்தாலும், தங்கள் மதப்பிரசாரத்தை
அஞ்சாமல் செய்துவருவதால் அவர்களைக்
கொண்டு முஸ்லிம்கள் அத்துணை தூரம் ஏமாற்ற
மடையவும் மாட்டார்கள்; அவர்களால் மதக்
கொள்கைக்கு அத்துணைபெருத்த நஷ்டமு
மேற்பட்டுவிடாது. ஆனால், லாகூர் அஹ்
மதியா பார்ட்டியினரோ அவ்வாறன்று. இவர்
கள் தங்களது கொள்கையைப் பச்சையாகக்
கூறாது, மறைமுகமாக வெளியிட்டு வருகிறார்
கள். இவர்கள் தங்களை வெளிக்கு முஸ்லிம்
கள் என்று கூறிக்கொண்டாலும் அந்தரங்கத்
தில் மிர்ஜாகுலாம் அஹ்மதை நபியென்று
ஒப்புக்கொள்ளுவதால் காதியானீ மிர்ஜாயிகள்
இந்தக் கூட்டத்தாரை "முனாபிக்குகள்" என்
றழைக்கிறார்கள். இவர்களின் இந்நய வஞ்சகப்
பிரசாரத்தால் பொது ஜனங்களிற் சிலர் தங்களை
காதியானீ என்று சொல்லிக்கொள்ள முன்வரா
விட்டாலும் காதியானிகளின் வழி கெட்ட
கொள்கைகளை சத்திய இஸ்லாத்தின் உண்
மைக் கொள்கை என்று நம்பி மோசம் போகி
றார்கள். இதனை மெய்ப்பிக்க இதனடியில்
இரண்டொரு மேற்கோள்களை எடுத்துக்
கூறுவாம்:—

மிர்ஜாகுலாம் அஹ்மதுவின் சிஷ்யர்களில்
ஹக்கீம் நூறுத்தீன், அப்துல் ஹக்கீம் சியால்
கோட்டி, முஹம்மது அலீ, காஜா கமாலுத்
தீன் ஆகியவர்கள் முக்கியமானவர்களும்
காதியானீ வகுப்பின் பிரபலஸ்தர்களும் அம்
மதத்தில் முக்கிய ஸ்தானங்களை வகிப்பவர்களு

மாவார்கள். மிர்ஜாகுலாம் அஹ்மது இந்நால் வரையும் முறையே ஒருவருக்குப்பின் ஒருவராகத் தமது பிரதிநிதியாக இருந்து தமது உம்மத்துக்களைக் கவனித்து வரவேண்டுமென்று நிர்ணயஞ் செய்துள்ளார். 1908-ம் வருஷத்தில் மிர்ஜாகுலாம் அஹ்மது மரித்தபின் அவரது கட்டளைப்படி ஹக்கீம் நூறுத்தீன் கலீபா பதவியை அடைந்தார். இவர் 1914-ம் வருஷம் மரிக்கவே, மிர்ஜாகுலாம் அஹ்மதின் நிர்ணயப்படி அப்துல்ஹக்கிம் சியால்கோட்டி கலீபா பதவியை வகிக்க வேண்டுமல்லவா? எனினும், மிர்ஜாகுலாம் அஹ்மது தான் 'நபி' என்று பொய்யாக தஅவாச்செய்ததால் அவருடைய நியமனம் பொய்யாயிற்று. அதாவது, அப்துல்ஹக்கீம் சியால்கோட்டி மிர்ஜாகுலாம் அஹ்மது உயிருடனிருக்கும்போதே மரணமாய் விட்டார். ஆதலால், குலாம் அஹ்மதின் நியமனப்படி மூன்றாவது பேர் வழியான முஹம்மதுஅலீ கலீபாவாக வேண்டும்.

ஆனால் மிர்ஜாகுலாம் அஹ்மதின் புதல்வரான மிர்ஜாபஷீருத்தீனுக்கு அந்தப் பதவியை வகிக்க ஆசை தோன்றி அவர் கலீபா பதவிக்கு அபேக்ஷகராக நின்றார். இவர் குலாம் அஹ்மதின் புதல்வராகவும், பணக்காரராகவும் இருப்பதால் இவருக்குச் செல்வாக்கிருக்குமல்லவா? காதியானிகளில் பெருங் கூட்டத்தினர் இவருக்கு ஆதரவாக நின்றதால் இவரே கலீபாவாகத் தெரிந்தெடுக்கப்பட்டு விட்டார். பணமில்லாதவர் எவ்வளவு ஊழியம் செய்து நன்மதிப்பைப் பெற்றிருந்த போதிலும் பணக்காரருடன் முட்டும்போது ஏழையின் மண்டை தான் உடைவது இக்காலத்தில் சகஜம். இதற்கேற்ப முகம்மது அலிக்கு மிகச்சிலரே ஆதரவு புரிந்தார்களாதலின் இம்முயற்சியில் இவர் தோல்வியுற்றார். இவர் தோல்வியுற்றாலும் கலீபா பதவி அடைந்த பஷீருத்தீனுக்கு அடங்கி நடக்க இஷ்டப்படவில்லையாதலால் தமது வாதத்தை விடாமற் செய்து வந்தார். இதனால் இவருக்கு காதியானில் பல இடைஞ்சல்களும் கஷ்டங்களும் ஏற்பட்டன. தெருக்களிற் செல்லும்போது பையன்கள் இவரைப் பின்றொடர்ந்து இவர்மீது பொடிக்கற்களை எறிவர். இதல்லாமல் பல பயமுறுத்தற் கடிதங்களும் இவருக்குவந்தன. பாவம் முஹம்மதுஅலீ பார்த்தார். காதியானில் குடியிருப்பதுகொண்டு தமக்கிருக்கும் அற்ப சொற்ப மரியாதையும் போய்விடுமாதலால் மானத்தைக் காக்கச் சரியான வழியைத் தாமதமில்லாமற் செய்ய வேண்டுமென்ற முடிவுக்கு வந்து, காதியானிலிருந்து மூட்டை முடிச்சுடன் லாகூருக்கு வந்து சேர்ந்துவிட்டார்.

கலீபா பதவிக்கு ஆசைப்பட்ட முஹம்மது அலீ, மிர்ஜாபஷிருத்தீன்முன் நிற்கமுடியாமல் தோல்வியுற்று லாகூர் வந்து சேர்ந்தவுடன் தமக்கென ஒரு கட்சியை ஏற்படுத்தி அதற்கு "லாஹூர் அஞ்சுமனே அஹ்மதியா இஷாஅத்தே இஸ்லாம்" என்று பெயரிட்டுக் கொண்டு அதற்குத் தாம் தலைவராகவும் அமைந்தார். நான்காவது கலீபாவாக நியமிக்கப்பட்ட காஜாகமாலுத்தீன் பார்த்தார். மிர்ஜா பஷிருத்தீன் கலீபா பதவிக்கு வந்துவிட்டதால் இனி அவருக்குப்பின்னர் தான் கலீபா பதவி வேறு ஒருவரிடம் செல்லும், அதுவரை காத்திருந்தாலும் அப்பதவி தமக்குத்தான் கிடைக்குமென்பதற்குள்ள நிச்சயமென்னவிருக்கிறது. மிர்ஜாகுலாம் அஹ்மது காலத்திலிருந்தே அஹ்மதியா அஞ்சுமனுக்கு காரியதரிசியாக இருந்த முஹம்மதுஅலி யின்பாடே திண்டாட்டத்தில் வந்துவிட்டபோது தமது கதியும் அப்படித்தானாகும் ஆதலால், மிர்ஜா பஷீருத்தினை நம்புவதில் பயனில்லை; முஹம்மது அலியை ஆதரித்து பக்கபலமாக நின்று அவரைத் தலைவராக ஏற்படுத்திவிட்டால் அவருக்குப் பின்னரேனும் தமக்கு அப்பதவி கிடைக்கக்கூடும்; முஹம்மதுஅலீ தம்மைப் புறம்பே தள்ளிவிடார் என்று நினைத்த காஜா, முஹம்மதுஅலீ கட்சியை ஆதரிக்க முன்வந்து லாகூர் பிரிவில் சேர்ந்து கொண்டார். ஆகவே, லாகூர் பிரிவுக்கு முஹம்மது அலியும், காஜா கமாலுத்தீனும் ஸ்தாபகர்களாகவும் பிரபலஸ்தர்களாகவும் அமைந்தனர்.

இனி காதியானிலுள்ள பொதுஜனங்கள் இவ்விருவரையும் நோக்கி, தலைமைப்பதவிக்கு ஆசைப்பட்டு ஜமாஅத்தில் பிளவு உண்டாக்கி காதியானீ மதத்தையே சிதற அடித்துவிட்டீர்களே, இவ்வாறு செய்யலாமா என்றுகேட்பார்களல்லவா? அவ்வாறான கேள்வி பிறக்காமலிருப்பதற்காக ஒரு யுக்தி செய்தார்கள். அதாவது, குலாம் அஹ்மதை நாங்கள் தனிப்பட்ட நபியென்று ஒப்புக்கொள்வதில்லை; அவரை (குலாம் அஹ்மதை) நபியென்று ஒப்புக்கொள்ளாததால் தான் மிர்ஜாயிகளைவிட்டுப் பிரிந்துவிட்டோம் என்று பிரசாரம் செய்து முதலில் பொதுஜனங்

களை ஏமாற்றி தங்களுக்கு ஆதரவு தேட சூழ்ச்சி செய்தனர். இவர்கள் செய்யும் பிரசாரம் சத்தியப்பிரசாரமாக இருக்குமாயின் அவர்கள் பகிரங்கமாகத் தங்கள் தவறை ஒப்புக்கொண்டு "இவ்வளவுகாலமாக நாங்கள் வழிகேட்டிலிருந்து இப்பொழுதுதான் உண்மையையுணர்ந்தோம்" என்று மனப்பூர்வமாக பகிரங்கத்தில்கூறி தௌபாச் செய்திருக்கவேண்டும். அவர்கள் அப்படிப்பட்ட தௌபாச் செய்ததாகத் தெரியவில்லை. இவர்கள் தனிக்கட்சியாகப் பிரிவதற்குமுன் எவ்வித தாவாச்செய்து வந்தார்களோ அதே தாவாவை பின்னும் செய்துகொண்டே இருந்திருக்கிறார்கள். அதாவது,

மிர்ஜா குலாம் அஹ்மதின் மனைவியை "உம்முல்மூமினீன்" என்றழைத்து வந்தார்கள்.

மிர்ஜாகுலாம் அஹ்மதிடம் நேரில் பைஅத்துச்செய்து சிஷ்யரானவர்களுக்கு ஸஹாபிகளின் அந்தஸ்துக் கொடுத்து அவர்களின் பெயரைக் கூறும்போது "றலியல்லாஹு அன்ஹு" என்றழைத்து வந்தார்கள்.

மிர்ஜாகுலாம் அஹ்மதின் புதல்வரும் மிர்ஜாயிகளின் கலீபாவுமான பஷீருத்தீனை "அமீறுல் முமினீன்" என்றழைத்தார்கள்.

மிர்ஜா குலாம் அஹ்மது வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் மஹ்தியாகவும் இருப்பதாக தாவாச் செய்தார்கள்.

இந்த தாவாக்களில் எதையும் அவர்கள் இன்றுவரை விட்டபாடில்லை. மிர்ஜா குலாம் அஹ்மதை நபியென்று ஒப்புக்கொள்ளாவிடில் அவரது மனைவியை 'உம்முல்மூமினீன்' என்றும், அவரது கலீபாவை 'அமீறுல்மூமினீன்' என்றும், அவரது சிஷ்யர்களுக்கு றலியல்லாஹு அன்ஹு,' என்றும் கூறுவானேன்? இவ்விபரங்களை நம்மவர் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதற்கு அனுசரணையாக, அன்னோர் வஹியின்வாசல் அடைபடவில்லை; கியாமத்து நாள்வரை வஹீ வந்துகொண்டுதானிருக்கும் என்றும் தாவாச் செய்கின்றனர்.

இக்கட்சி பிரிவதற்குமுன் இவர்கள் செய்த தாவாவைச் சற்று கவனியுங்கள்.

1. ஹஜ்றத் மிர்ஜா குலாம் அஹ்மது காதியானீ இந்தியாவின் நபீ. (ரிவியு ஆப்திரிலிஜியன் வால்யூம் 6-பக்கம் 96.)

2. ஹஜ்றத் மிர்ஜா சாகிப் கடைசி காலத்து நபியாகவும் இறுதிநாள் போதகராகவும் இருக்கிறார். (இபிட் - வால்யூம் 6 - பக்கங்கள் 20-90-99.)

3. யூதமதத்துக்குக் கிறிஸ்து மதம் எம்முறையில் முரண்படுகிறதோ அதே முறையில் இஸ்லாத்திற்கு அஹ்மதிய இயக்கமும் முரண்படுகிறது. (இபிட், வால்யும் 8. பக்கம் 163.)

மேற்கண்ட மூன்று தாவாக்களும் லாகூர் அஞ்சுமனே அஹ்மதியாவின் தலைவரான முஹம்மது அலியின் தாவாக்களாகும். இதில் அவர் பச்சைவெட்டையாக மிர்ஜாகுலாம் அஹ்மதை இந்தியாவின் நபீயென்றும், கடைசி காலத்து நபீ என்றும் தாவாச் செய்ததுடன், யூதமதம் வேறாகவும், கிறிஸ்துமதம் வேறாகவும், யூதர்கள் வேறு வகுப்பினராகவும், கிறிஸ்துவர்கள் வேறு வகுப்பினராகவும் இருப்பது போல இஸ்லாம் மதம் வேறாகவும் அஹ்மதிய இயக்கம் வேறாகவும், முஸ்லிம் வகுப்பினர் வேறாகவும், அஹ்மதியர்கள் வேறாகவும் இருக்கிறார்கள் என்பதையும் வற்புறுத்தி இருக்கிறார். இப்படிப்பட்ட கொள்கையுள்ளவர் இஸ்லாமிய பிரசாரம் புரிவதாகவும், அவர் முஸ்லிமாக இருக்கிறார் என்றும் நம்புவது எங்ஙனம் என்பதை வாசகர்கள் முடிவு செய்துகொள்ளவிட்டு விடுகிறோம். இனி லாகூர் அஹ்மதிய்ய பார்ட்டியின் முக்கியஸ்தரும், முஹம்மது அலிக்கு வலதுகரம் போலிருந்தவரும், மிர்ஸாவால் நான்காவது கலீபாவென்று முன்னறிக்கை செய்யப்பட்டவரும் லண்டனில் "இஷா அத்தே இஸ்லாம்" செய்வதற்கென்று பல்லாயிரக்கணக்கான நிதிகளைத் திரட்டியவருமான காஜாகமாலுத்தீன் மிர்ஜா குலாம் அஹ்மதைப் பற்றிக் கூறி இருப்பவைகளில் இரண்டொன்றை கவனித்துக் கொள்ளுங்கள்:—

'மிர்ஜாகுலாம் அஹ்மது (வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) இறைவனின் தூதர். உண்மையை அறிவிப்பவரான ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்கள் எல்லாநபிமார்களுக்கும்முத்திரையாக* இருக்கிறார்கள் என்பது ஒன்றே இறைவனின்

*"கத்தம்" என்ற பதத்துக்கு முத்திரை வைப்போர் என்றும், இன்னின்னர் நபியென்று முத்திரை வைப்போர் என்றும், தன்னுடைய உம்மத்தில் இல்லாமல் மதத்தவரில் நபித்துவம் இனி வராது என்று ஹுஜூர் அக்ரம்(ஸல்.) அவர்கள்

அன்பரான இந்த அஹ்மதின் ஊழியர்கள் றஸூல்களாகவும், இறைவனின் நபிமார்களாகவும் இருக்கமுடியும் என்பதைக் காட்டுகிறது. (அல்ஹக்கீம்-காதியான். செப்டம்பர் 30உ 1905).

2. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது ஊழியரும் இந்தியாவின் நபியுமான மிர்ஜா சாஹிப் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குள்ள சகல அந்தஸ்துகளுமுள்ளவரென்று நாங்கள் கருதுகிறோம். ஹுஜூர் (ஸல்.) அவர்களது ஊழியர் (மிர்ஜா) இடமிருக்கிற சில தன்மைகள் குறைவானவைகள் என்று நமது மனசாக்ஷி கருதும்பக்ஷத்தில் அதே குறைகள் அஹ்மது முக்தார் (ஸல்.) அவர்களிடமும் காணப்படுகின்றன. சில குறைகள் இருப்பதற்காக (ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்களின்) ஊழியரான மிர்ஜாவை நாம் ஒப்புக்கோள்ளாமல் விட்டுவிடுவதாக இருப்பின், அவருடைய எஜமானர் (ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்களிடமும் அதே குறைகள் இருப்பதால்) அவர்களையும் நாம் ஒப்புக்கோள்ளாமல் விட்டுவிடவேண்டியதேற்படும்.''

இவ்விரு கூற்றுக்களிலுமிருந்து காஜாகமாலுத்தின் மிர்ஜா குலாம் அஹ்மதை றஸூல் என்றும், இந்தியாவின் நபியென்றும், நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்குச் சமமென்றும் கருதுகிறார் என்பதையும், மிர்ஜா குலாம் அஹ்மதிடமுள்ள குறைகள் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களிடமும் இருப்பதாகவும், யாரும் மிர்ஜா குலாம் அஹ்மது நபியாக இருக்கத் தகுதியற்றவரென வாதிப்பதாயின் காஜா, நபிகள் திலகம் (ஸல்.) அவர்களும் நபியாக இருக்கத் தகுதியற்றவர்களென வாதிக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிகிறது. என்னே? காஜா கமாலுத்தீனின் இஸ்லாமிய மதப்பற்று. இவர்தாம் இங்கிலாந்தில் இஸ்லாத்தைப் பரவச்செய்தாராம்? இப்படிப்பட்ட கொள்கையுள்ளவர் இஸ்லாம் மதத்தை எவ்வளவு நேர்மையாகப் பிரசாரம் செய்திருப்பார் என்பதை நாம் கூறாமலே நேயர்கள் அறியக்கடவர்.

நபித்துவத்திற்கு முத்திரையிட்டுவிட்டதாகவும் காதியானிகள் கருதிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மிர்ஜாகுலாம் அஹ்மது முஸ்லிமாக இருப்பதால் அவர் நபியாக வரலாம் என்று காஜா கமாலுத்தீன் கருதி இருக்கிறார் போலும்.

இனி, லாகூர் பார்ட்டியினர் தங்கள் கக்ஷியை ஏற்படுத்திய ஆரம்பகாலத்தில் தங்கள் கக்ஷியின் சார்பாக, தங்கள் கக்ஷி பத்திரிகையான “பைகாமே ஸுல்ஹு” என்ற பத்திரிகையின் 16-10-1913-ன்பிரதியில் பின்வருமாறு எழுதி வெளியிட்டிருக்கிறார்கள் :

“நாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், மஹ்தீயாகவும் இருக்கிற மிர்ஜாவை நபியென்றும் றஸூலென்றும் தற்காலத்தைய ரக்ஷகரென்றும் ஈமான் கோண்டிருக்கிறோம்.''

ஷை பத்திரிகை 7-10-1916-ல் வெளியான பிரதியில் பின்வருமாறு எழுதி இருக்கிறது :—

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தீயுமாகிய மிர்ஜா சாகிப் (அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம்) அல்லாஹ்வின் றஸூலாக இருந்தார் என்பதும், இக்காலத்தில் வழிகாட்டுவதற்காக உலகத்துக்கு வந்தாரென்பதும் அவரைப் பின்பற்றுவதாலேயே உலகம் ரக்ஷண்யம் அடையமுடியும் என்பதும் எங்கள் கோள்கை.

இப்படிப்பட்ட கொள்கைகளை இப்பிரிவார் தங்கள் கக்ஷியின் ஆரம்பத்திலேயே வெளிப்படுத்திவிட்டனர்; ஆனால் மிர்ஜா பஷீருத்தீனை இப்பிரிவார் பகைத்துக்கொண்டு காதியானை விட்டுவந்ததால் அவர் இவர்களுக்குப் பணங்கொடுத்து உதவி செய்வதற்கில்லை. இனி முஸ்லிம்களை ஏமாற்றித் தங்கள் வலையில் சிக்கவைத்தால்தான் பணம் வசூல் செய்யமுடியும். இந்தக் கொள்கைகளைப் பின்னும் பின்னும் பகிரங்கமாக வற்புறுத்திக்கொண்டிருந்தால் முஸ்லிம்கள் பணஉதவி செய்யமாட்டார்கள். ஆதலால், இக்கொள்கைகளைப்பகிரங்கப்படுத்தாமல் வைத்துக்கொண்டு வேறு முறையில் சூழ்ச்சி செய்யவேண்டும் என நினைத்து காஜா கமாலுத்தீன் இங்கிலாந்தில் ‘இஷா அத்தே இஸ்லாம்’ செய்வதாக நடித்தார். அஹ்மதிப் பத்திரிகைகள் வானளாவ வாழ்த்திப் போற்றி துதிபாடின. நம்மவர் ‘இஷாஅத்தே இஸ்லாம்’ என்ற வார்த்தையைக் கேள்விப்பட்டு பணத்தையும் பொன்னையும் வாரி வாரிக் கொடுத்தனர். முஹம்மது அலீ திருகுர்ஆனுக்கு ஆங்கில பாஷையில் வியாக்யானம் எழுதுவதாகக் கூறினர். இங்கிலிஷ் தப்ஸீர் என்று இந்திய முஸ்லிம்கள் அவருடைய அறிக்கையை வரவேற்று பொருளீந்த

னர். இவ்விருவகையிலும் லக்ஷகணக்கில் நிதி சேர்த்துக்கொண்டு இஸ்லாம் மதத்தை ஒழிப் பதற்கான வேலையில் அந்தப் பார்ட்டியினர் முனைந்திருக்கிறார்கள். இதனால்தான் லாகூரி லுள்ள பிரபல பாரிஸ்டரும், இந்திய கவிச்சக் கிரவர்த்தியும், முஸ்லிம் லீகின் மாஜி பிரசி டெண்டுமான அல்லாமா டாக்டர் ஸர், முஹம் மது இக்பால் இந்நயவஞ்சக லாகூர் பார்ட்டியின ரைக் குறித்து,

"தங்கள் கொள்கைகளை வெளிப்படையாகக் கூறிவரும் காதியான் பார்ட்டியினரான அஹ்மதீ யர்களைப்பார்க்கினும் லாகூர் அஹ்மதியர்கள் மிக வும் அபாயகரமானவர்கள்" என்று கூறியுள்ளார். கண்ணுள்ளோர் கண்டுதெளிக. இறைவன் நமது முஸ்லிம் சகோதரர்களை இந்த அபாயகரமான நயவஞ்சகக் கூட்டத்தைவிட்டுக் காத்து ரக்ஷிக்க அல்லும் பகலும் அனவரதமும் இறைஞ்சுகின்றேம்.

தா. இ. த்தின் தடுமாற்ற கூற்று

(அன்பர் அபுல்ஹஸன் அறைவது)

சத்தியப் பிரசாரகர்களான ஹிஸ்புல்லாக்கள் ஆங்காங்கு சுற்றுப்பிரயாணஞ் செய்து வருங்காலே, தா. இ. தனது தவற்றை ஒருவாறு உணர்ந்து அதனை ஒப்புக்கொண்டுவிட்டதால், காதியானிப் பிரசாரம் ஒருவாறு குறைவுபட்டு தா. இ. காங்கிரஸின்பால் தன் கவனத்தைச் செலுத்தி அதனை ஆதரித்து நடிக்க முற்பட் டது. இதுபொழுது பழைய கொள்கையிற் திரும்பி, வழிகெட்ட காதியானீ இயக்கத்தை ஆதரிக்க முன்வந்து சென்ற 3-8-35-ன் இத ழில், 'காதியானி-அஹ்ரார் சண்டை' என் னும் குட்டி மகுடமிட்டு ஒரு சிறு வியாசம் வரைந்துளது. இவ்வியாசத்தைப் படிக்கப் படிக்க எமக்குண்டான சிரிப்புக்கோர் அள வில்லை. ஏனெனில், அவ்வியாசத்தில் குறிப் பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பதமும் நயவஞ்ச கத்தனமுடையதாக இருப்பதுடன் பொது ஜனங்களின் உணர்ச்சியில், மார்க்க பக்தியில் திரையிடக்கூடியதாகவுமிருக்கிறது. அவ்வியா சத்திலிருந்து இப்பொழுது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளுவது மூன்று விஷயங்க ளாகும்.

1. "காதியானீக்களைப்பற்றி இங்கே ஒரு வார்த்தை கூறவேண்டும். காதியானீகள் இரண்டு முக்கியமான கொள்கைகளில் மற்ற முஸ்லிம்களிடமிருந்து மாறுபடுகின்றனர். எல்லா முஸ்லிம்களும்—அவர்கள் வைதிகராயி னும் லௌகிகராயினும்—முஹம்மது (ஸல்.) அவர்களே இறுதி நபீ என்று ஒப்புக்கொள்ளு கிறார்கள்; ஆனால், காதியானீகள் இதை மறுக் கிறார்கள். இந்த வகையில், காதியானீகள் அகில இந்திய முஸ்லிம்களை எதிர்த்துப் பகைக் கின்றவர்களா யிருக்கிறார்கள். முஹம்மது (ஸல்.) அவர்கள் இறுதி நபீ என்பது இஸ் லாத்தின் முக்கியக் கொள்கைகளில் ஒன்றாகு மாகையால் காதியானீகள் இதை மறுப்பதால் முஸ்லிம்களுக்குள் மிகுந்த சஞ்சலமேற்பட் டிருக்கிறது. இது போதாதேபோல், காதியானீ கள் இன்னும் ஒருபடிமுன் சென்று "மற் றொரு நபியாக மிர்ஸா குலாம் அஹ்மது வந் துளார்," என்பதை ஒப்புக்கொள்ளாத முஸ் லிம்களைக் "காபிர்கள்" என்கின்றனர். இப் படிக் காதியானீகள் கூறுவதன்மூலம், இந்திய முஸ்லிம்கள் அனைவரையும் அவர்கள் சண்டைக் கழைக்கின்றார்கள்..........அவர்கள் எவ்வளவு தான் தாராளநோக்கத்தைக் காட்டி வாதித்த போதினும் இந்திய முஸ்லிம்கள் காதியானீ களின் இந்த இரண்டுகொள்கைகளை ஒருநாளும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை என்பது திண் ணம்"

காதியானிகள் சில சில்லரை விஷயங்க ளில்தான் மாறுபட்டிருக்கின்றனர்; உஸூ லியத்தான கொள்கைகளை அவர்கள் மறுப்ப தில்லை என்று தா. இ. அது பிறந்தது முதல் இதுவரை கூச்சலிட்டு வந்தது நேயர் களின் ஞாபகத்திலிருக்கலாம். ஆனால் இந்த 16 வருடங்களுக்குப் பின்னரேனும் தா. இ. த்துக்கு கொஞ்சம் கண் திறந்து "காதியானிகள்

இரண்டு முக்கியமான கொள்கைகளில் மாறு படுகின்றனர்'' என்று எழுத முன் வந்ததற்குச் சந்தோஷமடையவேண்டியதாக இருக்கிறது. இவ்வாறே அவர்கள் மாறுபட்டுள்ள இதர முக்கியக்கொள்கைகளும் இனி கொஞ்ச காலத்திற்குள் தா. இ. த்துக்குப் புலப்பட்டு விடுமென நினைப்பதற்கு ஹேதுவேற்பட்டுப் போயிற்று. தா. இ. காதியானியத்திலேயே பிறந்து அதிலேயே வளர்ந்து இஸ்லாமிய வாசனையே தெரிந்துகொள்ளாதிருந்ததால் இஸ்லாத்தின் கொள்கைகளில் இரண்டைத் தெரிந்து கொள்ளுவதற்கு இத்தனை வருடகாலமாயிற்று போலும். ஒருவனை 16 வருஷகாலம் படிக்க வைத்து அவன் ஒரு வருஷமும் தவறாமல் பரீக்ஷையில் பாஸ் செய்தால் ஆங்கிலப் படிப்பில் எம். ஏ. பட்டதாரியாகிவிடலாம். ஆயினும் தா. இ., இஸ்லாத்தின் இரண்டு கொள்கைகளை, முக்கியமான கொள்கைகள் என்றுணர இத்தனை வருடங்கள் சென்றுவிட்டன போலும். என்னே தா. இ. த்திவின் மந்தமிருந்தவாறு?

"அவர்கள் எவ்வளவுதான் தாராள நோக்கத்தைக் காட்டி வாதித்தபோதினும் இந்திய முஸ்லிம்கள் காதியானீகளின் இந்த இரண்டு கொள்கைகளை, ஒருநாளும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை'' என்று தா. இ. மேற்கண்ட வியாசத்தில் எழுதி, மிர்ஸா குலாம் அஹ்மதை நபி என்று ஒப்புக்கொள்ளுவதும், நுபுவ்வத்து முற்றுபெறவில்லை, இனி உலகில் எல்லோருக்கும் வஹீ வரலாம் என்று வாதிப்பதும் தாராளக் கொள்கை என்று கூறுகிறதா? தங்கள் சொந்தப் பொருளை எடுத்து தானமீவதே போல் வெகு தாராளமாக காதியானிகளின் அந்தக் கொள்கையை தாராள நோக்கமென்று தா. இ. கூற முன்வந்திருக்கிறது போலும். நபித்துவத்தை அடைவதும், அது முடிவு பெறுவதும், வஹீ வருவதும் ஒவ்வொருவரும் சுயமே சம்பாதித்துக்கொள்ளக்கூடிய விஷயங்களன்று; இறைவன் தனது பெருங்கருணையால் அளிக்கும் சன்மானங்களாகும். நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள்பால் இறைவனுக்கிருந்த பெருங்கருணையால் அவர்களுக்கு நபித்துவத்தை அருளி, 'கத்தமுன்னுபுவ்வத்' என்ற விசேஷ அந்தஸ்தையும் அளித்து அவர்களுக்குப் பின் உலகில் வேறு எந்த நபியும் வரமாட்டார்; இனி எவருக்கும் வஹீ அறிவிக்கப்படப் போவதில்லை என்ற விஷயங்களை அறிவித்து நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கு இவ்வவனியிலேயே பெரும் பேறை அளித்துளான். உண்மை இங்ஙனமிருக்க, தா. இ. இதனையுணர்ந்துகொள்ளாது இக்கொள்கையைகுறுகிய நோக்கமென்று நினைத்துக்கொண்டு காதியானிகளின் அக்கொள்கையைதாராளநோக்கமென்று வற்புறுத்த இதுபொழுது முன்வந்திருக்கிறது. தாராள நோக்கமென்பதற்கு இதைத் தவிர்த்து வேறு அர்த்தஞ் செய்வதற்கு இவ்விடத்தில் இடமில்லை. ஏனெனில், நபித்துவம் முற்று பெற்றுவிட்டதென்பதை மறுத்து மிர்ஸா குலாம் அஹ்மதை நபியென்று ஒப்புக்கொள்ளாத எவரையும்—முக்கியமாக உலகிலுள்ள 70 கோடி முஸ்லிம்களையும் காதியானிகள் காபிர்கள் என்றும், தேவடியாக்கள் மக்கள் என்றும், ஷைத்தான்களின் சிஷ்யர்கள் என்றுங் கூறியுள்ளார்கள். இப்படி திட்டுவதை உலகில் எவரும் தாராள நோக்கமென்று கூறமாட்டார்கள். ஒருக்கால் தா. இ. யாகிலும் இவ்வாறு கூறுகிறதா யென்பதை தெளிவுபடுத்த முன்வருமா?

"இப்படி காதியானிகள் கூறுவதன்மூலம் இந்திய முஸ்லிம்களனைவரையும் அவர்கள் சண்டைக்கழைக்கின்றார்கள்........இந்திய முஸ்லிம்கள் இந்த இரண்டு கொள்கைகளை ஒருநாளும் ஒப்புக்கொள்ளப்போவதில்லை''

என்று தா. இ. மேற்கண்ட வியாசத்தில் கூறி இருக்கிறது. முஸ்லிம்களின் முக்கிய இரண்டு கொள்கைகளை மறுத்து, மிர்ஸாகுலாம் அஹ்மதை நபியென்று வாதிப்பதுஇந்திய முஸ்லிம்களை மட்டில் சண்டைக்கிழுப்பதா அல்லது உலகிலுள்ள எல்லா முஸ்லிம்களையும் சண்டைக்கிழுப்பதா? என்று தா. இ. த்திடம் ஓர் வினா கடாவ விரும்புகின்றோம். ஆகவே, இந்தப் பிரச்சினை இந்திய முஸ்லிம்களை மட்டும் பொருத்ததன்றி உலகிலுள்ள எல்லா முஸ்லிம்களையும் பாதிக்கக்கூடிய பிரச்சினையாகுமென்பதையும், உலகிலுள்ள எல்லா முஸ்லிம்களையுமே காதியானிகள் சண்டைக்கழைக்கின்றார்களே யன்றி இந்திய முஸ்லிம்களை மட்டிலும் அவர்கள் சண்டைக்கழைக்கவில்லை என்பதையும் தா. இ. உணர்ந்து கொள்ளுமா? இஸ்லாத்தின் பிரதான முக்கியக் கொள்கைகள் யாது என்பதை தா இ. தெரிந்து கொள்ளாதிருந்ததால்தான் முன்னொரு சமயம் ஹிஸ்புல்லாக்கள் தென்னாட்டில் சுற்றுப் பிரயாணஞ் செய்து காதியானிகளின் வழி

கெட்ட கொள்கைகளை கண்டித்து வந்தபோது அவர்களை கலகக்காரர், பொருமைக்காரர் என்று கூறி வசைப்புராணம் தொகுத்தது. ஆனல் 16 வருடம் கழிந்த பின்னர் இது அகில இந்திய பிரச்சினை என்று அதன் மூளைக்கெட்டியிருக்கின்றது. மேலும் அகில உலக முஸ்லிம்களின் பிரசினை என்று மூளையில் ஏறுவதற்கு இன்னும் எத்தனை பதினறு வருஷங்களாகப் போகிறதோ இறைவன்தான் அறிவான்.

(2) 'தாருல் இஸ்லாம்' காதியானீ அல்லது அஹ்மதிய்யா கொள்கைகளை ஆதரிக்கவுமில்லை; பிரசாரம் புரியவுமில்லை. காதியானிகளின் நபித்துவச் சம்மந்தமான கொள்கையைத் 'தாருல் இஸ்லாம்' என்றும்போல் பலமாய் எதிர்த்தே வருகின்றது"

என்று ஷை வியாசத்தின் மற்றொரு இடத்தில் தா. இ. எழுதி இருக்கிறது. இது நமது ஆக்ஷேபனையின் இரண்டாவது அம்ஸமாகும். தா. இ. தத்துவ இஸ்லாம் என்ற பெயரால் முன்னர் நடைபெற்ற காலத்தில் அஹ்மதியர்களின் பிரதான பிரசாரர்களான காஜாகமாலுத்தீனும். பா. தாவூத்சாவும் அதன் கூட்டு ஆசிரியர்களாக இருக்கவில்லையா? அக்காலத்தில் அப்பத்திரிகையின் மூலம் அஹ்மதிய இயக்கங்கள் பிரகடனப்படுத்தப்படவில்லையா? காஜா கமாலுத்தீன் முகம்மது அலீ இவர்கள் மிர்ஸா குலாம் அஹ்மதின் முக்கிய சிஷ்யர்களல்லவா? அந்த அஹ்மதியர்கள் சார்பாக பா. தா. தென்ஞட்டு மிஷனரியாக இருந்து சம்பளம் பெற்று பிரசாரம் புரியவில்லையா? தாருல் இஸ்லாம் அஹ்மதியர்களின் பத்திரிகை என்று லாகூர் காதியானீ பத்திரிகையான 'பயகாமெஸுலஹ்' தாவாச்செய்து தா. இ. த்தின் முகப்படத்தையும் தனது பத்திரிகையில் பிரசுரிக்கவில்லையா? அன்றியும் அஹ்மதியர்களின் முக்கியஸ்தரான முஹம்மத் அலியால் எழுதப்பட்டு காதியானீ அஹ்மதியக் கொள்கை நிறப்பப்பட்டுள்ள 'பயானுல் குர்ஆன்' என்னும் நூலை அவர்களின் தென்ஞட்டுஏஜண்டான பா. தா. தமிழில்மொழி பெயர்த்து 'ஜவாஹிருல் புர்கான்' என்னும் பெயருடன் விற்பனை செய்யவில்லையா? இஸ்லாம் மார்க்கத்துக்கு முற்றும்மாருன அஹ்மதியக் கொள்கைகள் நிறப்பப்பட்டுள்ள 'இயேசுவின் இரகசியம்' என்னும் நூல் தா. இ. த்தில் விளம்பரப்படுத்தப் படவில்லையா? காதியானீ அஹ்மதியக் கொள்கை நிறைந்துள்ள 'உஸுல பல்ஸபயெ இஸ்வாம்' என்னும் நூல் பா. தா. வால் மொழி பெயர்க்கப்பட்டு 'இஸ்லாமிய ஞான போதம்' என்ற பெயரால் தா. இ. த்தில் கொட்டை எழுத்தால் விளம்பரஞ் செய்து அதனைப் போற்றிப் புகழ்ந்து ஒவ்வொரு முஸ்லிமிடமும் அதி அவசியமாய் இருக்க வேண்டியதென்றும், இஸ்லாத்தைப்பற்றி அநேக கிரந்தங்களியற்ற மகானல் எழுதப்பட்டதென்றும், சகல முஸ்லிம்களும் இப்புத்தகத்தை அவசியம் படிக்கவேண்டுமென்றும் வற்புறுத்துதலுடன் எழுதப்படவில்லையா? எனவே, தாருல் இஸ்லாம் ஆதிமுதல் அஹ்மதிய காதியானிப் பிரசாரம் செய்துவந்ததென்பதும் இன்னமும் அப்பிரசாரத்தைச் செய்து வருகிறதென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்த விஷயம். இந்நிலைமையில் தா. இ. காதியானீ அஹ்மதியக் கொள்கைகளை ஆதரிக்கவுமில்லை; பிரசாரம் புரியவுமில்லை என்று தைரியமாய் சமூகத்தொண்டன் கூற முன்வந்தது எவ்வளவு தூரம் ஏமாற்றமாகுமென்பதை நேயர்களின் கவனத்துக்கே விட்டுவிடுகிறேன். ஆனல் தொண்டன் நினைப்பதுபோல், தா. இ. த்தின் கூற்றுக்களை உலகம் இவ்வளவு சீக்கிரம் மறைந்துவிடாதென்பதையும், இந்த சமயக் குட்டிக்கரணம் யாதொரு பயனையுமளிக்காதென்பதையும் தொண்டன் நன்கு தெரிந்து கொள்வானக.

(3) "ஒரே மதத்தைச் சேர்ந்த இருவர் ஒருவரை யொருவர் அழித்துவிடவேண்டுமென்று கச்சை கட்டிக்கொண்டு நிற்பது, முஸ்லிம்களுக்குள் ஒற்றுமை இல்லை என்பதைப் பகைவர்களுக்குக்காட்டி, அவர்களது தலையீட்டை நாமே வலுவில் வரவேற்பதாகும்" என்று தா. இ. ஷை வியாசத்தின் மற்றொரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறது. இது நமது ஆக்ஷேபனையின்மூன்ருவது அம்ஸமாகும். காதியானிகள் தங்களை 'அஹ்ல இஸ்லாம்' என்று கூறிக்கொள்ளாமல் 'காதியானீ அஹ்மதிய்யா ஜமாஅத்து' என்று அழைத்துக்கொள்ளுவதுடன் அஹ்ல இஸ்லாமியர்களான நம்மை காபிர்களென்றும் கூறுகின்ருர்கள். முஸ்லிம்களாகிய நாம் ஹஸ்ரத் ரஸுலே கரீம் (ஸல்.) அவர்களையும் அவர்களுக்கு முன்னுள்ள நபிமார்களையும் ஒப்புக்கொண்டு விசுவாசிக்கிறோம். காதியானீ-அஹ்மதீ ஜமாஅத்தார் குலாம் அஹ்மதுவை நபீ ரஸுல் மஹ்தீ முஜத்திதில்லி புருஜீ நபியென்றெல்லாம் ஒப்புக்

கொள்வதுடன் வஹீயின்வாசல் அடைபடவில்லை; இனியும் நேர்வழியிற் செல்லும் ஒவ்வொருவருக்கும் வஹீ வரலாம் என்று கூறியும் எழுதியும் வருகின்றனர். இவ்வாறு கூறுபவர்களை முஸ்லிம்களென்று அழைப்பதற்கு சன்மார்க்கம் இடங்கொடுக்கிறதாவென்பதை தா. இ. விடம் கேட்கின்றேன். இந்நிலைமையில் முஸ்லிம்களும் அஹ்மதியா ஜமாஅத்தும் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களென்று கூறலாமா? அவ்வாறு கூறுவது முஸ்லிம்களை ஏமாற்றுவதல்லவா? இவ்வாறு கூறுவதால் இருவகுப்பார்களும் ஒரேமதத்தைச்சேர்ந்தவர்களென்று யாரேனும் எண்ணிக்கொள்ள முன்வருவார்களா? இது முஸ்லிம்களை படுகுழியில் தள்ளப் பார்ப்பதல்லவா?

அஹ்மதியர்கள் திருகுர்ஆனையும் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களையும் அங்கீகரிப்பதாகச் சொல்வதால் அவர்களை முஸ்லிம்களென்று தா. இ. நினைத்துக்கொண்டதா? அவ்வாறு நினைப்பது சுத்தத்தவறாகும். முஸ்லிம்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களையும் இஞ்ஜீல் வேதத்தையும் அங்கீகரிப்பதால் அந்த முஸ்லிம்களை கிறிஸ்தவர்களென்று யாராவது கூறுவார்களா?. முஸ்லிம்கள் இஞ்ஜீல் வேதத்தை ஒப்புக்கொண்டாலும் அதிலுள்ள கட்டளைகள் அனைத்தையும் பின்பற்றி நடக்காமலிருப்பது போல் அஹ்மதிய ஜமா அத்தாரும் திருகுர்ஆனை ஒப்புக்கொண்டபோதிலும் அதிலுள்ள கட்டளைகள் அனைத்தையும் பின்பற்றி நடப்பதில்லை. காதியானீ அஹ்மதிய ஜமா அத்தின் "நபீ" யான மிர்ஸா குலாம் அஹ்மது திருகுர்ஆனின் கட்டளைகளில் சிலவற்றை மன்ஸூக்--மாற்றியிருக்கிறார். அவர் திருகுர்ஆனில் சொல்லப்பட்ட கத்முந்நுபுவ்வத்தை ஒப்புக்கொள்ளுவதில்லை ஆகையால் அவர் திருகுர்ஆன் கட்டளைகள் அனைத்தையும் அங்கீகரிப்பதில்லை. பைபிளில் திர்குர்ஆனுக்கு முரணில்லாத விஷயங்களை முஸ்லிம்கள் ஒப்புக்கொள்ளுவது போல் காதியானீ மதத்துக்கு முரனில்லாத திர்குர்ஆனின் சில கட்டளைகளை மட்டிலுமே அஹ்மதியர்கள் அங்கீகரிக்கின்றனர். இந்நிலைமையில் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் வெவ்வேறு மதத்தவராக இருப்பதுபோலவே முஸ்லிம்களும் சாதியானீ—அஹ்மதியர்களும் வெவ்வேறுமதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை தா. இ. உணராதுபோனது விந்தைக்குறிய விஷயமாகும்.

ஆகவே, காதியானீ அஹ்மதியர்கள் கூறிவரும் மார்க்கமுரணான கூற்றுககளுக்குத்தான் தாராள நோக்கமென்று கூறுவதோ? ஒருவன் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களை கடைசி நபீ என்று ஒப்புக்கொள்ளாது, "மிர்ஸா குலாம் அஹ்மது மற்றொரு நபியாக வந்துள்ளார்" என்று பிதற்றிக்கொண்டு, "இதனை ஒப்புக்கொள்ளாதவரெல்லோரும் காபிர்களாகும்" என்று கூறுவானாயின் அவனை முஸ்லிமென்று அழைக்கலாமா? மேலும்காதியானி - அஹ்மதியர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் ஏற்படும் தர்க்கவாதங்கள் ஒரே மதத்தைச்சேர்ந்த இருவருக்கிடையில் ஏற்படும் தர்க்கவாதமாகுமா? இவைகளுக்கு தா. இ. தக்க பதில்கூற முன்வரும்படி அழைக்கிறேன்.

மேலும் சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற முஸ்லிம் யுவர்கள் மகாநாட்டில் "காதியானிகள் முஸ்லிம்களல்லர்" எனத் தீர்மானிக்கப்பட்டதை தா. இ. ஆவேஷத்துடன் கண்டித்து,

> "காதியானீகள் எந்தக் குற்றற்றைச் செய்கிறார்களோ, அதே குற்றத்தை நாமும் ஏன் இங்கே செய்தல்வேண்டும்? காதியானீகள் அவர்கள் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளாத மற்ற முஸ்லிம்களை 'முஸ்லிம்கள் அல்லர்' என்பதால் நாமும் அதேமுறையில் சென்று 'நம்மை முஸ்லிம்கள் அல்லாதார் என்றுசொல்பவர்கள் தாம் காபிர்கள்' என்று சொல்வது விவேகமாகுமா?............தவறிழைப்பவனை நாம் கண்டிக்கலாம் அவன் செய்யும் தீயபிரசாரத்தையே ஏன் நாமும் செய்யவேண்டும்"

என்றுகூறி, காதியானிகளை நாம் காபிரென்று கூறுவதெல்லாம் நம்மை அவர்கள் காபிர்களென்று கூறுவதற்காகத்தானென்றும், நாம் அவர்களைக் காபிர்களென்று கூறுவது தீயபிரசாரமென்றும் அறிவித்துளது. இஸ்லாத்திலுள்ள முக்கிய கொள்கைகளை ஒப்புக்கொள்ளாதவர்களை நாம் நம்மைச்சேர்ந்தவர்களென்று எவ்வாறு கூறமுடியும்? தா. இ. த்தின் கூற்றுப்படியே காதியானிகள் முஸ்லிம்களின் முக்கிய இரண்டு கொள்கைகளில் முரண்பட்டிருக்கிறதுடன் குலாம் அஹ்மதை அவர்கள் 'நபீ' என்றும் ஒப்புக்கொள்ளும் நிலைமையில் அவர்கள் வேறு, முஸ்லிம்கள் வேறு என்று தீர்மானஞ் செய்வது குற்றமாகுமா? எனவே,

கொள்கை மாறுபட்டு வேறு நபியை அவர்கள் பின்பற்றி திருகுர்ஆனில் சொல்லப்பட்ட எல்லா விஷயங்களையும் அவர்கள் அங்கீகரிக்காததாலேயே நாம் அவர்களை "காபிர்கள்" என்று கூறுகின்றோமேயன்றி எவர்கள் நம்மை காபிர்கள் என்று சொல்லுகிறார்களோ? அவர்கள் தாம் காபிர்கள் என்று நாம் வாதஞ்செய்யவில்லை. இதனை தா. இ. அறிந்து கொள்ளாது மகாநாட்டின் தீர்மானத்தை கண்டிக்க முற்பட்டதேனோ ?

காதியானீ-அஹ்மதியர்கள் இரண்டு முக்கியக் கொள்கைகளில் முஸ்லிம்களை விட்டுப் பிரிந்து இருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்வதற்கு 16 வருட காலத்தைப்போக்கிய தா. இ. முஸ்லிம்கள் காதியானிகளை காபிர்களென்று சொல்லும் உள்வயண மென்னவென்தை அறிந்துகொள்ள இன்னும் எத்தனைகாலம் செல்லப்போகிறதோ யானறியேன். தா. இ. இவ்விஷயத்தை அறிந்துகொள்வதையோ அறியாமலிருப்பதைப்பற்றியோ பற்றி நமக்கு அக்கரைஇல்லை. இதன் உண்மையை நம்மவர் நன்கு தெரிந்துகொள்ளுவதற்காக, இது சம்மந்தமாய் உலக முஸ்லிம் பேறிஞர் விடுத்துள்ள பத்வாவை இவ்விதழில் எடுத்தெழுதுகிறோமாதலின், அந்த பத்வாவின் எந்த இடத்திலும் காதியானிகள் நம்மை காபிர் என்று கூறுவதால் தான் நாமும் அவர்களை காபிர் என்று அழைக்கிறோமென்று எழுதப்படவில்லை என்பதையும், அவர்களுடைய குப்ரியத்தான கொள்கைகளாலேயே அவர்கள் காபிர்களாகிவிட்டார்களென்று கூறப்பட்டிருக்கிற தென்பதையும் நேயர்கள் நன்கு தெரிந்துகொள்ளலாம்.

இந்த குப்ரியத்தான கொள்கையை மக்களிடையே பிரசாரஞ்செய்து அதனைப் பரவச் செய்ய சாத்தான்குளத்தில் சிலர் முயற்சித்த போது அதனைக் கண்டித்து மக்களுக்கு சன்மார்க்கத்தை எடுத்துக் கூற உலமாக்கள் அங்கு சென்றபோது "முஸ்லிம்களைக் காபிராக்க 500 மைல் பிரயாணஞ் சென்றிருக்கிறார்கள் ; இவர்கள் கலகக்காரர்கள் ; மக்களிடையே குழப்பத்தை உண்டுபண்ண முயற்சிப்பவர்கள் என்று உலமாக்கள்மீது அவதூறு கூறி, இது தென்னாட்டில்மட்டும் ஏற்பட்ட குழப்பம்போல் பாவனை காட்டிவந்த தா. இ, பஞ்சாப் அஹ்ரார்கள் சிரத்தைகொண்டு பலத்த போராட்டம் செய்துவருவதைப்பார்த்து, இப்பொழுது காதியானிகள் இரண்டு முக்கிய கொள்கையில் முரண்பட்டிருக்கிறார்கள் என்றும், அவர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ளும் முஸ்லிம்கள் என்றும், அவர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ளாத முஸ்லிம்கள் என்றும் பாகுபாடுசெய்து முஸ்லிம்களிலேயே காதியானீ முஸ்லிமென்றும், காதியானீ அல்லாத முஸ்லிம் என்றும் இரண்டு பிரிவுகளிருப்பதாகக் கூற முன்வந்திருக்கிறது. ஆனால் இவ்விதழின் மற்றொரு அங்கத்தில் விளக்கப்பட்டிருக்கும் பத்வாவைப் பார்த்தபின்னரேனும் உலகத்திலுள்ள எல்லா முஸ்லிம்களும் ஒன்று என்பதையும், காதியானிகள் இவர்களை விட்டு முற்றிலும் வேறுபட்டவர்கள் என்பதையும் தா. இ. உணர்ந்துகொள்ளுவதுடன் காதியானிகள், அவர்கள் கொள்கையால்தான் காபிர்களானார்களேயன்றி முஸ்லிம்களை அவர்கள் 'காபிர்' என்று கூறுவதால் பதிலுக்குப் பதில் முஸ்லிம்களும் அவர்களைக் காபிர் என்று கூறவில்லை என்பதையும் தா. இ. உணர்ந்து தனது கொள்கையை மாற்றிக் கொள்ளுமா ? வல்ல நாயன் கிருபை பாலிப்பானாக. ஆமீன்.

முக்கிய கவனிப்பு

எங்களிடம் குர்ஆன்ஷரீப், அறபுத்தமிழ், சுத்தத்தமிழ், உர்தூ முதலிய பற்பல பாஷைகளிலுமுள்ள அநேக கிதாப்கள் சரசமான விலைக்குக் கிடைக்கும். தவிரவும் யாவரும் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த "உசூலுல்அஸ்னா-பீ-உஸூலுல்ஹுஸ்னா" என்னும் 18 மௌலிது வகைராக்கள் சேர்ந்த நூல், 21 மௌலிது, மற்றும் பைத்துகளுடன் அச்சாகி வெளிவந்திருக்கிறது. வேண்டுவோர் உடனே ஆர்டர்செய்யவும்.

கிரயம், கலிகோபைண்டு ரூ. 6-0-0 ; தோல்பைண்டு ரூ. 7-0-0. போஸ்டேஜ் வேறு.

K. M. மௌலவீ சுல்த்தான் அஹ்மது சாஹிப்,
1/222, அங்கப்ப நாய்க்கன் தெருவு,
ஜி. டி., மதராஸ்.

காதியானீ மதக்கொள்கை சம்மந்தமாய் உலமாக்களின் பத்வாக்கள்

சென்னை மாகாணத்திலுள்ள கர்னூல் அறபிக் கலாசாலையின் தலைமை ஆசிரியரான மௌலானா அப்துஸ் ஸலாம் ஸலீம் ஹஜார்வீ அவர்கள், காதியானீ மதக்கொள்கைகளைக் குறிப்பிட்டு இஸ்லாமிய உலகத்திலுள்ள பேரறிஞர்களிடம் ஐயவினா ஒன்று விடுத்திருந்தார்கள். அதற்கு பலதேசங்களிலுமுள்ள முஸ்லிம் பேரறிஞர்கள் பதில் அளித்துள்ள விபரம் வருமாறு:—

மிர்ஜாவின் தவறான கோள்கைகள்

1. "எனக்குப் பின் 'அஹ்மது' என்று பெயருள்ள ஒரு றஸூல் வருவார் என்பதை நற்செய்தி கூறுபவனாக யான் வந்திருக்கிறேன்" என்ற கருத்தமைந்த திருகுர்ஆன் வேதவசனம் என்னைப்பற்றித் தான் முன்னறிவிப்புச் செய்கிறது. (இஜாலயெ ஔஹாம் - முதற் பதிப்பு-பக்கம் 673).

2. நான் மஹ்தியே மஸ்ஊதாகவும், சில நபிமார்களைப் பார்க்கினும் மேலானவனாகவு மிருக்கிறேன் (மிஃயாருல் அக்பார்).

3. எல்லா உயிர்களும் முற்றுப் பெரும்படியான மினாராவின் மீது எனது பாதங்களிருக்கின்றன. (குதபயெ இல்ஹாமிய்யா பக்கம் 35).

4. என்னை வேறு எவருடனும் ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள் (சியால்கோட் லெக்சர் பக்கம் 33).

5. நான் ஹஸன் ஹுஸைன் அலைஹி மஸ்ஸலாம்களைப் பார்க்கினும் சிறந்தவன் (தாபிஉல் பலா-பக்கம் 13).

6. நான் நபியாக இருக்கிறேன். இந்த உம்மத்தில் நபியுடைய வேலை எனக்கு மட்டும் சொந்தமாக இருக்கிறது (ஹக்கீக்கத்துல்வஹீ. பக்கம் 291).

7. ஜனங்களே! நான் உங்களிடத்தில் அல்லாஹ்வின் தூதராக வந்திருக்கிறேன். (ஹக்கீகத்துல் வஹீ. பக்கம் 163.)

8. என்னை நிராகரிப்பவர் காபிர். (ஹக்கீக்கத்துல்வஹீ பக்கம் 391).

9. எனக்கும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்குமிடையில் வித்தியாசப் படுத்துபவர் என்னை அறியாதவராவர். (குத்பயெ இல்ஹாமிய்யா-பக்கம் 30.)

10. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு சந்திரகிரண முண்டாயிற்று. ஆனால், எனக்குச் சந்திரகிரணமும், சூரிய கிரணமுமுண்டாயிற்று. (இஃஜாஸே அஹ்மதீ, பக்கம் 40).

11. நூற்றுக்கணக்கான நபிமார்கள் சம்பந்தமாக நம்முடைய முஅஜிஸாக்களும், முன்னறிக்கைகளும் மேம்பட்டுவிட்டது. (ரிவ்யூ, முதல் வால்யூம்).

12. நானே அல்லாஹ்வாக இருப்பதாக நான் சொற்பனம் கண்டேன். நான் அப்படியே இருக்கிறேன் என்று உறுதிகொண்டேன். அதற்குப்பிறகு நான் வானங்களையும் பூமிகளையும் சிருஷ்டித்தேன். (ஆயீனயெகமாலாத்).

13. அல்லாஹ் அர்ஷின் மீதிருக்கிறான். என்னைப் புகழ்கிறான். என்பால் வருகிறான். (அஞ்சாமெ ஆத்தம்-பக்கம் 55).

14. அல்லாஹ் எவருக்கும் கொடுக்காத கண்ணியத்தை எனக்குக் கொடுத்திருக்கிறான். (ஹக்கீக்கத்துல்வஹீ-பக்கம் 102).

15. நிச்சயமாக நீர் முர்ஸல்களிலொருவர் என்று அல்லாஹ் என்னிடம் கூறினான். (ஹக்கீக்கத்துல்வஹீ-பக்கம் 107).

16. நீர் இல்லையெனில் நான் வானங்களைச் சிருஷ்டித்திருக்கமாட்டேன் என்று அல்லாஹ் எனக்குக் கூறினான். (ஹக்கீக்கத்துல்வஹீ, பக்கம் 99).

17. என்மகனே! கேள். என்று அல்லாஹ் என்னை நோக்கிக் கூறினான். (அல்புஷ்ரா பக்கம் 99).

மிர்ஜாவின் இந்தக் கொள்கைகளை வினாக் கேட்பவர் குறிப்பிட்டு உலமாக்களே! இவை காதியானீ அகீதாக்களாகும். இவைகளையல்லாமல் இன்னும் கணக்கற்ற பல வழிகேடான

கொள்கைகளுமிருக்கின்றன. தாங்கள் இந்த வகுப்பாரைப்பற்றி தங்களது அபிப்பிராயங்களை எழுதுவீர்களாக! பத்வா வெளிப்படுத்துவீர்களாக. என்று வினவி இருந்தார். இது சம்மந்தமாக வந்த பதில்கள் முழுவதையும் எழுதுவதென்ருல் இவ்விடத்தில் இடம் பெருது. ஆகவே, யான் இந்த பத்வாக்களின் கருத்துகளை ஒரு வாக்கியத்தில் குறிப்பிட்டு அந்த பத்வாக்களை விடுத்த பேரறிஞர்களின் பெயர்களை இதனடியில் குறிப்பிடுகின்றேன்.

பதில்

காதியானிகள் இஸ்லாத்தின் வட்டத்தை விட்டுப் புறம்பானவர்கள்.

1. அல்லாமா ஷெய்கு அப்துல்லா சாகிப் (மக்கா முகர்ரமா).

2. அல்லாமா ஷெய்கு அப்துல் காதிர் சாகிப் (மக்கா முகர்ரமா).

3. அல்லாமா ஷெய்கு உபைதுல்லா சாகிப் (மக்கா முகர்ரமா).

4. அல்லாமா ஷெய்கு முஹம்மது ஹாஷிம் சாகிப் (மக்கா முகர்ரமா).

5. அல்லாமா ஷெய்கு முஹம்மது ஸாலிஹ் சாகிப் (மக்கா முகரர்மா).

6. அல்லாமா ஷெய்கு முகம்மது முக்தார் சாகிப் (மக்கா முகர்ரமா).

மேலே கூறப்பட்டுள்ள அக்கீதாக்களை ஒப்புக்கொண்டு மெய்யென்று நம்பும்வர் நிச்சயமாக காபிராகவும் மர்தூதாகவும் இருக்கிருர்.

7. அல்லாமா ஷெய்கு அப்துல் காதிர்சாகிப் (திருப்போலி).

8. அல்லாமா ஷெய்கு அப்துல் பாக்கி சாகிப் (மதீனமுனவ்வரா).

9. அல்லாமா ஷெய்கு உமரீ சாகிப் (மதீன முனவ்வரா).

10. அல்லாமா ஷெய்கு அபூஸாலிஹ்சாகிப் (மதீனமுனவ்வரா).

குலாம் அஹ்மது காதியானியும், அவரை நபியென்றே முஜத்திதென்றே நம்புபவர் அனைவரும் காபிர்கள்.

11. அல்லாமா அப்துல் அஜீஸ்ரஷீத் (தௌஹீத் பத்திராதிபர், ஜாவா).

12. அல்லாமா அலிய்புப்னு அப்துல்லா (ஜாவா).

13. அல்லாமா ஸெய்யித் உமர் (ஜாவா).

14. அல்லாமா உஸ்தாது ஹஸன் (ஜாவா).

காதியானிகள் இந்தகுப்ரியத்தான கொள்கைகளை ஒப்புக்கொள்கிருர்கள். கத்தமுல் முர்ஸலீன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பின் ஒரு பொய்யனை—நயவஞ்சகனை நபியென்று நம்புகிருர்கள். ஆதலால், இவர்கள் நிச்சயமாக இஸ்லாத்தின் வட்டத்தை விட்டுப் புறம்பாகி விட்டார்கள்.

15. அல்லாமா அப்துல்கரீம் ஜர்மானூஸ் (ஹங்கேரி)

16. அல்லாமா அப்துல் அஜீஸ். அஜ்ஜுஹா. "அஸ்ஸிராத்" பத்திராதிபர்(பகுதாது).

17. அல்லாமா அலியுப்னு அஹ்மது (ஹலரமௌத்து.)

நபித்துவத்தை தாவாச் செய்த குலாம் அஹ்மது காதியானியும் அவருடைய ஜமா அத்தினர் அனைவரும் காபிர்களாகவும் முர்த்தத்துகளாகவுமிருக்கிருர்கள்.

18. அல்லாமா முஹம்மது ஜீலானி (அந்தூஸ்).

18. அல்லாமா அஹம்மது ராகிப் (ரிம்யாத்).

20. அல்லாமா முஹம்மது யூனுஸ் ரயிஸ் (அந்தர்ஸியா).

21. அல்லாமா அல்ஹாஜ் அப்துர் ரஹ்மான் காஸிம் ஜமாலுத்தீன் (ஆப்பிரிக்கா).

22. அல்லாமா ஸெய்யித் அப்துல்லா (யமன்).

23. அல்லாமா இப்ராஹீம் (சிரியா).

24. அல்லாமா அஹ்மது ஹம்தீ (எகிப்து).

25. அல்லாமா அப்துல் ஹமீது (எகிப்து).

மேலே கூறப்பட்ட குப்ரியத்தான கொள்கைகளை மெய்யென்று நம்புபவர் அனைவரும் காபிர்கள். இவைகள் குப்ரியத்தான கொள்கைகள் என்பதில் எவ்விதச் சந்தேகமும் கிடையாது.

26. அல்லாமா அலிய்யுல் அகர்ரு (திமிஷ்கு).

27. அல்லாமா முஹம்மதுதீன் (சீன).

28. அல்லாமா ஸெய்யித் அஹ்மது (குதுஸ்).

29. அல்லாமா முஹம்மது அறபி (இராக்).

30. அல்லாமா ஹாமித் ஸவ்வான் (பலஸ்தீனம்).

மேலே கூறப்பட்ட அல்லாமாக்களேயல்லாமல் கீழ்நாட்டின் பிரசித்திபெற்ற மாபெரும் தலைவரான அமீர் ஷக்கேப் அர்ஸலான் அவர்களிடமும் பத்வாக் கேட்கப்பட்டது. இப் பெரியார் அரபி லிட்டரேச்சர்—இலக்கியத்தில் மாபெரும் நிபுணராக இருப்பதுமட்டு மல்லாமல், சரித்திரக்கலையில் மிகப் பெரிய அறிஞராகவும் இருக்கிறார். இவர் அறபிப் பாஷை அல்லாமல் ஆங்கில பாஷையினும் பாண்டித்துவம் பெற்றவர். இவருடைய வியாசங்களேப் பிரசுரிப்பதை உலகப் பத்திரிகைகள் தங்களுக்குக் கிடைத்துள்ள பெரும் பாக்கியமாகக் கருதுகின்றன. இதுவிஷயமாய் அவர் அடியிற்கண்டவாறு தமது பதிலே அளித்துளார்:—

"நான் முப்தியாகவு மில்லே; அஜ்ஹர் கலாசாலேயின் ஷெய்காகவுமில்லே; அல்லாமா ரஷீது ரிஜா போன்ற சிறந்த அறிஞனுகவுமில்லே. ஆனல், கண்ணியம் பொருந்திய உஸ்தாது முகம்மது அப்துஸ்ஸலாம் என்னே இவ்விஷயத்தில் பத்வாக் கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கிறார். ஆதலால், நான் இதற்குப் பதில் கூறுகிறேன். மேலே கூறப்பட்ட விஷயங்களில் ஏதேனும் ஒன்றை நம்புபவர்கூட காபிராகிவிடுவார் என்பது நிச்சயம். (ஒப்பம்) அமீர்ஷக்கேப் அர்ஸலான்."

இம்மாதிரியே அல்லாமா தகிய்யுத்தீனில் ஹிலாலீயும் இதர பிரபல உலமாக்களும் எகிப்திலிருந்து நீண்ட பத்வாக்களே எழுதி இருக்கிறார்கள். விரிவஞ்சி விடுத்தனம்.

சோதரீர்! காதியானிகள், மிர்ஜாயிகள், அஹ்மதிகள் ஆகிய யாவரும் காபிர்கள் என்று நம் உலமாக்கள் கூறியதற்கேற்ப நாம் சொல்லி வந்ததை நம்மவரிற் சிலர் நம்புவதில்லே. அவர்கள் காதியானிகள்மீது அபிமானங்கொண்டிருப்பதின் காரணமாக நாம் கூறுபவைகளே துவேஷத்தால் கூறுவதாகவோ, குறுகிய மனப்பான்மையால் கூறியதாகவோ கருதிவந்தனர். அப்பால், குர்தாஸ்பூரில் பஞ்சாப் அமீருஷ்ஷரீஅத் அல்லாமா அத்தாவுல்லா ஷாஹ் சாகிப் புகாரீ அவர்கள்மீது அரசாங்கத்தார் வழக்குத் தொடுத்ததால் காதியானிகளின்கொள்கை சம்மந்தமாய் நம்மவருக்குக் கொஞ்சம் கண் திறந்தது; இப்பொழுது உலகமுஸ்லிம் பேரறிஞர்களின் மார்க்கத் தீர்ப்புகளேயும் சமர்ப்பித்துவிட்டோம். வமா அலேனு இல்லல்பலாக்.

ஓர் முக்கிய விஷயத்தை நாம் இங்கு குறிப்பிடுவது கொண்டு நண்பர்கள் சந்தோஷமடைவார்களென நம்புகிறோம். அதாவது, சமீபத்தில் மிஸர்தேசத்தில் மிர்ஸாயிகளின் மாயவலேயில் சிக்கிக்கொண்ட 30 இள வாலிபர்கள் இந்த பத்வாவைப் பார்த்தபின் அந்த மிர்ஸாயிக் கொள்கையைவிட்டு தவ்பாச்செய்து சன்மார்க்கத்தின் பக்கல் திரும்பிவிட்டார்கள் என்பதே.

சத்திய இஸ்லாத்தின் அசத்தியப் பிரசாரம்

நாகூர் M. K. A.-வின் ஆராய்ச்சித் திறமை.

(சென்றமீ 317-ம் பக்கத் தொடர்)

ச. இ. குறிப்பிட்டிருந்தவைகளுக்கு அநேகமாய் சென்ற மாத இதழில் பதில் கூறப்பட்டுப் போயிற்று. ஆயினும் அவைகளில் மற்றுஞ்சிலவற்றை இவண்விவரிப்பாம்:—

நபிகள்பிரான் (ஸல்.) அவர்கள் தங்களுடையவும் தங்களுக்குப் பிறகுள்ள மூன்று தலைமுறைகளுடையவும்விஷயங்களேக்குறித்து, இந்நானூறு வருடங்களும் மேன்மையும் நன்மையும் பொருந்திய காலங்களென அருள் செய்திருக்கிறார்கள். இதன் கருத்தாவது, இக்காலங்களில் நன்மையாளர் மிகைத்திருப்பார்களென்பதாகும். ஏனெனில், நபீ அவர்கள் காலத்திலேயே முனபிக்குகள் தோன்றி இஸ்லாத்துக்கு சொல்லொணு துன்பத்தை இழைத்தனர்; தங்களுக்கென மஸ்ஜித் ஒன்றையும் நிர்ணயித்துக்கொண்டு அதனே இஸ்லாத்தின் சூக்ஷி ஆலோசனே மண்டபமாக்கி வைத்திருந்தனர். இதனே திருகுர்ஆன் 'மஸ்ஜிதலிரார்' என்று வர்ணிக்கிறது. இவ்விஷயம்

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு அறிவிக்கப்பட்டவுடன் அதனை கொளுத்திவிடுமாறு கட்டளை பிறப்பித்துவிட்டார்கள்.

மேலும் "என்னுடைய உம்மத்துகளில் 33 பேர்கள் தங்களை அல்லாவுடைய நபீ என்று தாவாச் செய்வார்கள் ; அவர்கள் அடங்கலும் பொய்யர்களாகும்; நான் இறுதி நபீ; எனக்குப் பின் எந்த நபியுங் கிடையாது" என்று பெருமானார் அருள்செய்தார்கள். இதற்கேற்ப நபீ அவர்கள் காலத்திலேயே மூன்று பேர் நுபுவ்வத்தை தாவாச் செய்தனர். அதில் 'அஸ்வதுல் அனஸீ' என்பான் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் காலத்திலேயே இக்குற்றத்திற்காகக் கொல்லப்பட்டுப் போய்விட்டான். 'துலைஹா' என்ற மற்றொருவனிடம் ஹஸ்ரத் ஸித்திக் அக்பர் (ரலி.) அவர்கள் கிலாபத் காலத்தில் ஹஸ்ரத் ஸைபுல்லா காலிதிப்னுவலீத் (ரலி.) அவர்கள் ஒரு பட்டாளத்தைத் திரட்டிப்போய் போர் புரிய நேர்ந்ததன்பயனாக அவன் தோல்வியுற்று ஷாம்தேசம் ஓடிப்போயிருந்தவன் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் கிலாத் ஆக்ஷிகாலத்தில் கலீபா அவர்களிடம் வந்து தௌபாச்செய்து பரிசுத்த இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார். மூன்றாவது 'முஸைலமத்துல்கத்தாப்' இவனும் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் காலத்திலேயே நுபுவ்வத்தை தாவாச் செய்தவனவன். இவன் 'எமாமா' என்னும் தேசத்தில் 40 ஆயிரம் பேர்களை தன்னுடன் சேர்த்துக் கொண்டதால் ஹஸ்ரத் ஸித்திக் அக்பர் (ரலி.) அவர்கள் காலத்தில் அவனுடன் பலமான போர்புரியநேர்ந்தது. இப்போரிலும் ஸைபுல்லா காலிதுப்னு வலீத் (ரலி.) அவர்கள்தான் சேனாபதியாக இருந்தார்கள். கடும் போருக்குப்பின் அந்த மலஊன் கொல்லப்பட்டான். இம்மாதிரி குலபாயெராஷிதீன்கள் காலத்திலேயே தங்களை நபீ என்று தாவாச்செய்த போலிகளையும் புறட்டர்களையும் தீனைவிட்டு மாறிய முர்தத்துகளையும் அரும்பிரயாசையோடு அடக்க நேர்ந்திருக்கிறது.

மேலும், நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் காலத்தில் ஹிஜாஸில், முக்கியமாக மக்காமதீனா ஆகிய நகரங்களில் நாயகம் (ஸல்.) அவர்களது ஸஹாபிகள் எவ்வளவு ஒற்றுமையாகவும் அந்நியோன்யமாகவும் இருந்தார்களோ அந்த அந்நியோன்யத்தில் ஒரு மயிரிழைகூடப் பிரழாமல் அதற்குப் பின்னுள்ள காலத்தில் தாபியீன்களும் மற்றவர்களும் இருந்தார்களா? ஹஸ்ரத் செய்யிதுனா இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களும் அவர்கள் குடும்பத்தார்களும் ஷஹீதாக்கப்படவில்லையா? இது முஸ்லிம்களிலுள்ள ஒரு கூட்டத்தாரின் பாதகச் செயல்களல்லவா? ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்கள் யாரால் ஷஹீதாக்கப்பட்டார்கள்? அவர்கள் ஷதீதாவதற்குக் காரணமென்ன? இவைகளெல்லாம் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களுக்குப்பின் இஸ்லாமிய உலகில் தோன்றிய பித்னாக்களல்லவா? இவர்களெல்லோரும் பெருமானார் (ஸல்.) அவர்கள் சத்போதனையின்படி நடந்திருப்பார்களாயின் இந்த கொடிய அனாச்சாரமான காரியங்கள் நடைபெற்றிருக்குமா?

ஆகவே, இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது யாதெனில், பரிசுத்தமான அக்காலங்களிலும் இவ்வாறான துஷ்டர்களின் நிஷ்டூரம் இருந்துகொண்டுதானிருக்கும் என்றும் கலீபாக்களும் இமாம்களும் மகான்களும் பெரியார்களும் அவைகளை ஒழித்து சீர்திருத்தம் செய்துவைப்பார்கள் ; 400 ஆண்டுகளுக்குப்பின் கெடுதி மிகைத்து அதனை அடக்கி சீர்திருத்தம் செய்பவர் குறைந்துவிடுவர் என்பதுதான்பெருமானார்நபிகள்திலகம் (ஸல்.)அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய ஹதீதின் கருத்தாகும் என்பதே. இதற்கேற்ப 400 ஆண்டுகளுக்குப் பின் ஹஸ்ரத் ஷெய்குனா முஹ்யித்தீன் அப்துல் காதிர்ஜீலானி (றஹ்.) அவர்கள் காலத்தில் இஸ்லாமியஉலகம் சீர்குலைந்து குப்ர் ஷிர்க்கு நிரம்பி ஒழுக்கம் வழுக்கடைந்திருந்தது ; அதனை ஹஸ்ரத் அவர்கள் சீர்திருத்தி ஒழுங்குசெய்து வைத்தார்கள் என்று கூறுவது பொருத்தமற்ற விஷயமாகுமா? இது பெருமானார் (ஸல்.)அவர்கள் முற்கூட்டியே அறிவித்த விஷயங்களல்லவா? இவ்விஷயங்களையெல்லாம் நன்கு தெரிந்துகொள்ளாது சரித்திர ஆராய்ச்சியற்ற முறையில் ச. இ. தர்க்க விவாதம் புரிய முன் வந்திருப்பது எவ்வளவு தூரம் விபரீதமாகுமென்ற விஷயத்தை நேயர்களிடம் விட்டுவிடுகிறோம்.

போகட்டும், வெகு தூரத்துக்குச் செல்ல வேண்டாம். றஹ்மான் கிருபையால் இந்தியாவில் முஸ்லிம்கள் ஒரளவு இருக்கின்றனர். இவர்களனைவரும் நாயகம் (ஸல்.) அவர்களின் போதனையின்படியே ஒரு சிறிதும் பிரழாமல் நடக்கின்றார்கள் என்று நிரூபர் அபிப்பிராயப் படுகின்றாரா?

33 பொய்யர்கள் தங்களை நபியுல்லாவென்று பொய் தாவாச் செய்வார்களென நபியுல்லாஹ் (ஸல்.) அவர்கள் அறிவித்த முன்னறிவுக்கேற்ப பற்பல காலத்திலும் பற்பலரும் தாவாச் செய்தனர். முஸ்லிம் பெற்றோர்களின் வயிற்றில்பிறந்து முஸ்லிம்களின் பெயரைவைத்துக்கொண்டு இந்தியாவின் பெயர் நாமத்தைக் கெடுக்கவந்த மிர்ஸா குலாம் அஹ்மது காதியானீ தோன்றி தன்னை நபீ என்று தாவாச் செய்த பயித்தியகாரக் கூற்றை பஞ்சாபிலுள்ள ஒரு கூட்டத்தார் ஒப்புக்கொண்டு அதனை வற்புறுத்தி பிரசாரஞ் செய்து வருவதும், தென்னாட்டு காதியானிகள் அவர்களிடம் ஊழியம் பெற்று அத்தீயகொள்கையை தென்னாட்டுமுஸ்லிம்களிடையே பரவச் செய்வதற்கு முயற்சி செய்துவருவதும், தன்னை நபீ என்று தாவாச் செய்த குலாம்அஹ்மதை சீர்திருத்தகாரர், இஸ்லாத்துக்காக அருந் தொண்டுசெய்தவர் என்றெல்லாம்கூறிவருவதும், இத்தீய பிரசாரத்தை ஒழிக்க உலமாக்கள் ஆங்காங்கு சென்று பிரசாரஞ்செய்து மக்களுக்கு சத்தியத்தை எடுத்து விளக்கிவருவதும் இவருக்குத் தெரியாதா?

நம் நாட்டில் நறைபூண்டுகளேபோல் தோன்றிய இவ் வழிகெட்ட கொள்கைகளை உலமாக்கள் ஒழித்து சன்மார்க்கத்தை மக்களுக்கு எடுத்து விளக்கினார்களென்று கூறுங்கால், “நபிகள் திகலம் அவர்களின் சத்போதனைகள் அவர்கட்குப்பின் ஏற்றுக்கொள்ளப்படவில்லை; அல்லது அவர்களின் பிரசாரத்தால் ஒரு பயனும் விளையவில்லை என்பதாய் வெகு தெளிவாய்க் காட்டுகிறது” என்று எழுதுவது எவ்வளவு விவேகமற்ற தன்மையும் சரித்திர ஆராய்ச்சிக் குறைவுமாகுமென்பது நேயர்கட்குத் தெரியாத விஷயமன்று.

தவிர ஷெய்குனா முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் காலத்தில் ஒழுக்கம் வழுக்கடைந்திருந்தது என்று நாம் கூறியதற்கும், பக்தாது நகரில் பெரிய கல்வி விற்பன்னர்கள் காணப்பட்டார்கள் என்று எழுதியதற்கும் ஏதோ முரண் காணப்படுவதேபோல் நிருபர் நடிக்கிறார். பகுதாது நகரில் பெரிய கல்வி விற்பன்னர்கள் இருந்தது, இஸ்லாமிய உலகில் ஒழுக்கம் வழுக்கடைந்திருப்பதற்கு முரண்பட்டதா வென்பதையும், ஒரு பட்டிணத்தில் கல்வியும் அதனை கற்றோரும் இருப்பது கொண்டு இஸ்லாமிய உலகம் அந்தகாரத்தைவிட்டு நீங்கிவிடுமா வென்பதையும் நிருபர் விவரித்துக் கூறுவாரா? தென்னாட்டின் சிற்சில இடங்களில் வழிகெட்ட காதியானிக் கொள்கைகள் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறதென்று கூறி வருவதற்கிடையே சென்னை வேலூர் முதலிய இடங்களில் மார்க்கக் கலாசாலைகளும் பெரிய பெரிய கல்வி விற்பன்னர்களும் காணப்படுகின்றார்கள் என்று கூறினால் இவ்விரண்டிற்குமிடையில் முரண் காணப்படுகிறதே, காலாசாலைகளும் கல்வி விற்பன்னர்களும் சிறந்து விளங்கும் போது வழிகெட்ட கதியானீ கொள்கையால் தேசம் சீர்குலைந்து போயிருக்கிறது என்று எவ்வாறு கூறமுடியும் என்று எவரேனும் கூறத் துணிவாரா? ஒருக்காலும் துணியமாட்டாரென்பது திண்ணம். இந்நிலைமையில் ச. இ. இது விஷயமாய் விதண்டாவாதம் புரிவது விபரீதக் கூற்றன்றோ? மேலும் நாம் ஞானதினகரனில் கூறியுள்ள விஷயங்கள் முழுதும் இதர முஸ்லிம் உர்து பத்திரிகைகளில் இருப்பதாக எடுத்துக் காட்டினால் பத்திரிகை பத்திரிகை என்று பரதவிக்கும் நிருபர் அதனை ஏற்று வாயடங்கி அமருவாரா? இதல்லாமல் வீண் விதண்டாவாதங்கள் செய்துகொண்டே போவதானால் யாதொரு பிரயோசனமு மேற்படப் போவதில்லை என்பதை ச. இ. நாகூர் நிருபர் நன்கு தெரிந்துகொள்வாராக.

நேயர்கட்கு!

நமது “ஹிபாஜத்துல் இஸ்லாம்” மாசிகைகளில், 1930-ம் ஆண்டு மார்ச்சுமீ அதாவது மலர் 1, இதழ் 2; 1931-ம் ஆண்டு ஜனவரிமீ அதாவது மலர் 2, இதழ் 1; ஜுலைமீ அதாவது மலர் 2, இதழ் 7; 1932-ம் ஆண்டு ஜனவரிமீ அதாவது மலர் 3, இதழ் 1; ஏப்ரல்மீ அதாவது மலர் 3, இதழ் 4; 1934-ம் ஆண்டு மேமீ அதாவது மலர் 5, இதழ் 5; 1935-ம் ஆண்டு ஜனவரிமீ அதாவது மலர் 6, இதழ் 1; ஜூன்மீ அதாவது மலர் 6, இதழ் 6. இப்பத்திரிகைகள் நமக்குத் தேவையிருப்பதால் இவைகளை அனுப்பிவைப்பவர்கட்கு மாசிகை 1-க்கு 8-அணா கொடுக்கப்படும்.

மானேஜர், ஹி. இ.

அசத்தியப் பிரசாரத்திலும் அசட்டுத்தனமா ?

சோதரீர்! நமது ஹி. இ. த்தின் ஜூலைமாத இதழில் செய்யிதுனா வ ஷெய்குனா முஹிய்யித்தீன் அப்துல் காதிர்ஜிலானீ (ரஹ்) அவர்களது சரித்திரச் சாரத்தை "ஞானதிகரன்" என்றமகுடத்தின்கீழ் பிரசுரித்திருந்தோம். இக்கட்டுரையில் ஏதோ தவறிருப்பதாக 'சத்திய இஸ்லாம்' என்ற பத்திரிகை "ஹிபாஜத்துல் இஸ்லாத்தின் புதுமைகள்" என்ற மகுடத்தின்கீழ் நாகூர் M. K. A, என்னும் பெயரால் ஒரு வியாசம் எழுதியிருந்தது. இவ்வியாசத்தை மறுத்து "சத்திய இஸ்லாத்தின் அசத்தியப் பிரசாரம்" என்னும் மகுடமிட்டு நாம் ஒரு வியாசம் பிரசுரித்திருந்தோம். நம்முடைய இந்த மறுப்புப் பிரசுரத்திற்கு ஏதோ மறுப்புப்போல் ஷை "சத்திய இஸ்லாம்" அதே நாகூர் ஆசாமி பெயரால் "ஹிபாஜத்துல் இஸ்லாத்தின் தடுமாற்றம்" என்று மகுடமிட்டு ஒரு வியாசம் பிரசுரித்திருக்கிறது. இவ்வியாசம் விஷயத்தை யுணர்ந்துகொள்ளாது தடுமாற்றமான முறையில் எழுதப்பட்டிருப்பதால் அதனை யாம் கண்டிக்க முன்வந்துள்ளோம். ஆனால் ஒருவிஷயத்தைமட்டிலும் சுட்டிக்காட்டி வாசக நேயர்களிடம் அனுமதிகோர விரும்புகிறோம். அதாவது, 'சத்திய இஸ்லாம்' இதுசமயம் ஆயிரம் வியாசம் எழுதுவதானாலும் அவை ஒவ்வொன்றுக்கும் தக்க மறுப்பு எழுத யாம் தயங்கோம். ஆயினும் பொதுஜன நன்மையை உத்தேசித்து இப்பத்திரிகை நடத்தப்படுவதால் ஒரு விஷயத்திற்கு மறுப்பாகப் பின்னும் பின்னும் பற்பல விஷயங்களைக் கூறிக்கொண்டிருப்பதால் வேறு பிரயோசன மளிக்க வல்ல பலவியாசங்கள் இடமின்மையால் தாமதப்படக் கூடும். ஆதலின் வாசகநேயர்கள் இது சம்மந்தமாய் நாம் தொடர்ந்து மறுப்பு எழுதிக்கொண்டே போக இஷ்டப்படுவார்களாயின் அதிலீடுபடுவோ மென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆகவே, இக்கட்டுரையில் நமது ஹி. இ. மாசிகை விடுத்துளதென்ன? அதற்கு சத்திய இஸ்லாம் எழுதியதென்ன? என்ற விவரங்களை ஈண்டு எடுத்தெழுதிவிட்டு பின்னர் ச. இ. புரியும் வாதங்களுக்குத் தக்க மறுப்புக் கொடுக்கிறோம்.

ஹி. இ. ஜூலை மீ' இதழில் 'ஞானதினகரன்' என்ற மகுடமிட்டு எழுதிய வியாசத்தின் ஒருபாகம் வருமாறு:—

"குலபாயே ராஷிதீன்களுக்குப் பிறகு 'பனூஉமய்யா' வம்சத்தினர் இஸ்லாமிய நாட்டில் அரசுபுரிந்து வந்தனர். இவர்களிற் பலர் அரசுசெலுத்தியபின் பனூஅப்பாஸ், பனூபாத்திமா ஆகிய வம்சத்தார் இவர்களது ஆட்சிக்கு விரோதமாகத் தோன்றி இஸ்லாமிய தேசங்களை ஆட்சிபுரியவும் கிலாபத் பதவியை வகிக்கவும் தாங்கள்தாம் அருகதையுள்ளவர்கள் என்று தாவாச்செய்தனர். இதனால் நாட்டில் கட்சிப்பிளவும், வேற்றுமையும், துவேஷமும், கலகமும், அரசாங்க அடக்குமுறையும் தாண்டவமாடிற்று, இறுதியாக பனூஅப்பாஸ் வம்சத்தார் அதிகாரத்துக்கு வந்தனர். பிறகு இவ்வம்சத்தாரிட மிருந்து ஆட்சியை மாற்றிவிட வேண்டுமென்பதற்கான சதியாலோசனைகளும் உள்நாட்டுக் குழப்பங்களும் நடைபெற்றுக் கொண்டே இருந்தன. இதனால் இவ்வம்சத்தாரின் பலமும் அதிகாரமும் நாளுக்குநாள் குன்றிவிட்டதால் வேறு பலர் தேசத்தில் செல்வாக்குப்பெற்றிருந்தனர். அப்பாஸிய்யா வம்சத்தினர் கலீபா என்ற பதவியை மட்டிலும் பெயருக்கு மாத்திரம் வகித்துவந்தனராயினும் உண்மையான அதிகாரம் வேறு அரசவம்ஸத்தினரிடமிருந்தது. இவ்வித நிலைமையில் நாட்டிலுள்ள ஜனங்கள் சரிவர கவனிக்கப்படாமலும், சத்திய இஸ்லாத்தின் சரியான நேர்வழிகாட்ட வசதியில்லாமலும் நாட்டில் குப்று, இல்ஹாத் முதலிய கொள்கைகள் பரவியிருந்தன. யூதரும் கிறிஸ்தவரும் நாஸ்திகர்களும் தங்களது வழிகெட்ட கொள்கைகளை நாட்டில் பிரசாரம் புரிவதும், அவர்களை முஸ்லிம் தர்க்க சாஸ்திரிகளும், விதண்டாவாதிகளும் எதிர்த்து பிரசங்கம்புரிவதும், விவாத சபைகள் கூடுவதுமாக இருந்தது. இதனால் மக்களின் நாட்டம், தக்வா பக்தி சம்பந்தப்பட்ட கலைகளில் செல்லாமல் தர்க்க சாஸ்த்திரம் முதலிய கலைகளிலேயே கவனம்தோன்றி மெஞ்ஞானம் மறைந்திருந்தது. தர்க்கவாதிகளின் செல்வாக்கு நாட்டிலிருந்ததால் ஆங்காங்கு அஸ்ஹாபுல்லாஹிர், அஸ்ஹா

புல்பாத்தின் (புறக்கல்வியாளர், அகக்கல்வியாளர்) என்ற பெயரால் முஸ்லிம்களின் கொள்கைகளும் எண்ணங்களும் மாறுபட்டு இஸ்லாமிய உலகம் சீர்குலைந்து அஞ்ஞானம் எனும் அந்தகாரத்தால்மூடப்பட்டு, ஒழுக்கம் வழுக்கடைந்திருந்தது" என்பதே.

இவ்விஷயம் 'ததுக்கிரத்துல் உப்பாத், 'ஸியருல் அஸ்பியா' முதலிய கிரந்தங்களில் ஹஸ்ரத் உபைதுப்னு ஆஸிம் (ரஹ்.) அவர்களைத் தொட்டும் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. இப்பகுதியை சத்திய இஸ்லாம் ஆக்ஷேபித்தெழுவதாவது,

"ஹிபாஜத்துல் இஸ்லாத்தின் இவ்வருஷத்தைய ஜூலைமாத வெளியீட்டில் எமக்குத் தோன்றும் புதுமைகளை இங்கு குறிப்பிடாதிருக்கமுடியவில்லை. கவனிக்கவேண்டிய விஷயங்களுள் 'ஞானதினகரன்' என்ற கட்டுரையே இங்கு இப்பொழுது எடுத்துக்கொள்ளும் விஷயமாகும். அதில் சில சரித்திர திரிபுகளும் முன்பின் முரண்களும் மலிந்து முஸ்லிம்களைத் தியங்க வைக்கின்றன. அக்கட்டுரையில் முஹ்யித்தீன் ஆண்டகையவர்களுக்கு முன்னிருந்த உலகத்தை விளக்கும்போது, "உலகம் சீர்குலைந்து அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தால் மூடப்பட்டு ஒழுக்கம் வழுக்கடைந்திருந்தது" என்று காணப்படுகிறது. இற்றைக்கு எத்தனையோ சரித்திராசிரியர்களும் முஹம்மது (ஸல்.) அவர்களுக்கு முன்பும் அவர்கள் கால ஆரம்பத்திலும் உலகம் மீக் கூறியவாறு அந்தகாரத்தால் ஆழ்ந்து தாழ்ந்து இருந்ததாக கூறியிருக்கிறார்கள். அதை நாம் எத்தனையோ எண்ணத்தொலையாத பத்திரிகை மூலமாகவும் பார்த்து வருகின்றோம். அக்காலத்தைச் சீர்திருத்திக் கொணர்வான் வேண்டியே இறைவன் திருவருளால் நபீ முஹம்மது (ஸல்.) அவர்கள் அனுப்பப்பட்டு, அவர்களாலேயே இவ்வுலகம் இன்று நாம் பார்க்கும்படியான உன்னத நிலையை அடைந்திருப்பது யாவரும் கண்கூடாகக் காணும் விஷயமாகும். விஷயம் இவ்வாறிருக்க, அதை அப்படியே தலைகீழ்ப்பாடமாக்கி முஹ்யித்தீன் ஆண்டகைக்குமுன் உலகமே அந்தகாரத்தில் மூழ்கியிருந்ததென்று விஸ்தரிப்பது விந்தையினும் விந்தையே."

இது ஷை பத்திரிகையில் எழுதப்பட்ட மறுப்புரையின் ஒருபாகமாகும். இம் மறுப்புரை முழுவதற்கும் பதில் கூறவேண்டும் என்ற எண்ணத்தால் ஹி. இ. ஆகஸ்டுமீ இதழில் "சத்திய இஸ்லாத்தின் அசத்தியப் பிரசாரம்" என்ற மகுடமிட்டு நீண்ட வியாசமொன்றெழுதினோம். அதில்,

"தலைகீழ்ப்பாடமாக்கி முஹ்யித்தீன் ஆண்டகைக்குமுன் உலகமே அந்தகாரத்தில் மூழ்கியிருந்ததென்று விஸ்தரிப்பது விந்தையினும் விந்தையே" என்று எழுதியிருக்கிறார். "ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு" என்றபடி ஒன்றை நினைத்து ஒன்றை எழுதித் தமது அழுக்காற்றைக் காட்டிக்கொண்டிருக்கிறார்போலும். ஷையாரின் வியாசத்தில் எழுதப்பட்டிருப்பதாக யாம் மேலே எடுத்துக்காட்டிய வாக்கியத்தின் கருத்து "ஹிபாஜத்துல் இஸ்லாம் பத்திரிகையின் பிரஸ்தாப வியாசத்தில் இருப்பதாக அவர் ருஜூப்பிக்குமாறு அறைகூவி அழைக்கிறோம்." என்று எழுதியிருந்தோம். நம்முடைய இவ்வறை கூவலை சத்திய இஸ்லாம் ஏற்றுக் கொண்டதுபோல் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"இதற்கு அவ்வியாச கர்த்தாவை இன்னொருதரம் நன்றாக முழு கவனத்தையும் செலுத்தி ஹி. இ. த்தைப்படிக்கச் சொல்லுவதோடு முஹ்யித்தீன் ஆண்டகையவர்களுக்கு முன்னிருந்த உலகத்தை விளக்கும்போது தம் வியாசத்தில் "உலகம் சீர்குலைந்து அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தால் மூடப்பட்டு ஒழுக்கம் வழுக்கடைந்திருந்தது" என்று எழுதியிருப்பது நாம் சொல்லிய கருத்தைத் தருகின்றதா? இல்லையா என்பதை ஆழ்ந்து பார்த்துவிட்டு பின் எம்மை சாலஞ்சிற்குக் கூப்பிடட்டும் என்று கூறுகிறோம்."

ஹி. இ. த்தில் "இஸ்லாமிய உலகம் சீர்குலைந்து அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தால் மூடப்பட்டு ஒழுக்கம் வழுக்கடைந்திருந்தது" என்று எழுதப்பட்டிருக்கிறதேயல்லாமல் உலகம் என்ற பதத்திற்கு அடைமொழி இல்லாமல் உலகம் அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தில் மூடப்பட்டு 'ஒழுக்கம் வழுக்கடைந்திருந்தது' என்று எழுதப்படவில்லை என்பதை சத்திய இஸ்லாத்தின் நாகூர் நிருபர், M. K. A. உணர்வாராக. பொறுமையால் "இஸ்லாமிய" என்ற பதம் மறைந்து காணப்பட்டால் அந்த பொறுமையை நீக்கிக்கொள்ள வழி தேடவேண்டுமேயல்லாது தமக்கு மறைந்து காணப்படும் விஷயத்தை விட்டுவிட்டு மீதத்தைக்

குரங்குப் பிடியாகப் பிடித்துக்கொண்டு குறை கூற முற்படுவது எவ்வளவு தூரம்விவேகமாகு மென்பது நண்பர்கட்குத் தெரியாதவைக ளன்று.

உலகம் என்பதற்கும், இஸ்லாமிய உலகம் என்பதற்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமிருக்கிறதென்பதை பள்ளிச் சிரார்களுங் கூட நன்கறிவர். இஸ்லாமிய உலகம் என்பது அக்காலத்தில் சில தேசங்களேயாகும். நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் பிறந்த காலத்தில் அஞ்ஞானமட்டுமில்லாமல் அனாச்சாரம் முதலிய எத்தனையோ எண்ணத் தொலையாத விதத்தில் உலகம் இருளடைந்திருந்தது. சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் அவ்விருளை அகற்றுவதற்காக இஸ்லாம் என்னும் ஞான தீபத்தைக் கொளுத்தினார்கள். அவர்கள் இப்பூவுலகின்கண் ஜனனமானகாலத்தில் ஒழுக்கம் என்பதே ஜனங்களிடம் இல்லாமலிருந்ததால் பெருமானார் (ஸல்.) அவர்கள் நல்லொழுக்கம் இன்னது, தீய ஒழுக்கம் இன்னது என்று பாகுபாடுசெய்து பொதுவாக ஜனங்களுக்கு அறிவித்ததுமல்லாமல் தங்களுடனிருந்த ஜனங்களை நல்லொழுக்கத்தில் நடத்தவும் செய்தார்கள்.

ஹஸ்ரத் ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானீ (றஹ்) அவர்கள் காலத்தில், ஞான ஒளிவீசிய உலகில் அதாவது இஸ்லாமிய உலகில் அஞ்ஞானம் குடிகொண்டது. இந் நிலைமையில் ஞானமென்பதே இல்லாதிருந்த உலகில் ஞானத்தை உற்பத்தி செய்த காரியம் சிறந்ததா? அல்லது ஞானம் உண்டானபின் அதைவிட்டு மாறி தவறியிருக்கும் ஜனங்களுக்கு அவர்களுடைய பழைய பாடத்தை நினைவுக்குக் கொண்டுவருவது சிறந்ததா என்பதை ச. இ. நிருபர் கவனித்துப் பார்க்கட்டும்! இவ்விரண்டுக்குமிடையில் பெரிய வித்தியாச முண்டென்பதை எவரும் சுலபமாகக் கூறுவர். படிக்காத ஒருவனுக்கு படிப்பிப்பதும், படித்து மறந்த ஒருவனுக்கு ஞாபகமூட்டுவதும் ஒன்றாகுமா? இவ்விரண்டில் எது சிறந்தது என்பதை நிருபர் சிந்தித்துப் பார்க்கட்டும்! ஆகவே, பொறாமை தலைக்கேறி இருந்தமையால் "இஸ்லாமிய உலகம்" என்று எழுதியிருந்ததைப் பாராமலே இவ்வளவு கஷ்டமெடுத்து இரண்டு வியாசம் வெளியிட்டிருக்கிறார். ஆத்திரத்தாலோ அல்லது வேறுகாரணத்தினாலோ மறுபடியும்இருக்கிற வியாசத்தை சரியாகப் பார்த்துக்கொள்ளாமல் வெகுதூரத்துக்குச்சிரமமெடுத்து குறைகூற முன்வந்திருக்கும் ச. இ. நிருபர் இதுபொழுதாகினும் ஹி. இ.-த்தின் வியாசத்தை மற்றொரு முறை திருப்பிப் பார்ப்பாராக. அவர் ஆத்திர புத்தியை விட்டொழித்து உண்மையை உணரும்நோக்குடன் கவனிப்பாரென்பதற்காகவே "உலகமே அந்தகாரத்தில் மூழ்கி இருந்தது" என்று யாம் எழுதியிருப்பதாக அவர் ருசுப்பிக்க வேண்டுமென்று கூறியிருக்க, ஆத்திரத்தினால் அதனை திருப்பிப்பார்க்காமலே மறுபடியும் இரண்டாம் முறையாக இவ்வியாசத்தை எழுத முன்வந்திருக்கிறார். என்றாலும் அவர் இனியேனும் சமாதானமுறையில் அதனை கண்ணுறுவாராகில் ஆத்திரமடங்கி அமருவார் என்று நினைக்கிறோம். அவருடைய ஆக்ஷேபனை, உலகம்—இஸ்லாமிய உலகம் என்ற இரு பதங்களைப் பொருத்தே இருப்பதால் ஏனைய ஆக்ஷேபனைகள் இந்த ஒன்றுக்குக் கூறும் மறுமொழியிலிருந்து தானாகவே அடங்கிவிடுகின்றன. இது விஷயம் தெளிவானபின் யார் சரித்திரம் தெரியாதவர் என்பதையும், யார் சரித்திரப்புரட்டர் என்பதையும் மக்கள் நன்கு தெரிந்துகொள்வர்.

"ஹஸ்ரத் கௌதுல் அஃலம் (றஹ்.) அவர்கள் செய்த சீர்திருத்தங்களை விபரிப்பதானது எம்பெருமானார் (ஸல்.) அவர்களது மேன்மைகளைக் குறைக்கக்கூடியதென்று இவ்வாசக் கர்த்தா குறிப்பிடுகின்றார் என்று நாம் எழுதியிருப்பதாக இச்சரித்திரமுணர்ந்த 'மேதாவி' எழுதியுள்ளார். இவ்வாறு நாம் எழுதியிருப்பதாக இவரால் நிரூபிக்க முடியுமா என்று கேட்கிறோம்" என்று நாகூர் நண்பர் நவின்றுள்ளார். இந்நிருபர் இம்மாதிரி நினைக்காவிடில் "முஹ்யித்தீன் ஆண்டகைக்கு முன்தோன்றிய முஹம்மது நபி (ஸல்.) அவர்கள் என்ன செய்தார்கள்? அன்றால் உலகம்சீர்படவே அவர்கள் அனுப்பப்பட்டதாக ஆண்டவன் சொல்வதின் கருத்தென்ன? அவர்கள் பிரசாரத்தால் உலகத்திற்கு ஒரு பயனும் விளையவில்லையா?" என்ற வினாக்கள் எந்த கருத்தைச் சுட்டிக்காட்டுகிறது என்பதையும், நாம்குறிப்பிட்டவை இவருடைய இந்த வாக்கியங்களிலிருந்து விளங்கவில்லையா வென்பதையும் அவரிடம் கடாவுகின்றோம்.

தவிரவும், ஷெ நிருபர் தமது முதல் வியாசத்தில், "இது நபிகள் திலகம் அவர்களின் சத்போதனைகள் அவர்கட்குப்பின் ஏற்றுக்கொள்ளப்படவில்லை; அல்லது, அவர்களின் பிரசாரத்தால் ஒருபயனும் விளையவில்லை என்பதாய் வெகு தெளிவாய்க் காட்டுகிறது. இன்றேல்,

நபிகள் நாயகத்திற்குப்பின் அதாவது முஹ்யித்தீன் ஆண்டகைக்கு முன்னிருந்த உலகம் சீர்குலைந்து அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தில் மூழ்கியிருந்தது என்று எழுத அந்த வியாசகர்த்தா துணிந்திருக்கமாட்டார்'' என்று எழுதியிருப்பது நாம் சுட்டிக்காட்டியதை அறிவிக்கவில்லையா? என்பதை அவர் மனதில் கைவைத்துப்பார்த்து பதட்டமில்லாது கூறுவாராக.

"ஒரு விஷயத்தை ஆரஅமர யோசித்து எழுதுவதை விடுத்து என்னென்னவோ தமக்கு இரண்டொரு கிதாபுகளின் பெயர்கள் மட்டில் தெரிந்துவிட்டதனால் தன் கையில்தான் உலகமே சிக்கிக்கொண்டது............பிறகு அவ்வியாசத்தில் ஸீரத்துன் நபியிலிருந்து காலாகாலங்களில் 'முஜத்தித்'கள் தோன்றுவார்கள் என்னும் விஷயமும்..........எடுத்தாளப்பட்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் நாம் இவர் எழுதுவதற்கு முன்னமே தெரிந்திருக்கிறோம்'' என வரையப்பட்டிருக்கிறது. ஒருவர் சரித்திரந்தெரியாது விஷயத்தை தாறுமாறாகக் கூறுவாராயின் அதனை ஒழுங்குபடுத்தி அவருக்கு உண்மையை உணர்த்துவதற்காக அவ்விஷயங்கள் கூறப்பட்டிருக்கும் கிதாபுகளைக் குறிப்பிடுவது குற்றமா? அவ்வாறு கிதாபுகளின் பெயர்களைக் குறிப்பிடுவதைக் கண்டு ஏதோ தனக்கு இரண்டொரு கிதாப்களின் பெயர்கள் மட்டில்தெரிந்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறதெனக் கூறுவது எவ்வளவு தூரம் அறியாமையாகுமென்பது நண்பர்களுக்குத் தெரியாத விஷயமன்று. தவிரவும் நாம் ஸீரத்துன் நபீ முதலிய கிரந்தங்களைக் குறிப்பிடுவதை அலட்சியமாகக் கருதி, இவைகளெல்லாம் நாம் எழுதுவதற்கு முன்பே தமக்குத் தெரியுமென்று குறிப்பிடுகிறார். அவர் கூறுவதுபோல் தெரிந்தவராக இருப்பாராயின் இவ்வளவு மோசமாக நம் ஞானதினகரன்மீது விதண்டாவாதஞ்செய்ய முன்வந்திருக்கமாட்டார். ஆதலால் அவர் சரித்திர ஆராய்ச்சியற்றவர், சரித்திரம் தெரிந்தவரென கனவு கண்டு கொண்டிருப்பவர் என்பதை நன்கு தெரிந்து கொள்ளுகிறோம்.

ஆகவே ச. இ. நிருபர் தாம் அறியாத்தனத்தால்-அழுக்காறு மிகுதியால் தமக்கு மறைபட்டுத்தெரிந்த விஷயத்தை ஆதாரமாகக்கொண்டு நம் 'ஞானதினகரன்' மீது வீணே தர்க்கவாதஞ்செய்ய முற்பட்டதையொழித்து, உண்மையை விளக்கிக் காண்பித்ததற்காக நம்மைப் பாராட்டி சத்தியத்தைக் கடைபிடித்தொழுகுவாராக. இவ்வாறன்றி மேலும்மேலும் விதண்டாவாதம் செய்ய முன்வருவாராகில் அவருடைய அசத்தியவாதத்தை அகற்றும் வரை நமது எழுதுகோல் அசைவுராதிருக்கமாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வினா:—ஒரு மனிதனுக்கு விவாகமாகி ஐந்து வருடங்கள் செல்படியாகிவிட்டன. இதற்கிடையில் அம்மனிதனுக்கு தன் மனைவி ரஷீதா பேகத்தின் கொள்கை தெரியாதிருந்தது. இந்நிலைமையில் இவ்விருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது காதியானீ சம்மந்தமான ஏதோபேச்சு ஏற்பட்டபோது "யான் மிர்ஸா குலாம் அஹ்மதை நபீ என்று ஒப்புக்கொள்ளுவதில்லை என்றாலும் சீர்திருத்தக்காரர் என்று கருதியிருக்கிறேன்'' என்று ரஷீதா கூறினள். இது சம்மந்தமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம் யாதெனில், அவளுடைய விவாகத்தின் நிலைமையாது? இவ்வைந்து வருடங்களுக்கிடையில் இவர்கள் வாழ்க்கை நடத்தியது ஜினா-விபசாரமாகுமா? பிள்ளைகள் ஹறாத்தில் பிறந்தவர்களா? இல்லையா என்பதை தயவுடன் தெரிவிக்குமாறு உலமாக்களின் மேலான சமூகத்தில் விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

தாழ்மையுள்ள அப்துல்லா ஜஅபர், பம்பாய்.

விடை:—குலாம் அஹ்மத் காதியானீ சுன்னத்து ஜமாஅத்து உலமாக்களின் ஏகோபித்த அபிப்பிராயப்படி காபிராக இருக்கிறார். அவர் காபிராகுமென்பதில் சந்தேகங்கொள்வதும் குபிராகும். இச்சம்பவத்தில் ரஷீதா அவரை காபிர் என்பதற்கு பதிலாய் நல்ல மனிதர், சீர்திருத்தக்காரர் என்று கருதியிருப்பதால் அவள் காபிராவாய் விட்டதில் எவ்வித சந்தேகமுங் கிடையாது. ஆகவே, அவளுடன் அவனுக்கேற்பட்டுள்ளதாகக் கருதப்படும் விவாக சம்மந்தம் ஸஹீயாகமாட்டாது. இவ்வாறிருந்தும் அவனுக்கு ரஷீதாவின் கொள்கை தெரியாதிருந்ததால் அந்த பிள்ளைகள் விபசாரப் பிள்ளைகளாகாது. (ஒப்பம் மௌலானா முப்தீ) முஹம்மது மஜ்ஹருல்லாஹ் (தெஹ்லீ பத்ஹ்பூரி ஜாமிஉம்மஸ்ஜித் இமாம்), (ஹஸ்ரத் மௌலானா) முஜப்பர் அஹ்மத் (ஷை மஸ்ஜித் உதவி இமாம்), (ஹஸ்ரத் மௌலானா) முஷற்றப் அஹ்மத் (ஷை மஸ்ஜித்முப்தீ) (மௌலானா) ஜாஹிதுல்காதிரி.

அல்லாஹு அக்பர் என்ற முழக்கம் என்னை முஸ்லிமாக்கி விட்டது.

(ஜனுப் காலித் லத்தீப் கௌபா அவர்கள் பிரசங்கம்).

லாகூரிலுள்ள நௌமுஸ்லிம் பாரிஸ்டர் ஜனுப் காலித் லத்தீப் கௌபா எம். எல். ஏ. மேனுட்டு சுற்றுப்பிரயாணத்தை முடித்துக் கொண்டு தற்போது இந்தியாவுக்குத் திரும்பி வந்திருக்கிறார். சமீபகாலத்தில் இவர் எகிப்துக்குச் சென்ற காலை அங்கு அவருக்கு மகத்தான வரவேற்பு நடைபெற்று பற்பல இடங்களிலும் அவர் பிரசங்கம் புரிந்தார். அவருடைய மதிக்கத்தக்க அபிப்பிராயங்களை எகிப்துப் பத்திரிகைகள் முக்கியமான இடங்களில் பிரசுரித்தன. ஜனுப் காலித் லத்தீப் கௌபா எகிப்தில் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டபோது, ஹிந்து மதம் மனிதவர்க்கத்திற்கு எவ்வளவு கஷ்டங்கொடுக்கக் கூடியதாக இருக்கிறது என்பதையும், தன்னை இஸ்லாம் மதத்தில் சேரும்படி தூண்டியது எது என்பதையும் விவரித்துக் கூறியுள்ளார். அவர் கூறியவைகளின் முக்கியபாகம் வருமாறு :—

“மனிதன் பெரிய பெரிய எல்லா மதங்களிலும் சேர்ந்துகொள்ளமுடியும் என்பதும், அந்த மதங்களின் சட்டதிட்டங்களையும் அஸ்திவாரமான கொள்கைகளையும் தெரிந்துகொள்ளமுடியும் என்பதும் உண்மை. ஆனல், ஹிந்துமதத்தில் ஹிந்து அல்லாதவர் சேர்ந்துகொள்ள முடியாது. அந்தமதத்தின் சட்டங்களையும், அஸ்திவாரக் கொள்கைகளையும் வேறு எவரும் அறிந்துகொள்ளமுடியாது. இவ்வாறு எல்லா வாசல்களும் அடைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, நீங்கள் அதைப்பற்றி எவ்விதத் தகவலும் தெரிந்துகொள்ளமுடியாது.

ஹிந்து மதம் இந்தியாவின் விளைபொருளும், தங்கள் முன்னோர்கள் விட்டுச்சென்ற செல்வமுமாகும். பழக்கம், வழக்கம், குடும்ப ஆசாரம், நம்பிக்கை ஆகியவைகள் மதத்தின் உருவெடுத்துக்கொண்டுவிட்டது ; மூட நம்பிக்கையினுலுண்டானவைகளனைத்தும் மத நம்பிக்கை எனும் கொள்கைகளாக ஏற்பட்டுவிட்டன ; இவைகள்தாம் வாரிசு பாத்தியதையாக வந்துகொண்டே இருக்கின்றன ; இதுவைதாம் மதம் என்று சொல்லப்படுகின்றன. இதனுல் தான், ஒவ்வொரு வம்சத்திற்கும், ஒவ்வொரு வகுப்பினுக்கும் கொள்கைகள் வெவ்வேருக இருக்கின்றன. அதில் நூற்றுக்கணக்கான கீழ்த்தர வகுப்புகள் நிர்ணயமாகி இருக்கின்றன. ஒவ்வொருவரும் தம்முடையசக்திக்கும் வல்லமைக்கும் தக்கவாறு தத்தமுடைய தொழிலை நிர்ணயித்துக்கொண்டனர்.

பிராமணர்கள், மதசம்மந்தமாக வழிகாட்டும் வேலை தங்களுக்குமட்டிலும் தான் என்று சொந்தப்படுத்திக்கொண்டார்கள். க்ஷத்திரியர் வேருக இருக்கிருர்கள் ; ஜாட், ரஜபுத்திரர் முதலியவர்கள் தங்களுக்கென தனித்தொழிலை ஏற்படுத்திக்கொண்டனர். இவர்கள் எல்லாவற்றிலும் கீழ்த்தரமான வகுப்பினராக எனப்படுபவர்கள் தீண்டாதார்களே. இவர்கள் முற்றிலும் புறம்பே தள்ளப்பட்டவர்களாகக் கருதப்படுகின்றனர் ; அவர்களுக்கு எவ்விதமான எந்த உரிமையும் கிடைக்கவில்லை ; அந்த வர்க்கத்தினரும் தங்களை ஏதேனும் ஒன்றுக்கு அருகதையுள்ளவர்கள் என்று கருதிக்கொள்ளவுமில்லை. ஆகவே, ஒருவருக்கொருவர் வெறுப்புக்கொள்வதற்கான கடைசி எல்லையும் ஏற்பட்டுவிட்டது. சில வகுப்பினரில், ஒரு குடும்பத்தில் 10 பேர்கள் இருந்தால் ஒவ்வொருவருடைய பாத்திரமும், சாப்பிடுவதும் தனித்தனியே தானிருக்கும். தாய், தகப்பன், புதல்வன், புதல்வி, சகோதரன், சகோதரி, கணவன், மனைவி ஆகிய ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தனித்தனியே வெவ்வேறு பாத்திரங்கள் வைத்திருந்து உணவருந்தும் போது கூட அவர்கள் வெவ்வேருகப் பிரிந்து உணவருந்திக்கொள்கிருர்கள்.

இதைப்பார்க்கினும் இன்னும் அதிக ஆச்சரியமான மற்ருெரு செய்தியை இவ்விடத்தில் கூறுகிறேன். தீண்டாதார்கள் ஒரு கிணற்றிலிருந்து ஜலம் அருந்திவிடுவார்களாயின் அங்

தக் கிணறு அசுத்தமாகிவிடும்; ஒரு ரஸ்தா வழியாகச் செல்வார்களாயின் அந்த ரஸ்தா தீட்டாகிவிடும்; பிராமணர்கள் மீது அந்த ஜனங்களின் நிழல் விழுந்துவிடுமாயின் அந்த பிராமணர்கள் சுத்தமற்றவர்களாகக் கருதப்படு கிறார்கள். ஆகவே, தீண்டப்படாத அந்த மனித னுக்கு உடனே தண்டனை விதிக்கப்பட்டு விடும்; அந்த பிராமணன் ஸ்நானஞ்செய்து இதற்கென விசேஷ வணக்கம் செய்தால்தான் சுத்தமாகுவான்.

காந்திஜீ இப்பக்கல் தமது கவனத்தைச் செலுத்தி கீழ்தர வகுப்பினராகிய தீண்டா தாரைச் சீர்திருத்தம் செய்ய ஆரம்பித்தார்; அவர்களுக்கிடையிலுள்ள விதர்ப்பங்களைத் தூர மாக்க முயன்றார்; உயர் வகுப்பு ஹிந்துக்களின் அநீதியிலிருந்து அவர்களைக் காப்பதற்கான வழியை யுண்டுபண்ணினர். காந்திஜீ இம் முயற்சியில் ஓரளவு வெற்றிபெற்றாராதலின் அவர் இதற்காகப் பாராட்டத்தகுந்தவராவர்.

மறுமையில் முக்தியும், இம்மையில் கண் ணியமும் இல்லாத மதம் சத்திய மதமாக இருக்கமுடியுமா? என்று நான் வினவ விரும்பு கிறேன். இதுபொழுது நான் கூறியவைகள் அவர்களுடைய பிற்போக்கான தன்மையின் சொற்ப நமூனவாகும். உன்னத ஒழுக்கங்களை யுண்டுபண்ணுவது மதத்தின் நோக்கமாக இருக்கவேண்டும். மதம் தான் இவ்வுலகில் அமைதியையும் சமாதானத்தையும் நிலை நிறுத்துவதற்குப் பொறுப்பாளியாக இருக் கிறது. இந்த விஷயங்களை யான் வேறு எந்த மதத்திலுமின்றி இஸ்லாம் மதத்தில் மட்டும் தான் கண்டேன். இஸ்லாம் மதத்தின் கட்டளை கள்தான் நம்முடைய முக்திக்குக் காரணமாக இருக்கிறது என்பதிற் சந்தேகமில்லை.

என் தந்தை மிகவும் செல்வாக்குள்ளவர். முக்கியமாக ஹிந்துக்கள் அவரை ஒப்புக்கொள் கின்றனர். அரசாங்கத்திலும் அவருக்குக் கண்ணியமிருக்கிறது. பஞ்சாப் மாகாண சர்க் காரில் அவர் மந்திரியாகவுமிருந்தார். அவருக்கு கண்ணியம் இருப்பதுடன் செல்வமும் இருக் கிறது. ஆனல், அல்லாஹ் தன்னுடைய கிருபை யினல் எனக்கு நேர்வழியைக் காண்பித்ததால் நான் இஸ்லாம் மதத்தில் சேர்ந்துகொண் டேன். "அல்ஹம்துலில்லாஹ்." எனக்கு இது பொழுது மனச்சாந்தி ஏற்பட்டிருக்கிறது என் பதை உணர்கின்றேன். நான் உண்மை, சத்தி யம் ஆகிய பாதையில் சென்றுகொண்டிருக் கிறேன் என்று என் மனம் சாக்ஷி கூறுகிறது. இது இறைவனின் பேரருளாகும்.

நான் இஸ்லாம் மதத்தைத் தழுவியது ஹிந் துக்களைத் திடுக்கிடச் செய்துவிட்டதால் இந் தியா முழுவதிலும் ஒரு பெரும்புயல்போல் கிளர்ச்சியுண்டாயிற்று. ஆனல், அல்லாஹுத ஆலா எனக்கு கொடுத்த ஸ்திரபுத்தியினலும், உறுதியினலும் ஹிந்துக்களின் கண்டனங்களைக் கண்டு நான் பயந்துவிடவில்லை; எனது கால் கள் சருகிவிடவில்லை; ஈமானும் உறுதியும் இன்னும் அதிகமாகவே ஏற்பட்டது. இது றஹ்மானின் கிருபை. அவன் என்னை இஸ் லாத்தின் ஊழியனக ஆக்கி, ஈமானின் பிரகாசத் தின் மூலம் எனது இருதயத்திற்கு அமைதி யளித்தது அவனது கடாக்ஷமாகும். எனவே, இவ்வையகத்தில் நடைபெறும் சகல காரியங் களும் அல்லாஹு தஆலாவின் கட்டளையின லேயே நடைபெறுகின்றன என்பது திண்ணம்.

இஸ்லாத்தின் வட்டத்திற்குள் நான் சேர்ந்த வுடனே ஏதோ ஒரு செழிப்பான பெரும் மை தானத்தில் நான் வந்துவிட்டதுபோல் அவ் வளவு சந்தோஷம் எனக்குண்டாயிற்று. அந்த செழிப்பான மைதானத்தில்தான் மனிதர் தங்க ளுடைய வெள்ளாண்மையின் நல்ல பலனை அடையமுடியும்; அங்கு அவர்களுடைய முன் னேற்றத்திற்கான சகலவழிகளும் திறந்திருக் கின்றன. இது இஸ்லாத்தின் கிருபையேயாகும்; இது சத்திய வாக்கியத்தின் பொருட்டால் ஏற்பட்ட பயனேயாகும். ஆத்மார்த்தமானதும், ஸ்தூல சம்மந்தமானதுமான எல்லா கிருபை களும் நம் மீது ஏற்பட ஆரம்பித்தது இஸ்லாத் தின் மகத்துவமே யாகும். இதுபொழுது இரண்டுவித தலைவாசல்களும் நம்முன் திறந்து விடப்பட்டிருக்கின்றன; அல்லாஹு தஆலா வின் றஹ்மத்துகள் நமக்குத் தென்பட ஆரம் பித்திருக்கின்றன.

எவ்வளவு ஆச்சரியமான விஷயம் பாருங்கள்! அறபிலிருந்து தனியான ஒரு சப்தம் கிளம் பிற்று. அறபி தேசம் முழுவதும் அதனை எதிர்த்துங்கூட அதற்கு ஆதரவு ஏற்பட்டது அது சத்தியமான சப்தம் என்பதற்கு மிகப் பெரிய ஆதாரமாக இருக்கிறது. கொஞ்சம் கவனமாகப் பாருங்கள்! அறப் தேசத்திலுள்ள படிப்பில்லாத ஜனங்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவியவுடன் எங்கிருந்து எங்கு வந்து

சேர்ந்துவிட்டனர்; அச்சமூகத்திலிருந்த எல்லாக்கெடுதல்களும் நன்மையாக மாறிவிட்டன; பாபம் இருந்த இடத்தில் புண்ணியம் இடம் பிடித்துக் கொண்டது; நாகரீகம், சேர்ந்து வாழ்தல் என்ற பெயரைக் கூடக் கேள்விப் படாத அந்த ஜனங்கள் உலகம் முழுவதையும் வயப்படுத்திக் கொண்டனர்; உலகத்திலுள்ள வேறு எந்த மதமும் இம்மாதிரியான உதாரணத்தைச் சமர்ப்பிக்க முடியுமா? முடியாது முடியாது ஒரு போதும் முடியாது.

எனக்கு இஸ்லாத்தின் பால் பற்றுண்டானதேன்?

நான் இவ்விடத்தில் மற்றொரு உண்மையைக் கூற விரும்புகிறேன். எனக்கு இஸ்லாம் மதத்தின் மீது எவ்விதம் பற்றுண்டாயிற்று என்ற விஷயம் உங்களுக்கு மிக ருசிகரமாக இருக்கும். என்னை இஸ்லாம் மதத்தின் பால் கவனம் செலுத்தும்படிசெய்த சம்பவம் என்னவென்பதைத் தெரிந்துகொள்ள உங்களில் அநேகர் ஆவலுள்ளவர்களாக இருப்பீர்களாதலின் அதன் விபரத்தைக் கூறுகிறேன் கேளுங்கள்! சென்ற 1918—ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் நான் 18 வயதுள்ள வாலிபனாக இருந்தபோது என் மனதில் ஆயிரக்கணக்கான ஆசைகளும் எண்ணங்களும் நிரம்பி இருந்தன; ஒரு நாள் நான் தற்செயலாக ஒருமஸ்ஜிதுக்கு எதிரில் சென்றுகொண்டிருந்தபோது என்செவிகளுக்கு "அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்" என்ற ஒலி எட்டிற்று. எனக்கு இந்த சப்தத்தில் ஆகிருஷ்ணசக்தி இருப்பதாகத் தோன்றியதால் உடனே நான் ஏறிட்டுப்பார்த்தேன். மஸ்ஜிதின் வெள்ளை ஸ்தூபி எனக்கு மிக நன்றாகத் தோன்றிற்று. அங்கிருந்துதான் இந்த சப்தங்கள் வந்துகொண்டிருந்தன. இந்தக் காக்ஷி எனக்கு மிகுந்த ஆனந்தத்தைக் கொடுத்ததால் எனக்கு ஒருவித உணர்ச்சி உண்டாகிவிட்டது. பிறகு நான் அங்கிருந்து அப்புறம் சென்றேன். ஆயினும், என் செவிகளில் "அல்லாஹு அக்பர்" என்ற ஒலியே முழங்கிக்கொண்டிருந்தது; என் கண்களின் முன் அந்த ஆனந்தகாக்ஷியே தோன்றிக்கொண்டிருந்தது. இதுதான் எனக்கு முதல் முதலாக எல்லாவற்றிக்கும் முதலில் நடந்த எதிர்பாராத சம்பவம். இங்கிருந்து எனக்கு இஸ்லாம் மதத்தின் பால் பற்று உண்டாக ஆரம்பமாயிற்று.

இது நிகழ்ந்து ஒருகாலம் சென்றது. ஆயினும், அந்த தாகம் குறையவில்லையாதலால் கடைசியாக யான் இஸ்லாம் மதத்தைப்பற்றிய புத்தகங்களைப்படிக்க ஆரம்பித்தேன். இஸ்லாம் மதத்தைப்பற்றி நன்கு தெரிந்துகொள்ளவேண்டும் என்ற அவா எனக்கு அதிகமாகிவிட்டதால் இது சம்மந்தமாக விவாதம் செய்ய ஆரம்பித்து முஸ்லிம் உலமாக்களில் எவரெவருடன் பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததோ அவர்களுடனெல்லாம் யான் இஸ்லாம் மதத்தைப்பற்றிய தகவல்களை அறிந்துகொண்டே இருந்தேன். இத்தியாதி காரணங்களால் இஸ்லாத்தின் பால் எனது பற்று நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருந்ததால் இஸ்லாத்தின் பக்கல் நான் நெருங்கிக்கொண்டே இருந்தேன். கொஞ்சநாட்களுக்குப் பின் எனது அறிவு இவ்விஷயங்களை எல்லாம் ஒப்புக்கொண்டுவிட்டது என்பது எனக்குப் புலப்பட்டது. இஸ்லாம் சம்மந்தமாக நான் தெரிந்துகொண்டிருக்கிற விஷயங்களை எனது இருதயமும் சாக்ஷி பகர்ந்துகொண்டிருந்தது. ஆகவே, நான் மகாகவி டாக்டர் ஸர்இக்பால் அவர்களிடம் இஸ்லாம் சம்மந்தமாக அநேகம் பிரயோஜனகரமான சம்பாஷணைகளைச் செய்தேன். அன்றைய இரவில் அவருடன் இருந்து சம்பாஷித்தது எனக்கு ஞாபகமிருக்கிறது.

"வருகிற 50 வருஷங்களுக்குள் இஸ்லாம் மதம் உலகம் முழுவதும் பரவியுள்ள மதமாக இருப்பதை ஜனங்கள் காண்பார்கள்" என்று ஜார்ஜ் பர்னுடுஷா கூறிய விஷயம் என் கண்களைத் திறந்தது. இப்பொழுது உலகமிருக்கிற நிலைமையும், போக்கும் இவ்வபிப்பிராயத்தையே அறிவித்துக்கொண்டிருக்கின்றன என்பதிற் சந்தேகமில்லை. இஸ்லாம் மதம் தான் மிகவும் உன்னதமான ஜீவிய வாழ்க்கை முறையை பரிபூரணமாக நம்முன் சமர்ப்பித்துக்கொண்டிருக்கிறது என்பது நிச்சயம். மனிதன் இங்கு ஆத்மார்த்திகமானதும் ஸ்தூல சம்மந்தமானதுமான பாக்கியங்களை அடைகிறான்; அவன் தனக்கு நற்குண நல்லொழுக்கம், மனிதத்துவம் ஆகியவைகளின் மஹோன்னதமான நமூனைவைக் காண்கிறான். இவ்வுண்மைகளை எவரும் மறுக்கமுடியாது.

இஸ்லாம் மதத்தின் அஸ்திபாரம், வர்ணாசிரம திட்டத்தில் இல்லை. அதில் எவ்விதமான வகுப்பு வித்தியாசமோ, உயர்வு தாழ்வு என்ற

பாகுபாடோ இல்லை. அது ஒரே திட்டத் தைத்தான் தன்னைப் பின்பற்றுகிற கோடிக் கணக்கான மக்களின்முன் சமர்ப்பிக்கிறது. இஸ்லாம் மதத்தில் ஏழை, பணக்காரன், நடுத் தர வகுப்பினன் ஆகிய ஒவ்வொருவருக்கும் தனித்தனியே வெவ்வேறு வணக்கஸ்தலமில்லை; ஒரே வணக்கஸ்தலம் தானிருக்கிறது. அதில் ஏழை, பணக்காரர், தரித்திரர், தனவந்தர் ஆகிய யாவரும் ஒரே வரிசையில் தோளுடன் தோள் சேர்த்து நிற்கின்றார்கள். இவர்களில் எவ்வித வித்தியாசமுமில்லை. கருப்பர் வெள்ளையர் என்ற பாகுபாடும் இல்லை. அறபி, அஜமி என்ற குறிப்புமில்லை. இஸ்லாம் தன்னுடைய அருள்களை எவருக்கும் சொந்தப்படுத்திவைக்கவுமில்லை. சக்கிரவர்த்திக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ அவ்வளவு உரிமை மிகமிகச் சாமான்யனுக்கு மிருக்கிறது. உலகத்திற்கு இஸ்லாம் மதத்தைப் பார்க்கினும் சிறந்த முறையில் வேறெந்த மதமும் சகோதரத் துவத்தைப் போதிக்கவில்லை என்பது உண்மை''

துறவிக்கு வேந்தன் துரும்பு

இவ்வுலகில் அரசர்களுக்கு அஞ்சிப் பணியாத மனிதர்களில்லை என்று கூறலாம். ஆனால், துறைவி அரசர்களை மதிப்பதுமில்லை; அவர்களுக்கு அஞ்சுவதுமில்லை; எப்பொழுதும் அரசர்கள் தாம் துறவிகளுக்கு மரியாதை செலுத்தி கண்ணியம் கொடுப்பதுண்டு. இதற்குக் காரணம், இக் குவலயத்தில் அரசர்களிடமும் துறவிகளிடமும்தான் செல்வம் இருக்கிறது. ஆனால், இவ்விரு செல்வமும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இருவகைச் செல்வங்களாகும். அரசர்களிடமுள்ள செல்வம் பொன்னும், வெள்ளியும் மண்ணுங்கூடிய பௌதிகச் செல்வமாகும். இது அழிந்துவிடக்கூடியது; இன்றைக்கு ஒருவரிடமிருந்தால் நாளை ஒருவரிட மிருக்கும்; இதைப் பிறர் கவர்ந்து கொள்ளமுடியும்; இதனைப் புறச் செல்வமென்று கூறலாம்.

துறவிகளிடமுள்ள செல்வம் இப்படி இல்லை. இந்தச் செல்வம் ஆத்மார்த்திகமானது; இதனைப் பிறர் கவர்ந்துகொள்ள முடியாது; எவ்வளவு வாரிக்கொடுத்தாலும் குறையாதது. இந்தச் செல்வம் ஒருவரிடமிருந்தால் புறச்செல்வம்தானேவரும். இதற்கு அகச்செல்வமென்று சொல்லலாம். இதனால்தான் துறவிகளாகி ஆத்மார்த்திகச் செல்வத்தை அடைந்துள்ள பெரியார்களான காஜா முயீனுத்தீன் சிஷ்தீ (றஹ்.) அவர்களை ''சுல்தானுல் ஹிந்து'' இந்தியா சக்கிரவர்த்தி என்றழைக்கிறார்கள். ஹஜ்றத் ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானீ (றஹ்.) அவர்களை ''சுல்தானுல் பகுதாது'' அதாவது பகுதாதரசர் என்று கூறுகிறார்கள். இவ்விருவகைச் செல்வத்திலும் அகச் செல்வமே சிறந்தது. அகச்செல்வமுள்ளவர்களை எவரும் அடக்க முடியாது; அவர்கள் அல்லாஹுதஆலா ஒருவனுக்கே அடங்குவார்களாதலின் மற்றவர்களைக் கொஞ்சமும் லக்ஷியஞ் செய்யார்கள்.

சுல்தான் அல்தமிஷும் ஹஜ்றத் பக்தியார் காக்கீயும்.

டில்லியை ஆட்சிபுரிந்த மன்னர்களில் சுல்தான் அல்தமிஷ் என்பவரும் ஒருவர். இவர் முஹம்மது குத்துபுத்தீன் என்பவருக்குப்பின் பட்டத்துக்கு வந்தவர். ஆனால், இவர் மற்றைய அரசர்களைப் போலல்லாமல் தெய்வபக்தியும் இறை வணக்கமும் நிறையப்பெற்றுள்ளவர். இவரைப் பலர் துறவி அரசர் என்றுங்கூட கூறுவர். ஹஜ்றத் பக்தியார் காக்கீ (றஹ்.) அவர்கள் டில்லிக்கு வந்தபோதிலும் பக்கத்திலுள்ள காட்டில் தான் தாமதித்தார்கள். சுல்த்தான் அல்தமிஷ் இப்பெரியாரின் வருகையைக்கேள்விபட்டு அளவற்ற ஆனந்தமடைந்தார். எனவே, புறச் செல்வமுள்ள சுல்தான் அகச் செல்வமுள்ள ஹஜ்ரத் பக்தியார் காக்கீ (றஹ்) அவர்களை தரிசிப்பதற்காக, அவர்கள் தங்கி இருக்கும் கானகஞ் சென்று, அவர்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதைகளை யெல்லாம் செய்து டில்லி நகரில் வந்து தங்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

அகச் செல்வத்தை நிறம்பப்பெற்ற ஹஜ்ரத் பக்தியார் காக்கி (றஹ்.) புறச்செல்வமுள்ள

சுல்த்தானை மதிக்கவுமில்லை; அவரது பணிவான அழைப்பை அங்கீகரிக்கவுமில்லை. ஆயினும், சுல்தான் அல்தமிஷ் அடிக்கடி அப்பெரியாரிடம் செல்வதும், அவரைக்கண்டு கொள்வதுமாக இருந்தார்; ஹஜ்ரத் அவர்களின் உபதேசங்களைக் கேட்டு, ஆத்மார்த்திகப் பயன்களை அடைந்து டில்லிக்குத் திரும்புவார். இவ்விதமாக இருந்ததால் அரசருக்கும் புறச் செல்வத்தின் பெருமையும், படாடோபமும் நாளுக்குநாள் குன்றி துறவரத்தின் பற்று அதிகமாகிக் கொண்டேவந்தது. இறுதியாக, அரசருக்கு துறவற உணர்ச்சி பூர்த்தியாக ஏற்பட்டபின்னர் ஹஜ்ரத் பக்தியார் காக்கி (றஹ்) அவர்கள் டில்லிக்கு வந்தார்கள். சுல்த்தான் அல்தமிஷ் அன்றுமுதல் தமது கிரீடத்தை அணிவதில்லை; சாமான்ய மனிதர்களைப் போலவே இருந்து அரசபாரம் செலுத்திவந்தார்; தர்வேஷ்களைப்போல் சுயஉழைப்பால் ஜீவனம் செய்தார்; கூலிக்காரர்களைப் போல் டில்லியில் சக்கிராதிபத்தியம் நடத்தினர்; உலகப் பற்றற்ற பக்கீர்களைப்போல் வாழ்க்கை நடத்திவந்தார். ஹஜ்ரத் பக்தியார் காக்கி அவர்களின் சொற்ப கவனம் அவரிடம் இத்தகைய மாறுதலைச் செய்துவிட்டது. என்னே! அகச் செல்வத்தின் பெருமை.

ஹஜ்றத் பஹாவுத்தீன் (றஹ்.)

முல்தான், டில்லி அரசாங்கத்திற்குட்பட்ட ஒரு சமஸ்தானமாக இருந்தது. அங்கு கபாச்சா என்பவர் அரசுபுரிந்து வந்தார். இவர் இரவு பகல் என்னேரமும் சுகபோகத்திலேயே மூழ்கி இருந்ததால் பிரஜைகள் அதிகாரிகளின் துன்பத்திற்காளாகி சொல்லொணுக் கஷ்டத்திற்குப்பட்டிருந்தனர். அக்காலத்தில் இருந்த பெரியாரான ஹஜ்றத் பஹாவுத்தீன் ஜகரிய்யா முல்தானீ (றஹ்.) ஜனங்களின் கஷ்டத்தைப் பார்த்து, ஆட்சி புரியப்படும் விபரத்தைப்பற்றி டில்லி சக்கிரவர்த்தியான ஷம்ஸுத்தீன் அல்தமிஷுக்குக் கடிதம் கொடுத்தனுப்பினர்கள். அக்கடிதம் எவ்விதமாகவோ கபாச்சாவின் அதிகாரிகளிடம் அகப்பட்டு கபாச்சாவிடம் கொடுக்கப்பட்டது. இதைப் பார்த்தவுடன் அவருக்குக் கோபமேற்பட்டது; கண்கள் சிவந்தன; தேகமெல்லாம் ஆட்டங்கண்டது. உடனே ஹஜ்றத் பஹாவுத்தீன் கைதி செய்யப்பட்டு, கபாச்சாவின் முன்னிலையில் நிறுத்தப்பட்டார்கள்; இதைப்பற்றிய விசாரணை நடைபெற்றது.

ஹஜ்றத் பஹாவுத்தீன் ஜகரிய்யா மூல்தான் (றஹ்.) அவர்கள் அரசரைப் பார்த்து "அல்லாஹு தஆலாவின் கட்டளைப்படி யான் செய்ய வேண்டியதைச் செய்தேன்; இனி உமக்கு எது இஷ்டமோ அதைச்செய்துகொள்ளும்" என்று கூறினர்கள். இவ்வாக்கியம் அரசரின் ஆணவத்தை அடக்கிற்று; அவருடைய கண்களைத் திறந்தது; அரசர் பயந்து நடுங்கினர்; ஹஜ்றத் அவர்களைக் கைதி செய்ததற்காக வருந்தினர்; மிகவும் மரியாதை செய்து கண்ணியமாக அவரை விடுதலை செய்தார். ஆகவே, துறவிகள் அரசர்களை எவ்வாறு துரும்பாக மதித்து நடந்தார்கள் என்பதும், துறவிகளுக்கு அரசர்கள் எவ்வாறு பணிந்து நடந்தார்கள் என்பதும் மேலே கண்ட இரு சரித்திர சம்பவங்களிலிருந்தும் தெரியவரும்.

மதுரையில் ஹிஸ்புல்லாக்கள்

ஹிஸ்புல்லாக்களான மௌலானா மௌலவீ செய்யித் முர்தஜா ஸாஹிப் பஹதூர் M. L. A., மௌலவீ அல்ஹாஜ் S. A. முஹம்மது அலீ ஸாஹிப், மௌலவீ S. K. முஹம்மது ஷர்புத்தீன் ஸாஹிப் ஆகியோர் 18-8-35 ஞாயிற்றுக்கிழமை காலை 11-மணிக்கு இவண் மதுரைமா நகர்வந்துசேர்ந்தனர். மதுரையின் முக்கியஸ்தர்களும் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" மதுரை கிளைசங்கத்தினரும் இன்னும் ஏராளமான முஸ்லிம்களும் திரளாக ரயில்வே ஸ்டேஷன் சென்று ஹிஸ்புல்லாக்களுக்கு பல ரோஜாமாலைகளும் மல்லிகைமாலைகளும் சூட்டி வரவேற்று ஊர்வலமாக கொல்லம் பட்டரை பள்ளிவாசலுக்கு அழைத்து வந்தார்கள்.

முதலாவது மகாநாடு.

அன்று மாலை 5 மணிக்கு கொல்லம்பட்டரை பள்ளிவாசலில் காஜீ மஹல்லா மௌலவீ மீர் அம்ஜத் இப்ராஹீம் சாஹிப் அவர்கள் தலைமையின் கீழ் மகாநாடு ஆரம்பமாயிற்று. ஏராளமான முஸ்லிம்கள் விஜயஞ் செய்திருந்தனர். ஹாஜீ மௌலவீ அப்துல் ஹமீதுசாஹிப் அவர்கள் கிரஅத் ஓதியபின் மௌலவீ செய்யித் முர்தஜாசாஹிப் பஹாதூர் அவர்கள் பேசியதின் சாராம்ஸமாவது :—

நாங்கள் பல மாதங்களுக்கு முன்பே இங்கு வருவதற்குப் பிரயத்தனப்பட்டும் பல காரணங்களால் தடைபட்டுப்போயிற்று. முற்கூட்டியே நாங்கள் வந்திருப்போமாகில் வோக்கிங் மிஷனரிகளான மிர்ஜாயிகளை மதுரையில் வரவேற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டிராது. அவர்களுடைய கொள்கைகளும், நோக்கங்களும்இன்னதென்று தெரியாத காரணத்தினாலேயே நீங்கள் அவர்களை வரவேற்க முற்பட்டு விட்டீர்கள். ஹிஸ்புல்லாக்களின் முக்கிய நோக்கம் முஸ்லிம்கள் வதியும் ஒவ்வொரு ஊர்களிலும் சென்று அவர்களுக்கு வேண்டிய நன்மை தீமைகளை அறிவித்து ஒழுங்கு செய்வதோடு காதியானிக் கொள்கைகளை முஸ்லிம்கள் ஒப்புக்கொள்ளா திருப்பதற்குள்ள ஏற்பாடுகளைச் செய்யவேண்டியதாகும். இதை உத்தேசித்தே "ஹிபாஜத்துல் இஸ்லாம்", "ஹிஸ்புல்லா" இவ்வாறான ஏற்பாடு செய்யப்பட்டுளது. என்பதை அதிக விரிவாகப் பேசினார்கள்.

பின்னர் மௌலவீ முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள், மிர்ஜாகுலாம் அஹ்மது காதியானியின் வரலாற்றையும், அவரைப் பின்பற்றிய இருவகுப்பாரின் கொள்கை, தவறுதல் முதலியவற்றையும் வெகு சாங்கோபாங்கமாய்ப் பேசியதோடு சத்தியத்தூதர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் திவ்விய வாழ்க்கையைப் பற்றியும் நன்கு எடுத்துரைத்தார்கள். மக்ரிப் தொழுகைக்காக சபை கலைந்து மீண்டும் கூடியபோது, வோக்கிங் மிஷனரிகளின் வஞ்சகப் பிரசாரத்தை துவக்கி ஆரம்பமுதல் கடைசிவரை பேசிமுடித்தார்கள்.

பின்னர் மௌலவீ அல்ஹாஜ் S. A. முஹம்மது அலீசாஹிப் அவர்கள் பேசியதாவது:— நேரம் அதிகமாய்விட்டது. நான் கூறவேண்டிய விஷயங்களை நாளைப் பிரசங்கத்தில் கூறுவேன். வோக்கிங்மிஷனரிகள் லண்டன் ஜெர்மனி முதலிய இடங்களுக்குச் சென்று இஸ்லாமிய பிரசாரம் புரிவதாகவும், அவ்விடங்களில் மிர்ஸாயிக் கொள்கைகளை பரத்துவதில்லை என்றும் கூறி நம்மிடம் பணந்திரட்டிக்கொண்டு அவர்கள் கூறுவதற்கு நேர்மாற்றமாய் தங்களின் குருநாதரான மிர்ஸாவின் நுபுவ்வத்தை ஸ்திரப்படுத்த இதனை ஓர் கைங்கரியமாக வைத்திருக்கின்றனர். அவர்கள் இங்ஙனம் செய்துவரும் பிரசாரத்தின் யோக்கியதை ஹைதராபாத் பாரிஸ்டர் ஜனுப் இல்யாஸ்பர்னீ சாஹிப் அவர்கள் நேரில் பார்வையிட்டு எழுதியிருக்கும் நூலைப் படித்தவர்களுக்குவெட்ட வெளிச்சமாகத்தெரிய வரும். இவர்கள் அங்கு அநேக முக்கியஸ்தர்களை இஸ்லாத்தில் சேர்த்துவிட்டதாக பிரஸ்தாபப்படுத்துகின்றனர். அதில் ஓர் விஷயத்தை மட்டில் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன். ஜனுப் காலித் ஷெல்ட்ரேக் அவர்கள் இந்தியாவின் சுற்றுப்பிரயாணத்தை உத்தேசித்து பம்பாய் வந்திறங்கியபோது, அவரை காதியானிகள் வரவேற்று, அவரின் வியாசங்கள் தங்கள் பத்திரிகைகளில் துயர்படியாகப் பிரசுரிக்கப்படுமென்றும், அவர் தங்களாலேயே இஸ்லாத்தைத் தழுவியவரென்றும் மகாபடாடோபமாக எழுதினர். இது விஷயம் அது சமயம்வெளியான தா. இ. த்தில் பிரசுரிக்கப்பட்டுளது. பின்னர் டாக்டர் காலித் ஷெல்ட்ரேக் அவர்கள் வோக்கிங் மிஷனரிகள் செய்யும் அடாத செய்கைகளை விபரித்தும், தாம் மிர்ஜா கமாலுத்தீனல் இஸ்லாத்தைத் தழுவவில்லை என்றும் பிரசங்கிக்க ஆரம்பித்தவுடன் காதியானீ பத்திரிகை அவருடைய பிரசங்கங்களைப் பிரசுரிக்காது நிறுத்திக்கொண்டது. இதிலிருந்து, வோக்கிங்மிஷனரிகள் மேனுட்டில் ஏதேதோ செய்வதாக பறைசாற்றி உங்களிடம் பணப்பறித்துச் செல்வதன் வண்டவாளம் இன்னதென்று உங்களுக்கு நிரூபணமாய்விட்டது. என்று விரிவாகப் பேசினார்கள்.

பின்னர், மௌலவீ செய்யித் முர்தஸா சாஹிப் பஹாதூர் அவர்கள் தங்களின் முக்கியமான உபந்நியாசத்தை அடுத்தநாள் செய்வதாயும், இதுவரை பிரசிங்கப்பட்ட விஷயத்தில் யாருக்கும் ஆக்ஷேபணையிருந்தால் கேட்டுத் தெரிந்துகொள்ளலாமென்று அதற்காக 5 நிமிஷம் சபையை மௌனமாக யிருக்கும்படியும் கூறிவிட்டு ஆசனத்தி லமர்ந்தார்கள். அதுபொழுது ஒருவர் தனக்குள்ள சில ஆக்ஷேபனை

களை ஒருகடிதத்தில் எழுதி கையொப்பத்துடன் சமர்ப்பித்தார். அது வருவாறு :—

1. தென்னிந்தியாவில் முஸ்லிம் வாலிபர்கள் ஆங்கிலங் கற்க ஹஸ்ரத் முர்தஜா சாஹிப் அவர்கள் முக்கிய காரணஸ்தரல்லவா ?

2. வோக்கிங்பள்ளி இமாம் சாஹிப் அவர்கள் காதியானிகளைக் காபிர் என்று எழுதியதும் பிரசாரம் செய்ததும் கிடையாதா ?

3. முயூர் சேல் எழுதிய குர்ஆன் மொழி பெயர்ப்பிலுள்ள ஆபாசங்களைத் தாக்கி திருத்தி வெளியாக்கி ஆங்கிலம் படித்த முஸ்லிம்களைக் காப்பாற்றியது முஹம்மதலீ மொழிபெயர்ப் பல்லவா ?

4. அஹ்மதியர்கள் மிர்ஜாவை நபி என்று ஒப்புக்கொள்ளுகிறார்களா ?

5. இவர்கள் தங்களை முஸ்லிம்களென்று அழைக்கிறதில்லையா ?

(ஒப்பம்) S. நைனுமுஹமத்.

இதற்கு மௌலவீ செய்யித் முர்தஜாசாஹிப் பஹாதுர் கொடுத்த பதில் வருமாறு :—

1. முந்திய கேள்வி என்னைப்பொருத்ததாக இருக்கிறது. ஆகவே, அக்கேள்வி இங்கு ஏன் வினவப்பட்டிருக்கிற தென்பதை கவனிக்க வேண்டும். இங்கு பிரசிங்கிக்கும்போது “நம் நாட்டில் ஆங்கிலம் படித்த வாலிபர்களில் ஒரு சிலர் இந்த காதியானிக் கொள்கையில் சிக்கிக் கொள்ளுகின்றனர்” என்று உலமாக்கள் கூறினார்களாதலின் அதை உத்தேசித்தே இவ்வினு கேட்கப்பட்டிருக்கிற தென நினைக்கிறேன். மக்கள் ஆங்கிலங் கற்பதற்காக நான் பல காரியங்களைச் செய்ததுண்டு. ஆனால் அவர்கள் ஆரம்பத்தில் மார்க்கக் கல்வி பயின்று அதன் பிறகுதான் ஆங்கிலங் கற்கவேண்டும்; அல்லது இருகல்வியும் ஒருங்கே கற்கவேண்டும் என்று அன்றைக்கும் சொல்லிவந்தேன், இன்றைக்கும் சொல்லிவருகிறேன். பாஷையைப்பற்றி ஒன்றுமில்லை. ஆங்கில மென்ன! பிரான்ஸ், ஜெர்மனி, லத்தீன் முதலிய எந்த பாஷைகளையும் முஸ்லிம்கள் கற்கலாம். ஆனால் மார்க்கக் கல்வியை நன்குதெரிந்திருக்கவேண்டும். அவ்விதமில்லாமல் ஆங்கிலம்மட்டும் கற்கும் வாலிபர்களில் பலர் வழிகெட்டுப் போய்விட்டனரென்பதை நாம் கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

2. வோக்கிங்பள்ளி பேஷ் இமாம் என்ன! லாகூர் பார்ட்டி அஹ்மதியர்களால் நடத்தப்படும் ‘பயகாமெ ஸுல்ஹு’ என்னும் உர்து பத்திரிகையின் முதல் பக்கத்திலேயே “நாங்கள் கலிமாச் சொன்ன எப்பார்ட்டியினரையும் காபிர்கள் என்று கூறமாட்டோம்” என்று வரைந்திருக்கின்றனர். ஆனால் சில பல சந்தர்ப்பங்களில் சமயோசிதமாக இவர்கள் காதியானிப் பார்ட்டியினரையும், முஸ்லிம்களையும் காபிர்கள் என்று கூறியும் வருகின்றனர். லாகூர் பார்ட்டியின் தலைவர்களில் ஒருவரான காஜாகமாலுத்தீன் போன்றவர்களும்கூட பற்பல சந்தர்ப்பங்களில் சுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்களுக்கு மத்தியில் பணம் திரட்டும் பொருட்டாக தங்களை ஹனபீ முஸலிம்களெனக் கூறிக்கொள்ளுவதும், காதியானிப் பார்ட்டியினர்களை காபிர்கள் என்று கூறுவதும், லாகூர் பார்ட்டியினருக்கும் தமக்கும் சம்மந்தமில்லை என்றுங்கூட சில சமயங்களில் கூறியிருப்பதும் ரங்கூன் முதலிய இடங்களில் நடைபெற்ற நிகழ்சிகளிலிருந்து முஸ்லிம்கள் தெரிந்திருக்கலாம். கடைசியாக அவர்கள் அஹ்மதிகள்தாம் என்று நிரூபணமாயிருப்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே.

ஆகவே, வோக்கிங் பேஷ் இமாம் முதலியவர்கள் அஹ்மதியர்களாயிருந்தும் சுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்களுக்கிடையே பணம் பறிப்பதற்காக தங்களை ஹனபீ முஸ்லிம்களென்று கூறிக்கொண்டும், காதியானிப் பார்ட்டியினர்களை காபிர்கள் என்று சில சந்தர்ப்பத்தில் (மாட்டிக்கொண்டு விழிக்கும்போது) கூறியும் வருகின்றனர். என்றாலும் திருச்சியில், லாகூர்பார்ட்டியினரை காபிர்களென்றுசொல்ல மறுத்துவிட்டனர். இவ்வாறு இவர்கள் பிரசங்கங்களில் தங்கள் கொள்கைகளை சமய சந்தர்ப்பத்திற் கேற்றவாறு வெவ்வேறு விதமாய் முன்னுக்குப்பின் முரணாகக் கூறிவருகிறார்களென்பது தெரிந்த விஷயமே. ஆகையால் வோக்கிங் பேஷ் இமாம் வகையறா லாகூர் அஹ்மதிப் பார்ட்டியைச் சேர்ந்தவர்களென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

3. ஸர் வில்லியம் முயூர், மிஸ்டர் சேல் முதலிய கிறிஸ்துவர்களால் எழுதப்பட்ட குர்ஆன் ஆங்கில மொழி பெயர்ப்பில் தவறுகள் மலிந்து கிடக்கின்றன வென்பது உலகமறிந்த உண்மையாகும். அவைகளைவிட மிர்ஜாயீ முஹம்மது

அலீயின் மொழி பெயர்ப்பு சற்று மேலாக இருக்கலாம். ஆனல் அவர் அம் மொழி பெயர்ப்பில் மிர்ஜா குலாம் அஹ்மது காதியானியின் வழிகெட்ட கொள்கைகள் யாவையும் கொணர்ந்து நிரப்பிவிட்டார். அதனல் அம் மொழி பெயர்ப்பு இஸ்லாத்துக்கு முற்றும் முரணனதாக இருக்கிறது. ஆங்கிலத்தில் சரியான மொழி பெயர்ப்பைப் பார்க்கவேண்டுமானல் மார்மேடிக் முஹம்மது பிக்தால் அவர்களின் மொழிபெயர்ப்பை வாங்கிப்பார்த்துக் கொள்ளுங்கள்! மேலும் மௌலானு அப்துல் மாஜித் சாஹிப் பி. ஏ., பாஜிலே தேவ்பந்தீ ஓர் மொழி பெயர்ப்பு ஆங்கிலத்தில் எழுதி வருகிருர்கள். அது கூடிய சீக்கிரம் வெளியாகக் கூடியதாக இருக்கிறது. அம் மொழி பெயர்ப்பு எல்லாவற்றையும்விட சிரேஷ்டமானதாக அமையுமென்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், அவர் பி. ஏ. டிக்ரி பெற்றவராக இருப்பதோடு தேவ்பந்து மத்ரஸாவில் மார்க்கக் கல்வியிலும் தேர்ச்சிபெற்றிருக்கிருர்.

4. மிர்ஸாவைப் பின்பற்றியவர்கள் இரண்டு வகுப்பினராகப் பிரிந்திருக்கின்றனர். காதியானிப் பார்ட்டியினர் அவரை சரியான நபீ என்றே உறுதிகொள்கின்றனர். லாகூர் பார்ட்டியினர் அவரை "வில்லிநபீ" என்று ஒப்புக்கொள்கின்றனர். இவர்கள் மிர்ஜாவின் பெயர் வரையுமிடத்து 'அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம்' என்று வரைகின்றனர். இப் பதம் நபிமார்களுக்குரியதென்பது வெளிப்படை.

5. மிர்ஜா குலாம் அஹ்மத் தன்னுடைய மதத்தை ஸ்தாபித்த காலத்திலேயே தன்னைப் பின்பற்றியவர்கள் அஹ்மதியர்களென அழைக்கப்படல் வேண்டுமென ஆக்ஞாபித்திருந்தார். அதன்படியே மிர்ஜாயீ உம்மத்துகளும் நடந்து வருகின்றனர். சென்ற வருடத்தில் சிம்லாவில் அஹ்மதியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் விவாதம் நடைபெறுவதற்கு ஓர் சபைக் கூட்டப்பட்டிருந்தது. அச் சபை வெளியிட்ட அறிக்கையின் தலைப்பகத்தில், முஸ்லிம்களுக்கும் அஹ்மதியர்களுக்கும் ஓர் விவாதம் நடைபெறுமென குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வறிக்கையில் முஸ்லிம் சங்கம், அஹ்மதிய சங்கம் இவைகளின்காரியதரிசிகள் கையொப்பமிட்டிருந்தனர். இதிலிருந்து லாகூர் அஹ்மதியர்கள் தங்களை முஸ்லிம்களென்று சொல்லிக்கொள்ள விரும்பாததோடு, முஸ்லிம்களுடன் தங்களுக்கு விவாதமென்று வரைந்திருப்பதிலிருந்து லாகூர் அஹ்மதிகள் தங்களை முஸ்லிம்களென்று கூறிக்கொள்ள விரும்புகிருர்களில்லை என்பது நன்கு தெரியவருகிறது.

நண்பர் நைனுமுஹம்மது சாஹிப் தனக்குத் தோன்றிய சந்தேகங்களை சபை முன் தெரிவித்து சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டமைக்கு சந்தோஷமடைகின்றேன். இதுவன்றி இன்னும் வேறு சந்தேகங்களேதுவும் இருக்குமாயினும் அதனைக் கூறி உண்மையைத் தெரிந்துகொள்வாராக. எனப் பேசி முடித்தார்கள்.

மௌலவீ S. K. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் அதன்பின் பேசியதாவது:— கிறிஸ்தவர்கள் எழுதிய மொழிபெயர்ப்பிலுள்ள தவறுகளைக் கொண்டு முஸ்லிம்கள் ஏமாற்றமடையமாட்டார்கள். ஏனெனில், அவர்கள் அன்னியமதஸ்தர்களாக இருப்பதால் அவர்களின் கூற்றுக்களையும், வியாக்கியானங்களையும் முஸ்லிம்கள் வெகு ஜாக்கிரதையாகக் கவனித்து தவரைக் கண்டுபிடித்துத் தள்ளிவிடுவார்கள். காதியானீ முஹம்மதலியோ முஸ்லிம் என்ற போர்வையில் பற்பல தவறுகளை அவர் மொழிபெயர்ப்பில் இழைத்திருப்பதால் இதைக்கொண்டு முஸ்லிம்கள் ஏமாற்றமடைய ஹேதுவேற்படுகிறது. இதனல் தீங்கும் அதிகமாக ஏற்படக்கூடியதாக இருக்கிறது. இதனை மிஸர் 'ஜாமிஉல்அஜ்ஹர்' உலமாக்களும், மிஸரின் இதர உலமாக்களும் உணர்ந்து முஹம்மது அலீயின் ஆங்கில தர்ஜுமா தங்கள் தேசத்துக்குள் வரக்கூடாதென்று தடைசெய்திருப்பதுடன் அதன் காப்பிகளை பறிமுதல் செய்து தீக்கிரையாக்கியும் விட்டனர். ஆகவே, இக்கொடிய தர்ஜுமாவை முஸ்லிம்கள் கையினல் தீண்டுவதுங்கூட முறையல்லவென்று பேசிமுடித்தார்கள்.

நண்பர் S. நயினு முஹம்மது சாஹிபுக்கு மேற்கொண்டொன்றும் சந்தேகம் தோன்ருததால் எதுவுங் கூறவில்லை. ஆக்கிராசனரவர்களின் முடிவுரைக்குப் பின் சபை இனிது முடிவுற்றது.

2-வது மகாநாடு

19-ந் திகதி திங்கட்கிழமை மாலை 5-மணிக்கு கொல்லம்பட்டரைப்பள்ளியில் கூட்டம் நடைபெற்றது. மகாநாடு நடைபெறும் நேரத்திற்கு

முன்பே ஏராளமான ஜனங்கள் வந்து குழுவி விட்டனர். கூட்டத்திற்கு ஜனுப்அல்ஹாஜ் முஹம்மது மௌலானு சாஹிப் அவர்கள் தலைமை வகித்து முன்னுரையாகப் பேசிய தாவது :—

ஹிஸ்புல்லாக்கள் இவண் விஜயஞ்செய்யுமாறு முன் பல தடவை நாம் அழைத்திருந்தும், இது பொழுது அவர்களின் சமுகங் கிடைத்ததற்கு நாம் சந்தோஷமடைய வேண்டியதாக இருக் கிறது. இச்சந்தர்ப்பத்தை சமயமாகக்கொண்டு அவர்களிடம் நாம் நல்லுபதேசம் பெறவேண்டி யது முக்கியமானதாகும். சென்னையில் ஆறுவரு டங்களுக்கு முன் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" நிருவப்பட்டது. அதுபொழுதே அதன் கிளை சங்கத்தை இவ்விடம் ஏற்படுத்திவிட்டோம். இக்கிளைச் சங்கத்திற்கு உங்களின் பார்வை குறைந்திருந்துங்கூட நிருவாகிகளாகிய நாங் கள் எங்களால் இயன்றவரை வேலைசெய்து வந் திருக்கிறோம். சென்னை "ஹிபாஜத்துல் இஸ் லாம்" சங்கத்தின் சேவையை தமிழ்நாட்டு முஸ் லிம்கள் மறந்துவிட முடியாது. அது அன்று ஏற்பட்டிருவிடின் தமிழ்நாட்டில் "காதியான யத்து" வேரூன்றியிருக்கும். அச்சங்கம் ஏற் பட்டது அல்லாஹ்வின் கிருபையேயாகும். "தாருல் இஸ்லாம்" பத்திராதிபர்கள் காதி யானிக்கொள்கையைப் பறப்புவதற்கு அநேக ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்; அவர்களுடைய கோட்டையெல்லாம் கானலைப்போல் பறந்து விட்டது. எனப்பேசி முடித்தார்கள். பிறகு மௌலவீ அல்ஹாஜ் S. A. முஹம்மது அலீ சாஹிப் அவர்கள், "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங் கம் ஏற்பட்ட வரலாற்றையும், அது செய் துள்ள—செய்துவரும் சேவைகளையும் நன்கு விபரித்ததோடு பா. தா. -வால் வெளியிடப் பட்டுள்ள 'ஜவாஹிருல்புர்கான்' என்னும் நூலி லுள்ள தவறுதல்களை எடுத்துக்காட்டி விபர மாய் 3-மணி நேரம் பேசினுர்கள்.

பின்னர் சபையோர்களின் வேண்டுகோளுக் கிணங்க, ஹிஸ்புல்லாக்களின் தலைவரான மௌலானு மௌலவீ செய்யித் முர்தஜா சாஹிப் பஹதூர் அவர்கள், மிர்ஜாவின் வர லாறுகளையும், அவரால் நியமிக்கப்பட்ட கலீ பாக்களின் விநோத நிகழ்சிகளையும், வோக்கிங் பிரசாரகர்களின் மாயசூட்சிகளையும் அதிவிரி வாக விளக்கிப் பேசினுர்கள்.

அதன்பின் மௌலவீ S. K. முஹம்மது ஷர்புதீன் சாஹிப் அவர்கள், கோஷா முறை யின் நற்பயன்களை விளக்கியும், கோஷா முறை யைக் கெடுப்பதற்கு காதியானிகள் செய்து வரும் சூக்ஷிகளை விவரித்தும் பேசினுர்கள்.

அடுத்தாற்போல் மௌலவீ முஹம்மது கனிஆலிம் சாஹிப் அவர்கள், தாருல் இஸ்லாத் தின் கொடுங்கொள்கைகளையும், ஹிபாஜத்துல் இஸ்லாமின் நன்மைகளையும் விளக்கியும், சங்கத் தின் மாசிகையை எல்லோரும் வாங்கிப்படிக்க வேண்டுமென்று வற்புறுத்தியும், ஸைபுல் இஸ் லாமின் சேவைகளைப்போற்றியும் அதையும் வாங்கி முஸ்லிம்கள் பார்ப்பது கடமையாகு மென்றும் பேசி முடித்தார்கள்.

தலைவர் முடிவுரையில், ஹிபாஜத்துல் இஸ் லாமின் மதுரை கிளை சங்கத்தை சகலரும் ஆதரித்து மெம்பர்களாகச் சேர்ந்து உபகாரம் புரிய வேண்டுமென்றும், வோக்கிங் மிஷினரி களின் மாயப் பிரசாரத்தை விவரித்தும் பேசி முடித்தார்கள். இரவு 9-30 மணிக்கு சபை இனிது முற்றுபெற்றது.

3-வது மகாநாடு.

இவ்வூர் கோரிப்பாளையம் சுல்தான் அலாவுத் தீன் ஒலியுல்லா அவர்கள் தர்காவில் 20-8-35 மாலை மகரிபுக்குப்பின் மகாநாடு ஆரம்ப மாயிற்று. பலமான அறிக்கை செய்யப் பட்டிருந்ததால் ஏராளமான முஸ்லிம்கள்வந்து குழும்பிவிட்டனர். "ஹிபாஜத்துல் இஸ்லாம்" மதுரை கிளை சங்கப் பிரசிடெண்டு ஆலீ ஜனுப் மௌலானு மௌலவீ முஹம்மது கனி ஆலிம் சாஹிப் அவர்கள் தலைமை வகித்து, ஹிபாஜத் துல் இஸ்லாம் சங்கங்களும் ஸைபுல் இஸ்லாம் பத்திரிகையும் செய்துவரும் இஸ்லாமிய சேவைகளைப் பாராட்டியும், அவைகளை முஸ்லிம் கள் ஆதரிக்கவேண்டுமென்று வற்புறுத்தியும், தாருல் இஸ்லாத்தின் அட்டூழியங்களை விப ரித்து அதை முஸ்லிம்கள் பஹிஷ்கரிக்கவேண்டு மென்று கோரியும் பேசி முடித்தார்கள்.

அதன்பின்னர், மௌலவீ முஹம்மது ஷர் புத்தீன் சாஹிப் அவர்கள், "ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் உயிருடன் உயர்த்தப்பட்டு இன்றளவும் ஹயாத்தாகவே இருந்து வருகிறுர் கள்" என்னும் விஷயத்தை குர்ஆன் ஹதீது ஷரீப்களின் மேற்கோள்களுடன் சாங்கோபாங் கமாய்பேசியதோடு பாஞ்சால "முத்தநப்பி" குலாம் அஹ்மத் இதுவிஷயத்தில் கூறிப் போந்த தப்பான கொள்கைகளை நல்ல வித

மாய் விளக்கி இவருடைய சிஷ்யர்களைப் பின் பற்றி தமிழ்நாட்டில் பா. தா. செய்துவரும் பிரசாரத்தைக் கண்டித்துப் பேசினார்கள்.

அதன்பின் மௌலவீ அல்ஹாஜ் S. A. முஹம்மது அலீசாஹிப், பா. தா. & லாகூர் பார்ட்டியார்கள், ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் விஷயமாய் தப்பான வியாக்கியானஞ் செய்து குர்ஆன் ஹதீதுகளுக்கு மாற்றமாய், ஹஸ்ரத் ஈஸா (அலை.) சிலுவையிலறைப்பட்டு மரண மாய் விட்டார்களென எழுதியிருக்கும் விபரங் களை எடுத்துக் காட்டி இவர்களின் குப்ரியத் தில் வாலிபர்கள் சிக்காமல் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று விபரமாய்ப் பேசினார்கள்.

மௌலானா மௌலவீ சையித் முர்தஜா சாஹிப் பஹாதுர் அவர்கள், காதியானிப் பார்ட்டி, லாகூர் பார்ட்டி, வோக்கிங் மிஷன் இவைகளின் விபரங்களை விளக்கிக்காட்டி, இக் காலத்தில் காதியானிக் கொள்கையைவிட்டு எச் சரிக்கையாக இருக்கவேண்டு மென்றும், "ஹிபா ஜத்துல் இஸ்லாம்" மதுரை கிளைச் சங்கத் துக்கு ஏராளமானோர் மெம்பர்களாகச் சேர்ந்து ஆதரிக்கவேண்டுமென்றும் பேசி முடித்தார் கள் .அதே சபையில் அநேகர் மெம்பர்களாகச் சேர முன்வந்தனர். தலைவர் முடிவுரைக்குப் பின் சபை முடிவுபெற்றது. அன்றிரவு தருகா கமிட்டி ஆபீசில் கீழ்மாத்தூர் கிராமம் அக்தா ரும் சர்குருவுமாகிய ஆலீ ஜனுப் முகையத்ஷா சாஹிப் அவர்களால் ஹிஸ்புல்லாக்களுக்கு நேர்த்தியான விருந்தளிக்கப்பட்டது.

4-வது மகாநாடு.

21-8-35 மாலை 5-மணிக்கு மதுரை "டவுன் காஜீ மஹல்லா" பள்ளிவாசலில் முன்சிபல் கவுன்சிலர் சின்னகாஜியார் அவர்கள் அக்கிரா சனத்தின் கீழ் மகாநாடு நடைபெற்றது. ஹாஜீ அப்துல் ஹமீத் சாஹிப் அவர்கள் கிரா அத் ஓதியபின், மௌலானாமௌலவீ செய்யித் முர்தஜா சாஹிப் பஹதூர் அவர்கள், காதியானி களின் சகல வழிகேடுகளையும் எடுத்து விளக்கிவிட்டு, வோக்கிங் பேஷ் இமாம் கோஷ் டியார் இங்கு வருவதற்கு முன்பாகவே தாம் அவர்கள் விஷயமாய் எச்சரிக்கை செய்திருந் தும் நீங்கள் அவர்களை ஆதரித்துவிட்டீர்கள் என்றாலும் அவர்கள் நல்ல வேலை செய்திருப் பார்களென்று நம்பிச் செய்துவிட்டதால் அதைப்பற்றி இப்போது ஒன்றும் பேசிக் கொள்வதில் பிரயோசனமில்லை. இனியேனும் இம்மாதிரியான விஷயங்களில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று பேசி முடித்தார்கள்.

மக்ரிப் தொழுகைக்குப்பின் முன்ஷீ குலாம் ஹுசைன் சாஹிப், வோங்கிங்மிஷன்விஷயமாய் தங்களுக்குக் கிடைத்த தகவலிலிருந்து அவர் கள் லாகூர் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களல்ல வென தெரியவந்ததால் அதை உத்தேசித்து அவர்கள் விஷயத்தில் நல்லெண்ணங்கொண்டு ஏற்பாடு செய்ததாயும், தாங்கள் எண்ணத்தில் வேறு எவ்வித வித்தியாசமுமில்லை என்றும் கூறினார்கள்.

பின்னர் அக்கிராசனர், வோங்கிங் மிஷன் சார்பாக வெளியிடப்பெறும் இஸ்லாமிக் ரிவி யுவை நாங்கள் பல சமயங்களில் பார்வையிட்ட தில் அவர்கள் லாகூர் ஜமாஅத்தைச் சேர்ந்த வர்களல்ல வென்றும், அந்த ரிவியுவில் காதி யானியத்தை எச்சமயத்திலும் எழுதுவதில்லை என்றும், சிலசமயங்களில் காதியானிப் பார்ட்டி யினரை அதில் தாக்கி எழுதப்படுகிறதென் றும் தெரியவருவதாய் விபரமாகப் பேசிய தோடு ரிவியுவிலிருந்து சில பாகங்களையும் படித் துக் காட்டினார். இவைகளுக்கு ஹிஸ்புல்லாக் கள் பதில் சொல்வதற்காக டைம் கோரினர். அக்கிராசனர் அக் கோரிக்கையை அலட்சியஞ் செய்தாராயினும் மகாஜனங்கள் ஹிஸ்புல்லாக் களுக்கு டைம் கொடுக்கவேண்டுமென வற் புறுத்தினதின்பேரில் 15 நிமிஷம் டைம் கொடுக்கப்பட்டது.

உடனே மௌலவீ முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் எழுந்து, இஸ்லாமிக் ரிவியுவில் சுன் னத்து ஜமாஅத்துக் கொள்கைக்கு விரோத மாக எதுவும் எழுதுவதில்லை என்று ஒப்பந்தம் இருந்ததால் அவர்கள் விரோதமாய் எழுதுகிற வழக்கமில்லை. அவர்களுடைய இதர நூல்க ளில் அவர்களுடைய அசல் கொள்கைகளை வெளியிட்டிருக்கின்றனர். காஜா கமாலுத்தின் இதே வோக்கிங் மிஷினுக்கு பணந் திரட்டு வான் வேண்டி ரெங்கூன் சென்றிருந்தபோது அவர் அளித்த விடைகளிலிருந்து அவர் லாகூர் பார்ட்டியைச் சேர்ந்தவரென்பது வெளிப்படையாய் பிரஸ்தாபமாகி வசூலாவ தும் தடைப்பட்டுப்போன விஷயம் உலகறிந்த ரகசியமாகும். இவ்வாறான பஹீரத விஷ யத்தை சூரியனைச் சுழலால் மறைப்பதற் கேற்ப தாங்கள் மறைக்க முற்படுவது பிரயோ சனமற்றதாகும். நாங்கள் சொல்வதில் உங்

களுக்கு சந்தேகமிருக்குமாயின் ஹிந்துஸ்தானத்திலுள்ள உலமாக்களிடம் கேட்டுப் பாருங்கள்! இதிலும் குறுகிய வழியொன்று சொல்லுகிறேன். காஜா கமாலுத்தீனுடைய பார்ட்டி எந்த செக்‌ஷனைச் சேர்ந்தது என்று கவர்ன்மெண்ட் ஆப் இந்தியாவினிடத்தில் எழுதிக் கேட்பீர்களாயின் அதிசுலபமாக இவர்கள் லாகூர் பார்ட்டியைச் சேர்ந்தவர்களென்பதை நன்கு தெரிந்துகொள்வீர்கள். இன்னும் அதிகமாக டயங்கொடுத்தால் மற்ற ரிகார்டுகளையும் உங்களுக்கு நிரூபித்துவிடுவேன் என்று பேசி முடித்தார்கள்.

பின்னர், மௌலானா மௌலவீ செய்யித் முர்தஜா சாஹிப் பஹதூர் அவர்கள் 2 நிமிஷத்திற்கு உத்திரவு பெற்று, காலையில் அக்கிராசனரும் முன்ஷி குலாம் ஹுஸைன் சாஹிபும் என்னுடன் சம்பாஷணை செய்யும்போது, 1922-ல் காஜா கமாலுத்தீனுடைய அறிக்கை ஒன்று வெளிவந்ததில் தாம் லாகூர் செக்‌ஷனை விட்டு நீங்கிவிட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது என்று தெரிவித்தார்கள். இதோ என் கையிலிருக்கும் போட்டோ பிளாக்கில், காஜா கமாலுத்தீனுடைய பெயரும் அவருடைய இஷாஅத்தே இஸ்லாம் பத்திரிகையும் பொரிக்கப்பட்டிருக்கிறது. இந்த போட்டோ பிளாக் 1926-ல்வெளியான "பைகாமெ ஸுல்ஹு"வில் லாகூர் அஹ்மதிய்யா பார்ட்டியினரால் வெளியிடப்படும் பத்திரிகைகளை ஒருங்கே சேர்த்து இந்த லயன் பிளாக் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதில் காஜா கமாலுத்தீனுடைய பத்திரிகையும் விளங்குகிறது பார்த்துக்கொள்ளுங்கள்! மேலும் மிஸ்டர் இல்யாஸ்பர்னி, M. A., LL. B., எழுதிய "காதியானீ மத்ஹப்" என்னும் அரிய உருதுகிரந்தத்தில் வோக்கிங் பார்ட்டியாருடைய கொள்கைகள் விவரிக்கப்பட்டுளது. என்று பேசி முடித்தார்கள்.

அதன்பின்னர் S. செய்யித் இஸ்மாயில் சாஹிப் பேச உத்திரவு கோரியதால் அவருக்கு மட்டும் 5 நிமிஷம் அக்கிராசனரால் அனுமதிக்கப்பட்டது. அவர் பேச ஆரம்பித்தபோது அவரின்போக்கு அக்கிராசனர்முன் பேசிய விஷயத்தைத் தழுவியதாகவே இருந்ததால் சபையினர் இவருடைய கூற்றுக்கு மறுப்புச் சொல்ல ஹிஸ்புல்லாக்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். அக்கிராசனர் நேரம் அதிகமாய்விட்டதென்று சொன்னதால் சபையில் சற்று குழப்பமேற்பட்டது. இந்நிலைமையில் மௌலவீ செய்யித் முர்தஜா சாஹிப் அவர்கள் பிரஸ்தாப விஷயத்தை தெளிவுபடுத்துவான் வேண்டி 5 நிமிஷம் டயம் கோரியதை அக்கிராசனர் நிராகரித்துவிட்டதால் குளப்பம் சற்று முற்றிற்று. ஆதலால் அக்கிராசனர் சபையைக் கலைத்துவிட்டதாக கூறிவிட்டார்.

இஷா தொழுகைக்குப்பின் ஜனாப் முன்ஷீ குலாம்ஹுஸைன் சாஹிப் அவர்கள் இல்லாத்தில் "ஹிஸ்புல்லாக்கள்" விருந்துண்டபின் தெற்கு வாசல் பள்ளியில் இரவு 9-மணிக்கு மகாநாடு கூடுவதாக அறிக்கை செய்யப்பட்டிருந்ததால் மகாஜனங்கள் கூடிவிட்டார்களென்பதற்காக சீக்கிரமாய் ஹிஸ்புல்லாக்கள் அங்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

5-வது மகாநாடு

தெற்கு வாசல்பள்ளியில் இரவு 10-மணிக்கு ஆரம்பமாயிற்று. மௌலவீ முஹம்மது கனி ஆலிம் சாஹிப் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். பிரஸ்தாப விஷயங்களை ஆரம்பத்தில் கூடலூர் மௌலவீ பகீர் முஹம்மது சாஹிபும் பின்னர் ஹிஸ்புல்லாக்களும் சாங்கோபாங்கமாய் எடுத்துரைத்தார்கள். இரவு 1 மணிக்கு துஆவுடன் சபையின் நடவடிக்கைகள் முற்றுபெற்றது.

6-வது மகாநாடு

22 உ மாலை 9 மணிக்கு கொல்லம்பட்டரை கீழ வெளிவீதி இரும்புபெட்டி வியாபாரம் க. மஸ்த்தான் ராவுத்தர் வீட்டின் முன்னிலையில் நடைபெற்றது. எல்லா மஹல்லாக்களிலிருந்தும் ஏராளமான முஸ்லிம்கள் வந்து குழும்பியிருந்தனர். ஹிஸ்புல்லாக்கள், "பெருமானார் (ஸல்.) அவர்களோடு நுபுவ்வத்து முற்றுபெற்றுவிட்டது; அது விஷயமாய் காதியானிகள் கொண்டிருக்கும் கொள்கை வெறுக்கத்தக்கதாகும்" என்னும் விஷயமாய் இரவு 1 மணிவரை சாங்கோபாங்கமாய் எடுத்து விளக்கினார்கள். நஞ்சோதரிகளுக்கு பிரத்தியேகமான இடவசதி செய்துகொடுக்கப்பட்டு அவர்களும் வந்திருந்ததால் அவர்களுக்கும் பிரத்தியேகமான உபன்னியாசம் புரியப்பட்டு துஆவுக்குப் பின் சபை இனிது கலைந்தது.

7-வது மகாநாடு

23உ வெள்ளிக்கிழமை பகல் 10-மணிக்கு தெற்கு வாசல்பள்ளியில் ஆரம்பமாயிற்று,

மௌலானா மௌலவி செய்யித் முர்தஜா சாஹிப், மௌலவீ அல்ஹாஜ் S. A. முஹம்மது அலீ சாஹிப், மௌலவீ செய்யித் முஹம்மது ஹஸ்ரத், டவுன் காஜியார் அவர்கள், மௌலிவீ முஹம்மது கனிஆலிம் ஆகியோர் காதியானிக் கொள்கையின் கெடுதி, மிர்ஸா, லாகூர் பார்ட்டி, வோக்கிங்காரர் இன்னோரின் பித்தலாட்டங்கள் ஆகியவைகளை ஜும்ஆ தொழுகை நேரம்வரை சாங்கோபாங்கமாய் எடுத்துக்கூறியபின் காதியானீ சம்மந்தமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு சபை இனிது முடிவுற்றது.

ஓர் இனிய கதை

(சென்றமீ 320-ம் பக்கத் தொடர்)

ஷாஹித் லண்டன்மாநகர் சென்று சில காலம் வரை ஒரு ஹோட்டலில் தங்கி இருந்து பின்னர் ஒருவரது குடியிருப்பு வீட்டின் ஓர் பாகத்தில் வாசஞ்செய்வதற்கு ஒழுங்கு செய்து கொண்டான். குடி இருப்பு வசதி ஏற்பட்டவுடனேயே அவன் ஸயின்ஸ் கல்வி யாராய்ச்சிக்காக ஒரு கலாசாலையில் சேர்ந்து தனது முழு கவனத்தையும் அதில் செலுத்தி கல்வி ஆராய்ச்சியிலேயே சதா ஈடுபட்டுக்கொண்டிருந்தான். இதனைக் கண்ணுற்றுக்கொண்டிருந்த அவ்வீட்டுவாசிகளும் நண்பர்களும் உபாத்தியாயர்களும் அவனை நோக்கி, இவ்வாறு செய்துகொண்டு போவாயாகில் உம்முடைய அருமை வாழ்க்கையில் கெடுதி ஏற்பட்டு நீ சுகஜீவியாக வாழ்வதற்கு ஹேதுவில்லாது போய்விடும். ஆதலின் ஒருமணிநேரம் மூளைக்கு வேலை கொடுத்தால் அதற்குப் பின்னுள்ள 2, 3 மணி நேரங்களை சந்தோஷத்திலும் ஆரோக்கிய உல்லாச காரியங்களிலும் செலவிட வேண்டுமென்று கூறினர். ஷாஹிது இந்திய கலாசாலையில் அதிகப் பிரயாசையோடு வாசிக்கும் மாணவனாக இருந்ததால், ஐரோப்பிய உபாத்தியாயர், நண்பர் இவர்களது இத் தலையீடானது அவனை மனோநிம்மதியற்றவனாகச் செய்துவிட்டது. அவன் மறைந்து ஒளிந்துகொண்டே வாசிப்பதிலீடுபட்டுக்கொண்டிருந்தான். ஆனால் இந்த இரகசியமும் அவர்கள் யாவருக்கும் நன்கு வெளியாய்விட்டது. பின்னர் அவ்வீட்டிலுள்ள இளம் பிராயமுடைய நங்கையர் அவன் மனதில் இடம்பெற்றுவிட்டனராதலின் அவன் கலாசாலையிலிருந்து வந்தவுடன் அரை மணிதான் வாசிப்பதற்குச் சாவகாசம் கிடைத்து வந்தது. "கஷ்ட வாழ்க்கைக்கு மற்றொரு பெயர் மிருக வாழ்க்கை எனப்படும்; பலவாறான சுகவாழ்க்கை, இன்பந் தரத்தக்க ஜீவிப்பு இவைகளன்றி மானிடத் தன்மையின் பரிபூர்ணம் கிட்டமாட்டாது; பலவாறான சந்தோஷப்பராக்கில் காலங்கழிக்காதுபோயின் அறிவுவளர்ச்சி ஏற்படுவது அசாத்தியம்" என்பவைகளை ஷாஹிதுக்கு அடிக்கடி எடுத்துக்காட்டப்பட்டது. முடிவாக ஷாஹிது என்பவனும் மனிதனாக இருந்ததால் எதுவரைதான் அவன் பொருத்திருக்க முடியும்? வாத்திய கோஷத்தின் இனிய ஓசையானது, அவனது அறிவு ஸைன்ஸ் ஆராய்ச்சியிலீடுபடுவதற்கு முட்டுக்கட்டையாக ஆகிவிட்டது. அழகிய இளநங்கையர்களின் கூட்டத்தில் கல்வி யாராய்ச்சியில் அவன் எவ்வளவு தூரம்தான் ஈடுபட்டிருக்க முடியும்? ஆனால் அவனது தற்சுபாவத்திலேயே கல்வியாராய்ச்சியில் ஓர்சுவை ஏற்பட்டிருந்ததால், அந்த வீண் விளையாட்டிலீடுபடுவதிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமென்று எவ்வளவோ முயற்சி செய்தும் அஃது பிரயோசனப்படாது அந்த புதிய வாழ்க்கையைக்கொண்டு கட்டுண்டு போய்விட்டான். இரவு முழுதும் விளக்கு வெளிச்சத்தில் ஆராய்ச்சியிலீடுபட்டு அதிலேயே முழு கவனத்தையும் செலுத்தி வந்தவனும், விவாக ஊர்வலங்களில் நடைபெறும் கூத்தாட்டங்களைக் கண்டு வெட்கித்தவனும், மாமா சிறியபெரிய தந்தைகளின் வீடுகளுக்குள் அனுமதியின்றி அடி வைக்காதவனும், வீட்டுவேலைக்காரியுடன் அவசியமான நேரங்களில் தலைகுனிந்து வார்த்தையாடி வந்தவனுமாகிய ஷாஹிது இதுபொழுது ஐரோப்பாவின் அலங்காரத்தையும், மாதர்களின் மகிழ்ச்சியையுங்கண்டு மதிமயங்கி விட்டானாகையால் ஆடல் பாடல்களிலீடுபடுவதுதான் தன் வாணாளின் பிரதானக் கடமையாகுமென்

றும், பற்பல வர்ணங்களையுடைய பூங்காவனத்தில் சுற்றித்திரிவதுதான் சந்தோஷ வாழ்க்கையின் பிரதான வஸ்துவென்றும் எண்ணிக்கொண்டு விட்டான். எனவே, சற்றுநேரம் ஸயின்ஸ் ஆராய்ச்சியிலீடுபடுவதைத் தவிர்த்து வேறு எந்த விஷயமும் அவனது மனதில் இடம்பெற்றில்லை. இந்நிலைமையில், மாதத்திலிருமுறை ஷாஹிதுக்கு யூனியன் கூட்டத்தில் சயின்ஸின் மீதாகிலும் ஒரு விஷயமாய் சொற்பெருக்காற்ற சந்தர்ப்பம் கிடைத்துக்கொண்டிருந்தது. அவன் முன் ஜாக்கிரதையோடு அதற்காகுமான ஆயுத்தங்கள் செய்துகொண்டிருப்பான். ஷாஹிது பெருத்த ஆரவாரத்தினிடையே பிரசங்கமாற்ற எழுந்து விடுவானுகில் சபையினர் அவனை உற்சாகப்படுத்தும் நோக்கத்தோடு ஒவ்வொரு விஷயத்திற்கும் உரத்த தொனியோடு கைகொட்டி சந்தோஷ அரவாரஞ் செய்வார்கள். சில மாதர்கள் பெரும் கூச்சலிட்டு புஷ்பங்களைவாறி இறைப்பார்கள். குறிப்பிடப்பட்டுள்ள நேரம் முடிவடைந்தவுடன் பிரசங்கம் முற்றுப்பெற்று மேடையிலிருந்து கீழே இறங்கும்போதும் பெரும் ஆரவாரஞ் செய்யப்படும். இவ்வாறு செய்வதெல்லாம் ஷாஹிது பிரசங்கமாற்றுவதிலும், கல்வி ஆராய்ச்சிலும் தேர்ச்சி பெற்றுவிட்டான் என்பதையும், அவனது பிரசங்கம் யாவருக்கும் அளவற்ற ஆனந்தத்தைக் கொடுக்க வல்லதாக இருக்கிறதென்பதையும் அவன் தெரிந்துகொண்டு பெருமை அகம்பாவம் என்னும் கர்வம் அவனது மனதில் குடிகொண்டு 'தான்' என்ற அகம் அவனை முன்னேற்றமடையாது செய்துவிடவேண்டுமென்பதற்காகவேயாம்.

ஷாஹிதின் மூளை, ஹிருதயம் இவைகளில் மேனாட்டு நாகரீக உணர்ச்சிகள் முழுதும் இடம் பெற்றுவிட்டன வென்பதையும், சந்தோஷ விளையாட்டுகளானது அவனை வசப்படுத்திக் கொண்டதென்பதையும் நன்கு தெரிந்து கொண்ட மேனாட்டுச் சூனியக்காரர்கள் அவனுடைய ஈமான், மார்க்கத்தின்மீது முத்திரையிடுவதற்கான திட்டமொன்றைத் தயாரித்து "இஸ்லாம் மதம் கொலை செய்வதைக் கற்பிக்கிறது; யுத்தம் செய்ய வேண்டுமென்னும் சொல்லே குர்ஆன் ஹதீது கிரந்தங்களில் நிரம்பி இருக்கிறது; இஸ்லாம் உலகில் சாந்தம் சமாதானத்தை நிலைபெறச் செய்வதாக இல்லை; மஸீஹ் (அலை.) போதித்த விஷயங்களைத் தவிர புதிய விஷயங்களை இஸ்லாம் உலகின்முன் எடுத்துக் கூறவில்லை; இஸ்லாம் சாத்வீகமற்ற முறையிலேயே தனது பிரசாரத்தை மக்களிடையே நடத்திவருகிறது; கிறிஸ்துவமார்க்கம் ஆசை விருப்பம் மனோநிம்மதி முதலியவைகளைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது; இஸ்லாமிய போதனைகளோ முன்னேற்றத்திற்குத் தடைகல்லாக இருக்கிறது" என்பவைகளை அவனுக்கெடுத்துக் காட்டிக்கொண்டே இருந்தனர். மேலும் "குர்ஆன் ஷரீபானது அரப் வர்க்கத்தினரை முன்னேற்றத்திற்குக் கொண்டுவருவதற்காக ஏற்பட்டதாகும்; அதில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் முழுதும் தண்ணீர். பசுமையற்ற தேசத்தில் வாசஞ்செய்பவர்களை ஒழுங்குபடுத்தக்கூடியனவாகவே இருக்கின்றது; உலகத்தில் முன்னேற்றமடைந்துள்ள தேசங்கள் அதில் கூறப்பட்டுள்ள கட்டளைகளை நிறைவேற்றுவதுகொண்டு எவ்வாறும் பிரயோசனமடையமுடியாது; தொழுகைநோன்பு ஹஜ்ஜு ஜகாத் போலொத்த கடமைகளை நிறைவேற்றுவது மூர்க்கக்குணமுள்ள அறபி வர்க்கத்தாருக்குத்தான் அத்தாவசியமானதாகும்; முன்னேற்ற சீர்திருத்தத்தின் ஒளி உச்சஸ்தானத்தை அடைந்து உலகம் முழுவதையும் பிரகாசத்திலாக்கிக்கொண்டும் ஸைன்ஸ் ஆராய்ச்சியின் காரணமாக கீழ்நாடானது மேனாடுடன் சேர்க்கப்பட்டுமிருக்கும் இதுகாலை இவ்வாறான மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதுகொண்டு முன்னேற்றமடைவதற்குப் பகரமாய் க்ஷீண திசைதான் அடையமுடியும்" எனவும் அவனுக்கெடுத்துக் காட்டப்பட்டது.

இப்பானம் அதிகப் பிரயாசையோடு ஷாஹிதுக்குப் புகட்டப்பட்டு அவனுடைய ஒவ்வொரு நரம்பிலும் இவ்விஷம் ஏறிப் பிரயோசனமேற்படுவதற்காக, மேனாட்டுப் பிடிவாத குணமுடையவர்களால் இஸ்லாத்துக்கு விரோதமாய் சத்தியமற்றமுறையில் இயற்றப் பெற்றுள்ளவும், அதன் ஆரம்பமுதல் கடைசிவரை ஆதாரமற்ற வீண் அபாண்டப் புழுகுகளைக் கொண்டு நிறப்பப்பட்டவும், முஸ்லிம் பெரியார்களையும் குறிப்பாக சங்கைவான்களான ஸஹாபாக்கள் குலபாயெ ராஷிதீன்கள் முதலிய பெரியார்களின் சரிதையைமாற்றி உண்மைக்குமாறாக எழுதப்பட்டவுமாகிய புத்தகங்களையும் நோட்டமிடுவதற்கு அவனைத் தயார் செய்யப்பட்டது.

ஷாஹிது ஆரம்பத்தில் இஸ்லாத்துக்கு மாறுன ஏதாகிலுமொரு சிறிய செய்தியை செவியுறுவாணுகில் அவனுடைய மனதில் நோவினை ஏற்படுவது வழக்கம். இந்நிலைமையில் கிறிஸ்துவப்பிரசாரகர்கள் அவனுடைய ஹிருதயம் முழுதையும் கொள்ளைகொள்ளவில்லை யாயினும் மெள்ள மெள்ள குறைந்தபக்ஷம் ஒரு மாறுதலையுண்டு பண்ணி வைத்துவிட்டனர். இதன்பயனுக ஷாஹிது இஸ்லாத்துக்கு விரோதமாக எழுப்பப்படும் பற்பல கேள்விகளுக்கும் செவிமடுப்பவனுகிவிட்டதால் அவனுக்கு சற்றேனும் மன வருத்தமேற்படுவது கிடையாது. முஸ்லிம்கள் இணைகொள்வதையும், தங்கள் நபீ அவர்களுக்கு விரோதமாய் ஒருவார்த்தை கூறப்படுவதையும் சகித்துக்கொள்ள மாட்டார்களென்பதை நன்கு தெரிந்திருந்த அக்கிறிஸ்துவப்பிரசாரகர்கள், திரித்துவக்கொள்கை சம்பந்தமாய் ஷாஹிதை ஏமாற்றிவிடக் கருதி, அஃதோர் ஆதாரமற்ற நிலையற்ற விஷயமாதலின் ஏகத்துவத்திற்குமுன் அதற்கு எவ்வாறுன சக்தியுங் கிடையாதென்று கூறியும், நபிகள்பெருமானுர் முஹம்மது (ஸல்.) அவர்களைப் பொதுவாகப் புகழ்ந்தும், அவர்களைமானிடர்களில் சிரேஷ்டமானவர்களென்று தெரிவித்தும் வந்ததுடன் சிற்சிலகால் நாயகம் (ஸல்.) அவர்கள் அதிகமான பெண்களை விவாகம் செய்துகொண்டிருந்தார்களென்றும், சிலகால் 'பதர்' 'உஹத்' யுத்தங்கள்மீது குறைகூறியும் மிகவும் மரியாதையோடு ஆக்ஷேபித்து, இவைகளெல்லாம் சாதாரண ஒருமனிதனை சந்தேகத்திலாக்கி வைக்கும் விஷயங்களாகும் என்று அவனுக்கு அறிவிக்கப்படும்.

இவ்வாறுன சிக்கலிலகப்பட்டுழண்டு கொண்டிருந்த ஷாஹிது எவ்வாறுன வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தான்; அவனுடைய எண்ணம் எவ்வளவு தூரம் பேதமடைந்துவிட்டதென்னும் விஷயம் அவன் தனது நண்பனெருவனுக்கு எழுதிய நிருபத்தால் நன்கு தெரியவரும். அதுவருமாறு:

டியர், நஸீம்! மன்னிக்கவேண்டும்! நான் மார்க்கசம்பந்தமான ஒரு மீட்டிங்குக்காக லண்டன்மாநகருக்கு வெளியில் செல்ல வேண்டிய சந்தர்ப்பமேற்பட்டு விட்டதால் உமது கடிதத்திற்கு உடனே பதில் எழுதக் கூடாமலாய்விட்டது. அந்த அர்த்தபுஷ்டியும் ஆத்மசக்தியுமளிக்கவல்ல மீட்டிங்கின் முழுவிபரத்தையும் இக்கடித மூலம் தெரியப்படுத்தக்கூடவில்லையாயினும் பத்திரிகை வாயிலாக அதனைத் தெரிந்துகொள்வாயாக. ஆஹ்! எவ்வாறுன கூட்டம்? அதனை என் வாணுள் முழுதிலும் நான் மறக்கமுடியாது. சில இளநங்கையர்கள் வெகு இனிமையாக வாத்தியத்தோடு பாடிய பிரார்த்தனையைக் கொண்டு அக்கூட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பமாயிற்று. அதனுல் என் மனதிலேற்பட்ட ஆனந்தப்பூரிப்பை என்னென்றுகூற முடியும்? பாவமற்ற மஸீஹ் (அலை.) அவர்களின் சரிதையை இரு இளநங்கையர்களின் வாயிலிருந்து, கேட்போர் மனங்கள் தடுமாற்றமடையும்படியான விதத்தில் வெளியானதைச் செவியுற்றதை நான் என்னென்று கூறுவேன்? பள்ளிவாசலில் முல்லாக்கள், முஅத்தின்கள் போடும் சப்தத்தையும் இவர்களின் இவ்வோசையையும் யான் சீர்தூக்கிப் பார்க்குங்கால், நான் எந்த முடிவுக்கு வந்திருக்கிறேனே அதனை வெளியிடுவதுகொண்டு நீர் சந்தோஷமடையமாட்டீர். 'முன்னேர்களைப் பின்பற்றுவது என்னும் வியாதியால் பீடிக்கப்பட்டிருப்போர் இஸ்லாமிய வகையற்ற போதனைகளையும் வரட்சையுள்ள விடுதலையையும் இத்துடன் சீர்தூக்கிப் பார்ப்பார்களாயின் உண்மை நன்கு வெளிப்பட்டுப் போகும். இது சம்பந்தமாய் யான் அதிகம் எழுத விரும்பவில்லை. பின்னர் என் அறிவுக்கு எட்டியவைகளையெல்லாம் விபரமாக வெளியிடுகின்றேன்.

லண்டன்மாநகரில் வாசஞ்செய்வதானது சுவர்க்கத்தில் வாசஞ் செய்வதுபோலாக இருக்கிறது. உம்முடைய வகையற்ற—துக்கம்நிறைந்துள்ள வாழ்க்கையை நோட்டமிட்டுப் பார்ப்பதுகொண்டு எனக்கு துக்கமேற்படுகின்றது; லண்டன்மாநகர் பலவாறுன சுவண்டிகளுக்கு மூலஸ்தலமாக இருக்கிறது; மாலைநேரங்களில் பூங்காவனங்களைச் சுற்றிப்பார்ப்பது கண்களைக் குளிரச் செய்கின்றது; ஒவ்வொரு வீட்டிலிருந்தும் வெளிவரும் சங்கீத ஓசையானது மனேஉற்சாகத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது; கண்கவர்ச்சியைக்கொடுக்கும் பூங்காவனங்களில் வெள்ளிக்கம்பிகளைப்போலுள்ள உரோமங்களையுடையவும் நெஞ்சு திறந்து உதடுகள் சிவந்து அழகிய வதனங்களை

புடையவும் மங்கையர்கள் உலாவிவருவதானது மனோதிருப்தியை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. இவ்விடத்திலுள்ள சுகாரோக்கியங்களை எவ்வாறு வர்ணித்தபோதிலும் அது மிகமிகக் குறைவேயாகும்; பகற்காலங்களிலேற்படும் அளவற்ற கஷ்டசங்கடங்களெல்லாம் சில நிமிட நேரத்திய சந்தோஷத்தால் நீங்கிவிடுகிறது; தீபாலங்கார வெளிச்சத்தில் அழகிய நங்கையர் ஆடல் பாடல்களுடன் 'டான்ஸ்' விளையாடுவதானது சுவர்க்கத்தை நிதர்சனமாய்க் காண்பதுபோலிருக்கிறது; இந்தியர்கள் எந்த வெட்கம் நாணத்தைக்கொண்டு கட்டுண்டு போயிருக்கின்றனரோ அதில் ஒரு துளிகூட இங்கு காணக் கிடைப்பதில்லை; இங்கு ஒவ்வொருவரும் அடிமைச் சங்கிலியை அகற்றி ஏதேச்சாதிகாரம்பெற்ற சுயேசை வாய்ந்தவர்களாகவே இருக்கின்றார்கள். ஓ நஸீம்! நீர் வாழ்க்கையின் இன்பத்தை அனுபவிக்க நாடுவீராகில் உடனே இவ்விடம் வந்து சேரும்! இன்றிரவு பறந்த நோக்குள்ள சில பாதிரிகள் எனக்கு விருந்துபசாரம் செய்ய ஓர் சிறந்த'டின்னர் பார்ட்டி'ஏற்பாடு செய்துகொண்டிருக்கின்றனர். அவ்விடத்தில் நவீன முறையிலுள்ள 'டான்ஸ்' கச்சேரியும் நடைபெறும். இந்நிலைமையில் நீரும் எம்முடனிருந்தால் வெகு நேர்த்தியாக இருந்திருக்கும். வந்தனம். உம்முடைய அத்தியந்த நண்பன், "ஷாஹித்"

ஷாஹிதுக்கு பரிக்ஷையிற் றேறிய சன்னது கிடைத்து விட்டதாயினும் இந்தியாவிற்குத் திரும்பி வருவதில் வெறுப்புக்கொண்டு இந்தியாவை நினைவுக்குக்கொண்ட மாத்திரத்தில் நடுக்கமுற்றவனே போலாகிக்கொண்டிருந்தான். விர்த்தாபியதிசையுடைய அருமைத் தந்தையை சந்திக்கவேண்டுமென்னும் எண்ணம் குன்றி மேனாட்டு இளநங்கையரின் நினைவே அவனுக்கு மிகைத்துக் காணப்பட்டு வந்தது. எனவே, ஷாஹிதினுடைய கீழ்நாட்டு பற்று அறவே நீங்கி மேனாட்டு மோகினி போலாய்விட்டானாகையால் இந்தியாவென்று பெயர் எடுத்த மாத்திரத்தில் அவன் பெறும் வெறுப்புக்கொள்பவனாக இருந்தான். இஸ்லாமிய சரித்திரங்களை வெறும் கதைகளைப் போலவே வாசித்து வந்தான். மேனாட்டு அழகிய ஆடல்பாடல்களும் ஆடம்பரங்களும் அவனுடைய அறிவாற்றலை கைகொண்டு மங்கையர்களின் மாயவலை அவனைச் சூழ்ந்துகொண்டதால் அவனுடைய நினைவும் கனவும் மேனாட்டு மயமாகவே காணப்பட்டு வந்தது. மானிடத் தன்மை, சீர்திருத்தம் என்று சொல்லப்படுபவைகளெல்லாம் மேனாட்டில் காணப்படும் வெளிரங்கமான சந்தோஷ ஆரவாரங்களும், காட்சிகளுமேயாகுமென அந்நாட்டு சூனியக்காரர்கள் அவனை ஏமாற்றிவிட்டனராதலின் நமது ஷாஹித் மயங்கி மிரண்டுவிட்டான்.

ஷாஹிதுக்கு கிறிஸ்துவப் பிரசாரகர்களிற் சிலருடன் நெருங்கிய சம்பந்த மேற்பட்டுவிட்டதாதலின் அன்னோர் இவனை பலவிதத்திலும் ஈஸாயிய்யத்தின் பக்கல் திருப்புவதற்குள்ள முயற்சிசெய்து கொண்டிருந்தார்கள். ஷாஹிது கூடியவரை மார்க்கவரம்பிற்குட்பட்டு நடக்க முயற்சித்து வந்தானாயினும் பாதிரிகளுடைய சிநேகமும் அவர்களுடன் கூடியிருத்தலின் பிரயோசனமும் இவனை அபாயத்திலாக்கி வைப்பதற்குப் போதுமானதாக இருந்தது. இதனால் இவனது மனம் ஈஸாயிய்யத்தின் பக்கல் திரும்பி கொஞ்சங் கொஞ்சமாக அவனுடைய மனோ உறுதியை மாற்ற ஆரம்பித்தது.

ஒருநாள் குயின்ஸ் வீதியிலுள்ள கிறிஸ்தவப் பாதிரிகளின் முக்கிய தலைவரொருவர் நமது ஷாஹிதை பகல் சாப்பாட்டுக்காக தம் ஜாகைக்கு அழைத்திருந்தார். சாப்பாட்டிற்குப் பின் விருந்தினர்களெல்லாம் தங்களிருப்பிடங்களுக்குச் செல்ல புறப்படுங்கால் பாதிரியார் ஷாஹிதைமட்டில் அவ்விடமிருக்கச் செய்து இஞ்ஜீல்வேதத்திலுள்ள சில ஏடுகளை அவனுக்கு வாசித்துக் காண்பித்து மனக்கவர்ச்சியைக் கொடுக்கவல்ல ஓர் பிரசங்கம் புரிந்தார். அதில் பாதிரியார், இஞ்ஜீலில் மாற்றல் ஏற்பட்டுவிட்டதெனக் கூறுவது அபாண்டப் புழுகாகுமென்றும், உண்மையிலேயே இஞ்ஜீலில் திருபுகள் இருப்பதாய்ச் சொல்லுவது உண்மைக்கு நேர் முரணான விஷயமாகுமென்றும் சொல்லிக்கொண்டிருக்கும்போதே பாதிரியாரின் முக்கிய நண்பர் ஒருவருக்கு சுகவீனமேற்பட்டுப்போய் விட்டதாய் டல்லிபூன் மூலம் அறிவிக்கப்படவே அவர் அங்கு சென்றுவர ஆயத்தமாகி ஷாஹிதை அங்கேயே வைத்துவிட்டு பாதிரியார் சென்றுவிட்டார். நமது ஷாஹிதும் பாதிரியாரும் அன்று மாலை ஒரு பார்ட்டிக்குச் செல்லவேண்டியதிருந்ததால் ஷாஹிது அங்கேயே இருப்பதற்குச் சம்மதித்துக்கொண்டு அங்கு மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்த

புத்தகங்களை புரட்டி எதாகிலும் மனோ உற்சாகத்தை அளிக்கும் புத்தகங்களிருந்தால் அதனைப் பார்த்து சந்தோஷமடையலாமென்று பார்த்துக்கொண்டு வருங்கால் நெப்போலியனின் சிற்றின்ப வாழ்க்கையின் விபரங்களடங்கிய கதைப் புத்தகமொன்று கிடைத்தது. அதிலுள்ள ஆரம்பக் கதை சிறியதாகவிருந்ததால் நமது ஷாஹிது அதனை சில நிமிஷ நேரத்திற்குள் வாசித்து முடித்துவிட்டான். அடுத்தடுத்த கதைகள் பெரியனவாக இருந்தமையால் சிறிய கதைகளைத் தேடிக்கொண்டே ஏடுகளைப் புரட்டிக்கொண்டு வரும்போது ஒரு சிறிய கதை தென்பட்டது. அதனுடைய தலையங்கமே “மனக்கவர்ச்சி” என்றிருந்ததால் அதனை ஆழ்ந்து கவனிக்க ஆரம்பித்தான். ஆரம்பத்திலுள்ள சில ஏடுகள் இவனது மனதைக் கொள்ளைகொண்டதாயினும் கொஞ்சம் செல்லச்செல்ல சற்று சடவு ஏற்பட்டதால் அதனை அப்படியே விட்டுவிட்டு ஏடுகளைப் புரட்ட ஆரம்பித்தான். இவ்வாறு புரட்டிக்கொண்டு வருவதற்கிடையே அதில் ஓர் கவர் இருக்கக்கண்டான். அது கொளும்பிலிருந்து பாதிரியார் பெயருக்கு வந்ததாகும். ஷாஹிது அக் கவருக்குள்ளிருக்கும் கடிதத்தை எடுத்து பார்க்கும்போது அதிலுள்ள விஷயம் சுருக்கமாக இருந்தபோதிலும் அவனுக்கு ஆனந்தத்தை அளிக்கவல்லதாக இருந்தது. ஆதலால் அதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் மடக்கிமடக்கி பலதடவை பார்த்தான். இக் கடிதம் ஷாஹித்துக்கு எவ்வாறு ஆனந்தத்தைக் கொடுத்தது என்பதைக் குறிப்பிடுவதற்காகஅக் கடிதத்தின் சாராம்சம் கீழே தரப்படுகிறது.

“ஆகஸ்டுமீ 6௳ 25 புத்த மதத்தினர்களை மாற்றியாய்விட்டது. பணத் தேவை பிரதானமாகும். இக் கடிதம் கண்டவுடன் பணத்துக்கு ஒழுங்குசெய்யவும். இவ்விடம் அனுஷ்டிக்கப்படும் சிக்கனமுறை அவ்வளவு நல்லதாகயில்லை. நம்மிடம் போதிய ரூபாய் இருக்குமாயின் வேண்டிய பிரசாரம் செய்யலாம். “அல்லாஹ்வின் குமாரரது” பெயரின் மரியாதைக்காகவே நாங்கள் எங்களாலியன்ற முயற்சி செய்துவருகிறோம்.”

இக் கடிதத்தை நமது ஷாஹிது வாசித்துப் பார்த்தவுடன் இவ்வாறான கடிதங்கள் வேறெதுவும் கிடைக்கமாட்டாதாவென மேஜையின் மீதுள்ள புத்தகங்கள் யாவற்றையும் புரட்ட ஆரம்பித்தானாயினும், காரியத்தில்சித்தியடைந்தானில்லை. அந்த மேஜைக்குக் கீழே அழுத்தமான பெட்டியொன்றிருந்தது. ஷாஹிது அதனை நகர்த்தி வெளியிலெடுத்தான். ஆனால் அது பூட்டப்பட்டிருந்ததால் அதன் மூடியைக் கழற்றுவதற்கு வேண்டிய முயற்சி செய்துகொண்டிருக்குங்கால் தேகத்திலிருந்து வியர்வை வடிய ஆரம்பித்து கைகளிரண்டும் சிவந்து மூச்சுத் திணறிப்போயிற்று. இப் பிரயாசைக்குப்பின்னும் காரியம் கைகூடாமலாய்விட்டதால்ஷாஹிதுக்கு உரோஷம் கிறசுக்கேறி தன் ஜோபியிலிருந்த ஒருகொத்துச்சாவியைஎடுத்து ஒவ்வொன்றாய் அந்தப் பூட்டில் போட ஆரம்பித்தான். முதலில் போட்ட சாவி சிறியதாக இருந்தது. இரண்டாவது சாவி முற்றும் சரியானதாக இல்லை. மூன்றாவது பூட்டின் துவாரத்தில் புகுந்து மாட்டிக்கொண்டதால் பிரயாசையோடு பிடுங்கியும் வெளியில் வரவில்லை. ஷாஹிது முன்னைவிட அதிக கோபாவேஷம் கொண்டவனாய் காயப்பட்ட புலியைப்போலாகி அந்த பூட்டின்மீது வேகமாய் ஒரு உதை கொடுத்தான். உடனே பூட்டு திறக்கப்பட்டுப் போயிற்று. நமது ஷாஹிது ஜெயவீரனைப் போலாயினான். அப் பெட்டிக்குள் பல கடிதங்களிருந்ததுடன் பத்திரிகை மாசிகளின் ‘கட்டிங்’ களும் ஒரு பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தது. உடனே ஷாஹிது அதி சீக்கிரமாக அக்கடிதங்களைப் படிக்க ஆரம்பித்தான். இதற்கிடையே வெளியில் யாரோ வருகிற சப்தம் கேட்டதால் அவன் பயந்தவனாய் வெளியில்வந்து பல பக்கங்களிலும் பார்க்கும்மோது யாரையும் காணவில்லை. ஆகவே, மறுபடியும் அந்த அறைக்குச் சென்று ஜன்னல்கள், தலைவாசல்கள் யாவற்றையும் அடைத்துக்கொண்டான். ஷாஹிது தனது கார்மானத்திற்காகவுள்ள கோட்டையை ஏற்படுத்திக்கொண்டானாகையால் கடிதங்களின் சில கட்டுகளை மேஜையின்மீது எடுத்து வைத்தவனாய் ஆறுதலோடு அக்கடிதங்களைப் படிக்கஆரம்பித்தான். இவ்வாறு கடிதங்களைப்பார்த்து வருவதற்கிடையே சிலகால் அவனுடைய கண்கள் சிவந்தும் முகத்தில் கோபாக்கினி கிளம்பியும் வந்ததுடன் இந்தியாவிலிருந்து வந்த கடிதத்தைப் பார்த்தவுடன் தன்னுணர்வற்றவனாய் ஏமாற்றம்! ஏமாற்றம்!! என்று கூக்குரலிட ஆரம்பித்தான். அக் கடிதங்கள் யாவற்றையும் விபரமாய் இங்கு குறிப்பிட இடந்தராதாகையால் அதிலுள்ள முக்கிய கடிதங்களின் சாராம்சத்தை மட்டும் குறிப்பிடுகிறோம்.

(தொடரும்)

பாடால் பெயின்பாம்

பாடால் பாம் "ஒரிஜினல் பார்முலா" ருஷியா தேசத்து பிரபல வைத்திய சாஸ்திரியான புளஸ்கோஷ்கி என்பவருடையதாகும்.

இந்த பாம் தலைவலி, சுளுக்கு, காயம்பிடிப்பு, இருமல், ஜலதோஷம், வீக்கம், கீழ்வாய் குடைச்சல், மார்வலி, கொசு, பூச்சிக்கடி, மூலம், சொரி சிரங்குகள், கபாலஜுரம் இவைகளைப் போக்குவதில் நிகரற்றதாகும்.

நூற்றுக்கான ரூபாய்களைச் செலவு செய்யக்கூடிய அநேக கொடிய வலிகளையும் குத்தல்களையும் குடைச்சல்களையும் சொற்ப செலவில் குணமாக்கி விடுவதால் இதன் பெருமையையும் குணத்தையும்பற்றி அதிகம் சொல்வது அனுவசியமாகும்.

ஒருமுறை பரீக்ஷித்தால் தானே தெரிந்துவிடும்.

புட்டி 1-க்கு விலை அணு 7.

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

எல்லா இடங்களிலும் ஏஜண்டு தேவை.

ஆசியாவுக்கு டிஸ்டிரிபியூட்டர்ஸ்:

A. M. அப்துல்லா சாஹிப் ஸன்ஸ்,

5, ஆண்டர்ஸன் தெருவு, சென்னை.

சத்தியப் பிரசாரம்

(காதியானிக் கண்டனம்)

ஏற்கனவே தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்து வந்த "ஹிஸ்புல்லாஹ்"க்களின் அருஞ்சேவைகளும் அந்த ஜில்லாவின் பற்பல பாகங்களிலும் மகா நாடுகள் கூட்டுவதற்கேற்பட்ட காரணங்களும் ஆங்கு நடைபெற்ற பிரசங்கங்களின் சுருக்கங்களும், காதியானிக் கொள்கையின் கெடுதிகளும், அது தென்னாட்டில் பரவிய வரலாறும், அதன் பிரசாரத்தை ஏற்று நடத்திவரும் தென்னாட்டு மிஷனரியின் விபரமும் விபரிக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தை ஒவ்வொருவரும் வாசித்துணர்வார்களாயின் தக்க பிரயோசன மேற்படுமென்பது திண்ணம். அதிலும் லாகூர் பார்ட்டியினர் நயவஞ்சகத்தனமாய் முஸ்லிம்களை ஏமாற்றிவரும் இதுகாலை இப்புத்தகம் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது அவசியமாகும். இப்புத்தகம் நண்பர்களுக்கு இனமாக விநியோகிக்கப்படுமாகையால் கீழ்காணும் அட்ரசுக்கு தபால் சிலவு 0—0—9 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்வார்களாக.

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43 - A, போஸ்டாபீஸ் தெருவு, ஜி. டி., மதராஸ்.

அல்பாராஹீனுற்றப் பானிய்யா

பிற்றத்தி அலல்காதியானிய்யா

இந்த அறபி நூல், காதியானிக் கொள்கைகளின் கெடுதிகளை எடுத்து விளக்கி, அது சம்மந்தமாய் நம் சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கம் எவ்வாறுன தீர்ப்பளித்திருக்கிற தென்னும் விபரத்தை குர்ஆன் ஹதீதுகளின் தக்க மேற் கோள்களுடன் அழகிய முறையில் எழுதப்பட்டிருக்கிறது. இதனை வாசிப் பது கொண்டு காதியானிகள் பிதற்றித்திரியும் சன்மார்க்க முரணனவைகள் சம்மந்தமாய் நமது சன்மார்க்கம் யாது தீர்ப்பளித்திருக்கிற தென்பது இனிது புலனுகும்.

இஃது சென்னை பிரபல முப்தீ மௌலானு மௌலவீ அல்ஹாஜ் முஹம்மது தமீம்சாஹிப் அவர்களால் எழுதப்பட்டு சென்னை, காயல்பட்ட ணம் முதலிய பற்பல ஊர்களின் உலமாக்களின் கையெழுத்துடனும், ஹிஸ் ஹோலினஸ் மௌலானு மௌலவீ அல்ஹாஜ் காரீ ஹாபிஸ் சுல்த்தானுல் வாயிஜ், முஹம்மது அப்துல் அலீம்சாஹிப் காதிரீ சித்தீகிமிரட்டி அவர்க ளின் மதிப்புரையுடனும் வெளிவந்திருக்கிறது.

இது சென்னை, புதுப்பேட்டை பிரபல வர்த்தகரும், தனவந்தருமான மெஸர்ஸ் A. P. M. செய்யித் இப்ராஹீம் சாஹிப் & பிரதர், அவர்களது பொருளுதவியைக் கொண்டு அச்சிடப் பட்டிருப்பதால் தபால் செலவுக்காக ஒரு அணு ஸ்டாம்பு அனுப்புவர்கட்கு ஒரு பிரதி அனுப்பிவைக்கப்படும்.

இச்சிறந்த 'ரிஸாலா' அறபி பாஷையி லிருப்பதால் அறபி தெரிந் தோர் இதனைபெற்று வாசித்துப் பயன் பெறுவார்களென்று எதிர்பார்க் கிறேம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008

மானேஜர்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43 - A. போஸ்டாபீஸ் தெருவு, ஜி. டி., மதராஸ்.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb. Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.